
புத்தம் புதிய பூங்காவன நாவல்!

# ரமணிசந்திரன்



அழகிய
மங்கையர்
நாவல்

ரூ.25/-

# தீக்குள் விரலை வைத்தேன்

உலகிலேயே மிக அதிகமானவர்கள் படிக்கும் தமிழ்நாவல்!

Uploaded by Naghu

"இதோ பார் மகிமா, நீ என்ன சொன்னாலும் சரிதான்... நீ போய், ஒருவரிடம் கை கட்டி வேலை செய்வதோ, கை நீட்டி அவர்களிடம் சம்பளம் வாங்குவதோ, நடக்காத காரியம். யாரிடமும், உன்னை வேலைக்கு நான் அனுப்பப் போவது, கிடையாது. அதை மனதில் வைத்துக் கொண்டு மேலே பேசு" என்றார், பராசரன் கண்டிப்பான குரலில்.

"ஆமாண்டா, செல்லம். நீ இன்னொருத்தரிடம் வேலைக்குப் போனால், அப்பாவின் கௌரவம் என்ன ஆகும்? முதலில் அதை நீ யோசிக்க வேண்டாமா? பிரபல தொழிலதிபர் பரன் சாருடைய மகள், யாரோ ஒருவரிடம் வேலை பார்க்கிறார் என்றால், அப்பாவுக்கு எத்தனை கேவலம்? ஒரே ஒருதரம் நன்றாக யோசித்துப் பார்த்தாய் என்றால், அதன் பிறகு இந்த வேலைக்குப் போகிற எண்ணமே, உனக்கு வராதுடா, கண்ணு" என்றாள், மகிமாவுடைய தாயார், தனலட்சுமி.



"முதலில் அதைச் சொல்லு, தனம். இவள், என் மகள்! இருந்திருந்து, என் மகள் இன்னொருவர் சொல்லுக்குப் பணிந்து உழைப்பது என்று நினைத்தாலே, மனம், உடம்பு எல்லாம் அவமானத்தில் கூசுகிறது. அதற்கு மேல், பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணும்போதோ, என் தோல் பற்றி எரிகிற மாதிரி இருக்கிறது. 'பரன் குரூப்' எத்தனை நிறுவனங்களுக்கு அதிபதி, நான்! என் ஒரே மகள் இதற்கு மேல், உனக்கு என்ன வேண்டும்? பார் மகிமா, பணம் வேண்டுமானால், அது எவ்வளவு என்றாலும், அப்பாவிடம் கேள்! தாராளமாக, நீ கேட்பதற்கு மேலேயே தருகிறேன். பொழுது போகவில்லையா? அவ்வப்போது, நம் நிறுவனங்களைப் போய் அதிகாரம் பண்ணிவிட்டு வா! அது பிடிக்கவில்லையா? வெளிநாட்டுக்குப் போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வா, அதுவும் பார்த்தாகி விட்டதே என்றால், மேலே பெரிய படிப்பாக எதையாவது படி. இதெல்லாம் ஒன்றுமே வேண்டாம் என்றால்... ஏய், உன்னிடம் அன்றைக்கே கேட்கச் சொன்னேனே, கேட்டாயா? என்னடி முழிக்கிறாய்? இன்னும் கேட்கவே இல்லையாடி கசமாலம்?" என்று மனைவியிடம், பாய்ந்தார் பராசரன்.

தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது என்று, மகிமாவுக்குப் புரிந்தது, தெளிவாக.

Uploaded by Naghu

சாதாரணமாக நல்ல தரமான மொழியில் பேசுகிறவர் ஆத்திரமடைந்து விட்டார் என்றால், முதலில் 'டீ' போடுவார், பிறகு, இந்தக் கசமாலம், புறம்போக்கு, பேமானி என்பன போன்ற வார்த்தைகள் பேச்சில் துள்ளி விளையாடத் தொடங்கிவிடும்.

பராசரன், ரொம்பவும் கீழான நிலையில் இருந்து, உழைத்து முன்னுக்கு வந்திருப்பார் என்பது, மகளின் ஊகம். உழைப்பின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று, மகிமாவுக்கு அது பற்றிப் பெருமைதான்.

எங்கேயோ, சின்னதான ஓர் ஓட்டு வீட்டில், ஆரஞ்சும் மஞ்சளுமாகப் பூக்கும் ஒற்றைச் செடிக்குத் தண்ணீர் ஊற்றிய நினைவு, மகிமாவுக்கு லேசாக உண்டு. அதேசமயம், அரண்மனை போல ஒரு மிகப் பெரிய வீட்டில், அதன் பரந்த தோட்டத்தில் ஓடி விளையாடியும் சில தோற்றங்கள் நினைவில் வருவதுண்டு.

ஆனால், இவை பற்றி ஏதேனும் கேட்டாலும், பெற்றோர் இருவரிடமிருந்தும் எந்தப் பதிலுமே வராது! கணவன் மனைவி இருவருமே, அன்றைய நிலையைப் பெரும் அவமானமாகக் கருதி, அது பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவே மாட்டார்கள்.

தூண்டித் துருவிக் கேட்டால், சீறி விழுவார்கள்.

"வேண்டாத உறவு என்று அடியோடு தொலைத்து தலை முழுகிவிட்டோம். மனதால் நினைத்தாலே, இழிநிலை ஒட்டிக் கொள்ளும் என்று மறந்து விட்டோம். எங்களுக்கே இல்லாத ஒட்டுறவு, உனக்கு எதற்கு? விட்டு ஒழி!" என்று அதட்டிப் பேசுவார்கள்.

அப்பா, அம்மா ஒருவரது பேச்சில் கூடக் கனிவு, பாசம் எதுவும் அணுவளவும் இராது!

ஆத்திரம், அருவருப்பு, கோபம் மட்டுமே!

நாளடைவில், பெற்றோரின் மனநிலையை மதித்து, மகியும், பழைய வாழ்வு பற்றிக் குடைவதை விட்டுவிட்டாள்.

ஆனால், எப்போதேனும், பராசரனின் மனநிலை சூடாகும்போது, பழைய வாழ்வின் அடையாளமான, இது போலச் சில வார்த்தைகள் பேச்சில் கலந்து வரும். அவருக்கு மிதமிஞ்சிய கோபம் என்பது, இதன் பொருள்.

ஆனால் இதற்கும் மருந்து உண்டு. இரண்டு வகை.

ஒன்று, அவரது விருப்பம் போல நடப்பது, அது இப்போது முடியாத காரியம்.

அடுத்தது, சமூகத்தில் அவரது நிலையை நினைவுறுத்துவது. அது நினைவு வரும்போது, இது தானாக மறைந்துவிடும்.

எனவே, ஏதோ திடுமென நினைவு வந்தது போன்ற பாவனையுடன் "அப்பா, அடுத்த வாரம் ஏதோ புத்தக வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டும் என்றீர்களே! அதற்கான உரையைத் தயார் செய்து விட்டீர்களா?" என்று விழிவிரித்து வினவினாள்.

ஆனால், கேட்கும்போதே, இந்த நேரத்தில் இதை நினைவுறுத்தியது பிசகு என்றும், அவளுக்குத் தோன்றிவிட்டது. சமூகத்தில் அவரது உயர்நிலை பாதிக்கப்பட்டு விடக்கூடும் என்பதால்தானே, அவளது விருப்பத்துக்கு அவர் அவ்வளவு எதிர்ப்புத் தெரிவிப்பதே!

அவளே வேறு, அதையே ஞாபகப்படுத்தினால், அப்புறம், அவளது காரியம் நிறைவேறுவது எப்படி? கிடைத்த வாய்ப்பை விட்டுவிடுவதற்கு, அவளுடைய தந்தை ஒன்றும் முட்டாள் இல்லையே!

மகிமா எண்ணியது இரண்டுமே நடந்தன.

அவள் விரும்பியது போல, பராசரன் பேச்சை திருத்திக் கொண்டார்.

அதே சமயம், அவள் அஞ்சியது போல, அவள் மேல் பாயவும் செய்தார்.

"பார்த்தாயா? புத்தக வெளியீட்டு விழாவுக்கு என்னைத் தலைமை தாங்கச் சொல்லுகிறார்கள். இரும்புத் தளவாடங்கள் உற்பத்தி



Uploaded by Naghu

செய்கிறவனுக்கும், இலக்கியத் தமிழுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? ஆனால், இரண்டுக்கும் முடிச்சுப் போட்டு, தலைமை தாங்குவதற்கு, என்னை அழைக்கிறார்கள்! ஏன் என்று நினைத்தாய்?.."

முதல் புத்தகம் வாங்கவென்று, நீங்கள் கொடுக்க இருக்கும் ஒரு கொழுத்த தொகைக்காகத்தான் என்று மனதுள் எண்ணியபோதும், அப்போதைய அமைதி கருதி, அதை வெளியே சொல்லாமல் மௌனம் காத்தாள் மகள். ஏற்கனவே, இந்த பூதத்தைக் கிளப்பி விட்டதே போதும்!

மகளிடமிருந்து பதிலை எதிர்பாராமலே, தந்தை, தானே ஒரு விளக்கமும் கொடுத்து, மேலே பேச்சையும் தொடர்ந்தார்.

"... இந்த ஊருக்குள் ஒரு பெரிய மனிதன் என்று பேர் எடுத்ததால்தான், எனக்கு இந்த மரியாதை? இவ்வளவு பணத்தைச் சம்பாதித்து வைத்துக் கொண்டு, இன்னமும் பெரிய அளவில் சம்பாதிக்கிறவன், மகளை வேலைக்கு அனுப்பினால், பார்க்கிறவர்கள், பழகியவர்கள் என்ன சொல்லுவார்கள், தெரியுமா? அது, உனக்குத் தெரியாது. எனவே, நானே சொல்லுகிறேன், கேள் இந்த 'பரன் குரூப்' முதலாளி, ஒருபேராசைக்காரன். தான் எவ்வளவு சம்பாதித்தாலும், மகளையும் வேலைக்கு அனுப்பி, அந்த ஊதியத்தை வாங்கி, அதையும் பெட்டியில் போட்டுக் கொள்ளுகிறான் என்பார்கள். அல்லது, பெற்றவனுக்கு எவ்வளவு பணம் இருந்து என்ன? பெண் உழைத்துக் கொடுத்தால்தான், சாப்பாடு என்பார்கள். எதற்காக மகிமா, ஊர் உலகில் கௌரவத்தோடு வாழும் என்னை இப்படிக் கேவலப்படுத்தப் பார்க்கிறாய்?" என்று ஆத்திரமாகக் கேட்டார், அவர். கூடவே வருத்தமாகவும்!

"நீங்கள் எல்லாம் சொல்லி முடித்து விட்டீர்களா, அப்பா?" என்று குரலில் சன்னச் சிரிப்புடன், மகிமா கேட்டாள்.

எல்...லாம் சொல்லி முடிப்பதா? பெண்ணை வெறித்து நோக்கினார் பராசரன்.

இவ்வளவு நேரம் பேசியதில், மகள் எதையுமே மனதில் வாங்கிக் கொள்ளவில்லை.

இவளிடம் கத்திப் பேசியும் பயனில்லை.

இவ்வளவு பக்கத்தில் நிற்கும் எனக்குத் தானேப்பா, கேட்க வேண்டும்? ஓஷோ சொல்வது போல, கோபத்தில் மனதளவில் விலகிப் போயிருப்பதாலேயே, தூர இருப்பது போல நினைத்து இப்படிக் கத்துக்கிறீர்கள், என்பாள்.

அதற்கு மேல் அவளிடம் கத்தினால், இன்னும் அசிங்கமாகிப் போகும். சற்றுத் தள்ளிப் போய் நின்றுகொண்டு "இப்போது கூடச்

சரியாகத்தான் கேட்கிறது., நான் இங்கே இருந்தே கேட்கிறேன், சொல்லுங்கள். அப்பா" என்பாள். அப்புறம், தனியே நின்று கிறுக்கனைப் போல கத்துகிற மாதிரி ஆகிவிடும்.

கடைசியாகப் பார்த்தால், மகள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்களாகத்தான் இருக்கும். அவளை மாற்றுவது, மிகவும் கடினம்!

ஆனால், என்ன ஒரு விஷயம் என்றால், மகிமா லேசில் முரண்டு பிடிப்பதில்லை. பரிவு, பாசத்தோடு, சிரிப்பும், விளையாட்டுமாக, சந்தோஷமான பெண்.

அவளோடு பிரச்சினை என்றால், தேவையற்ற மண்டையிடிதான்.

கல்லூரி விடுமுறையில் உல்லாசமாக வெளிநாட்டுச் சுற்றுலா போய் வா என்றால், மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்கு உதவி செய்யப் போகிறேன் என்று, அங்கே போய் உட்கார்ந்திருப்பாள். நன்கொடை என்று பெரிய தொகை வெட்ட வைப்பாள்.

நன்கொடை கொடுப்பது பற்றி, பராசரனுக்கு பிரச்சினை இல்லை. கொடுப்பது போல, இரண்டு ஃபோட்டோ எடுத்து, பத்திரிகைகளில் போட்டுக் கொடுத்து பணத்துக்கு விலையாக விளம்பரம் தேடிக் கொள்ளலாம்.

அதை விட்டு, அங்கேயே போய்க் கிடந்து மாடாய் உழைப்பது என்றால்?

ஃபோட்டோவுக்கு கூட, அவர் அருகில் மகிமா நிற்க மாட்டாள். அந்தப் பணியை, அவள் விளம்பரத்துக்காகச் செய்யவில்லையாம். அவளுடைய தோழியுடைய தாயார், வழக்கமாக இந்தப் பணியைச் செய்கிறவளுக்கு உடம்பு சரியில்லையாம். அந்த அம்மாளுக்கு உதவியாகத்தான் இந்த வேலையைச் செய்கிறாளாமே தவிர, தொண்டு மனப்பான்மையோடு அல்லவாம். எனவே, அந்த மாதிரிப் பொய் சொல்ல அவளால் முடியாதாம்! பராசரனுக்கும், தனலட்சுமிக்கும் பிறந்த மகள் பேசுகிற பேச்சா, இது?

ஒரு மூச்சு, அவளோடு போராடிவிட்டு, கடைசியாக, பராசரன் தம்பதிதான் வாயை மூடிக் கொள்ள வேண்டியிருந்தது!

ஒரு விதத்திலும் பயனற்ற அந்த வேலையை, அந்தத் தோழியுடைய அம்மா குணமாகி வந்து சேரும்வரை, செய்து முடித்துவிட்டுத்தான், பெண் அங்கிருந்து நகர்ந்தாள்.

பிழைக்கத் தெரியாத பித்துக்குளி!

இத்தனைக்கும் அஷ்டமா சித்திகளில், ஒன்றைப் பலவாக, பெருக்குகிற சித்தி, மகிமா சித்தி என்று, அவரும் மனைவியுமாக அகராதியில் அர்த்தம் பார்த்து, அந்தப் பெயரை தேர்ந்தெடுத்து, ஆசை



மகளுக்கு வைத்தார்கள்!

மகள், செல்வத்தை அப்படிப் பெருக்குவாளாம். அப்படி நினைத்து வைத்த பெயர்! பெயரைக் குறுக்கிக் கூப்பிட மாட்டார், பராசரன். அசந்து மறந்து, மனைவி அப்படி அழைத்தால், நன்றாகத் திட்டிவிடுவார். பெருக வேண்டிய செல்வமும், குறுகிவிட்டால்? முழுசாக அழைத்தால்தான், கூரையை ஓட்டை போட்டுக் கொண்டு பணம் கொட்டும்!

இன்னமும், அந்த நம்பிக்கை, பெற்றோருக்கு அடியோடு போய்விடவில்லை. படிப்பில் ரொம்பக் கெட்டிக்காரியான மகள், தொழிலில் சோடை போய்விட மாட்டாள்.

அலுவலகத்தில் அமர்ந்து, லட்சங்களிலும், கோடிகளிலும் லாபக் கணக்கைப் பார்க்கையில், தானாக, அதைப் பெருக்கும் பற்று பேயாகப் பிடித்துக் கொள்ளும்.

ஆனால், இந்த இடைப்பட்ட கிறுக்குத்தனங்களை மகிமா விட்டொழித்து விட்டால், அவளைப் பற்றிய கவலையை மகிமாவுடைய தந்தையும் முழுதாக விட்டொழிப்பார்!

ஆனால், அதற்குள்ளாக, இப்போது எவனிடமோ கை கட்டிச் சேவகம் செய்யப் போவதாக, அடுத்த குண்டைப் போட்டுக் கொண்டிருந்தாள் மகள்!

அதைப் பற்றிய இடைவிடாத விவாதம்தான், இரண்டு நாட்களாக வீட்டில் நடந்து கொண்டிருந்தது!

Uploaded by Naghu

பராசரனுக்கு, இன்னொரு சந்தேகம் வந்திருந்தது.

மகிமாவுக்கு, மேல் படிப்பில் ஈடுபாடு இல்லை. தையல், பாட்டு, சமையல் என்று அவைகளிலும், அவள் மனம் செல்லவில்லை!

வெகு சிலசமயங்களில் தோழிகளில் ஒருத்தி கொண்டு வந்திருந்தாள், மிகவும் சுவையாக இருந்தது, என்று செய்முறை கேட்டு வந்து சமையல்காரம்மாவைப் பாடாகப் படுத்துவாள்.

எல்லாமாகச் சேர்த்து யோசிக்கையில், மகளுக்குத் திருமணத்தில் நாட்டம் வந்திருக்குமோ என்ற ஐயம், பராசரனுக்கு வந்தது.

அதைத்தான், மகளிடம் ஜாடையாக விசாரிக்குமாறு அவர் மனைவியிடம் சொல்லியிருந்தார்.

ஆனால், தனலட்சுமி, பராசரனுடைய மதி மந்திரி! ஒரு நாளில், மனைவியிடம் எத்தனையோ விஷயங்களை அவ்வப்போது சொல்லி, பின்னர் நிதானமாக அவை பற்றி அவளோடு கலந்து ஆலோசிப்பது, அவரது வழக்கம். பல விதங்களில், இருவருக்கும் ஒத்த மனம்.

அவற்றுள், இப்போது கணவர் குறிப்பிடுவது எதையென்று கண்டாள், அந்தப் பெண்மணி?

சட்டென்று நினைவு வராமல் போகவே, மகள் மேல் பராசரனுக்கு இருந்த, அவளிடம் காட்ட முடியாமல், அடக்கப்பட்ட கோபத்தையெல்லாம், மனைவி தனலட்சுமியிடம் காட்டினார்!

"யாருடீ இவள்? உன் மகள்தானே? இதுவே ஆண்பிள்ளை என்றால், நான் பார்த்து வளர்த்திருப்பேன். ஆனால், பெண்ணைப் பெற்று போட்டதோடு, எல்லாம் தீர்ந்ததா? பெற்றவளாக இருந்து, அதை ஒழுங்காக வளர்க்க வேண்டாம்? இருபது வயதானால், மகளுக்குக் கௌரவமாக ஒரு கல்யாணம், காட்சி செய்து பார்க்கணுமே என்று, கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாம்? இப்ப உன் மகளுக்கு இருபத்தி இரண்டு வயது. இப்பவும், கலியாணத்தைப் பற்றிப் பேச என்று நான்தான் சொல்ல வேண்டியதாய் ஆயிற்று. சொன்ன பிறகானும், அதைச் செய்தாயா? அதுக்கும் மூளையில்லை! உன்னைக் கட்டிக்கொண்டு, இத்தனை வருஷமாக நான் படுகிற பாடு! தேவைதானா எனக்கு?"

சட்டென கையை உயர்த்தினாள் மகள்.

தந்தையின் பேச்சு நிற்கவும், "அதற்கு இப்போது என்ன செய்யலாம்ப்பா? என்னை ஏதாவது அனாதை இல்லத்தில் சேர்த்துவிட்டு, இனியேனும் ஒரு பையனைப் பெற்றுக் கொள்வது நல்லதில்லை?" என்று அமைதியாக கேட்டாள்.

Uploaded by Naghu

கணவன் மனைவியில் யார் அதிகம் அதிர்ந்தார்கள் என்று கணித்துச் சொல்ல முடியாது.

திகைத்து விழித்துவிட்டு, "என்னம்மா, இப்படிச் சொல்கிறே?" என்றுதான் இருவருமே கேட்டார்கள்.

"பின்னே என்னப்பா? நீங்கள் சொன்னதையெல்லாம் குறுக்கிடாமல் நான் கேட்டேன்தானே? சொல்லி முடித்து விட்டீர்களா என்று கேட்டுக் கொண்டேன். இனி என் கருத்தைச் சொல்லலாம் என்று தொடங்கப் போனேன். ஆனால், நீங்கள் என்னடா என்றால், என்னோடு பேசப் பிடிக்காத மாதிரி, நான் என்ன சொல்ல வருகிறேன் என்று கூடக் கேளாமல், அம்மாவிடம் பேசப் போய்விட்டீர்கள்? அது, பேச்சு கூட இல்லை! திட்டு! அம்மாவுக்கும், அம்மாவைத் திட்டுகிற மாதிரி எனக்கும் திட்டு! அம்மாவும், என்னமோ, என்னைப் பெற்றது, வளர்த்தது எல்லாம் தப்பு என்று ஒத்துக் கொள்கிற மாதிரி, பேசாமல் கேட்டுக்கொண்டு நிற்கிறார்கள். அப்படியானால், உங்கள் இருவருக்குமே என்னிடம் பேசப் பிடிக்கவில்லை என்றுதானே, அர்த்தம்?" என்று வருத்தத்துடன் கேட்டாள் மகள்.

"என்னிடம் பேசப் பிடிக்கவில்லையா? அல்லது, என்னையே



பிடிக்கவில்லையா?"

பெற்றவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இது எப்படி முடியப் போகிறது என்று, இருவருக்குமே புரிந்து போனது.

மகிமாவைப் பேச்சில் வெல்ல அவர்களால் முடியாது. அதட்டி, மிரட்டிப் பணிய வைப்பதும், அவளிடம் நடக்காது! பின்னே அவள் சொல்வதுதான் நடக்கப் போகிறதா?

ஆனால், இது பராசரனுக்குக் கௌரவப் பிரச்சினை! சும்மா விட முடியாது. இப்போதைக்கு, மகள் சொல்வதைச் சரி சரி என்று கேட்டிருந்துவிட்டு, மறு முனையில்... அவளுக்கு வேலை கொடுக்கிறவர்களை, ஏதோ ஒரு வகையில், அவர் கவனிக்க வேண்டும்!

மகிமா சொன்னதைக் குறுக்கிடாமல், முழுதாகக் கவனித்தபோது தான், அவர் அவ்வளவு கவலைப்பட்டிருக்கத் தேவையில்லை என்று, பராசரனுக்கு புரிந்தது.

இப்போதும் மகள் 'கூலிக்கு மாரடிக்கிற' கூட்டத்தில், ஒரேடியாகச் சேர்ந்து விடவில்லை.

செய்கிற உழைப்புக்கு ஊதியம் பெறுவது ஒன்றும் கேவலம் இல்லை என்று மகிமா என்னதான் சொன்னாலும், பராசரன் அதை ஒப்புவதாக இல்லை!

கை நீட்டிச் சம்பளம் வாங்கும்போதே, கொடுக்கிறவனின் கை உயர்ந்து, அவனது ஏவலுக்குப் பணிகிற நிலை மனரீதியாக வந்தே தீரும்.

பராசரனுடைய மகள், இன்னொருவரிடம் பணிபுரிவதா என்று அவர் தவித்தது அவசியம் இன்றி, இப்போதும் மகிமா செய்ய இருப்பது, சமூகத் தொண்டே!

அதுவும் அவருக்குப் பிடிக்காதுதான் என்றாலும், தொண்டு செய்வதில், ரொம்பவும் கௌரவக் குறைச்சல் கிடையாது என்று ஓர் ஆறுதல் அவருக்கு.

ஆனால், இந்த தொண்டில், ஒரு சிறு வேறுபாடு இருந்தது.

முன்பு, மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு அவள் செய்தது, தன்னார்வத் தொண்டு.

அவளைப் போலப் பலர் செய்தார்கள், ஆனால் பணிக்கு வருவதும், வராதிருப்பதும், அவரவரின் சொந்த விருப்பம் போலப் பலர் செய்தார்கள். இல்லம் அவர்களை கட்டுப்படுத்த இயலாது.

ஆனால், இங்கே இந்த முதியோர் இல்லத்தில், தொண்டு ஆர்வலர்களுக்கு ஒரு சிறு கட்டுப்பாடு இருந்தது. ஒரு தொகையை,

அவர்கள் பெற்றுக் கொண்டுதான் பணி புரியவேண்டும். அதன்மூலம், தொண்டு ஆர்வலர்கள் இல்லத்தின் பணியாளர்கள் ஆவார்கள். பணியும் ஒழுங்கு படுத்தப்பட்ட ஒன்று.

ஆனாலும் ஒரு பெரிய தொகையை நன்கொடையாகக் கொடுத்து, என் மகள் சம்பளத்துக்காக வேலை செய்யவில்லை. தொண்டு ஆர்வம்தான், என்று பறையறைந்து விடலாம்ப்பா" என்று கேலியாக உரைத்துக் கண்ணால் சிரித்தாள் மகள்.

ஆனாலும், பராசரனுக்கு மனதில் சிறிதும் அமைதி ஏற்பட மறுத்தது.

ஒருவேளை மகளின் இந்தப் பணியால், பிற்பாடு அவருக்குப் பெரும் தொல்லைகள், பேரிழப்புகள் ஏற்பட இருப்பதை, அவரது உள்ளுணர்வு புரிந்து கொண்டதோ, என்னவோ? அந்தக் காரணம் அப்போது தெரியாவிட்டாலும், மகள் இந்த வேலை பார்ப்பது மட்டும், அவருக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவே இல்லை!



## தீக்குள் விரலை வைத்தேன் 2

மகிமா பெற்றோரை மதிப்பவள்தான். அவர்களிடம் அன்பும் உள்ளவளே என்றாலும், அவளது விருப்பு வெறுப்புகளை பெற்றோருக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக மட்டுமாக மாற்றிக் கொள்ள மாட்டாள்.

ஏன் பிடிக்கவில்லை என்று காரணம் கேட்டு, அந்தக் காரணம் நியாயமானதாக இருந்தால், அதற்கு மதிப்புக் கொடுக்கத்தான் செய்வாள்.

ஆனால், வெறும் வறட்டுக் கௌரவம், வெற்று ஜம்பம், பந்தாவுக்கு, அவள் எதையும் செய்ய மாட்டாள். வீட்டில் அவ்வப்போது உரசல் நேர்வதன் காரணம், இவ்வகளுள் ஒன்றாகத்தான் இருக்கும்.

தனலட்சுமியைப் பொறுத்தவரையில், அவள் அதிகமாக லொடலொடப்பது இல்லை என்றாலும், கருத்தளவில், கணவனின் ஜெராக்ஸ்தான்.

எப்போதுமே, 'அப்பா சொல்படி செய்து விடும்மா' என்பது, அவளது தாரக மந்திரம்!

ஆயினும் தாய், தந்தை இருவருமே விரும்பவில்லை என்று அறிந்த பிறகும் மகிமா அந்த முதியோர் இல்லத்து வேலையை ஏற்றுச் செய்யத் தொடங்கினாள்.

இல்லத்து நிர்வாகிகளிடம், பராசரன் ரகசியமாகச் செய்ய முயன்ற



உடன்படிக்கைகள் எதுவும் பலன் தரவில்லை. அவர் தருவதாகச் சொன்ன பல லட்சம் ரூபாய்ப் பணத்துக்குக் கூட கொஞ்சமும் மதிப்பிருக்கவில்லை.

காரணம், மகிமா செய்த பணி, அந்த முதியோர் இல்லத்துக்கு உதவியாக இருந்ததோடு, இல்லத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டது அல்ல.

உலக அளவில் மனவளம் பற்றி ஆராய்ச்சி செய்து, பல்வேறு மன விகாரங்களுக்குத் தீர்வுகளைக் காண முயன்று கொண்டிருந்த நிறுவனம் ஒன்றுதான் அவளுக்கு, அங்கே வேலை கொடுத்திருந்தது.

சொந்த விருப்புடனோ, வேறு வழியின்றியோ இந்த இல்லத்திற்கு வந்து தங்கி இருந்த முதியோர்களுக்கு இங்கே வந்து தங்கும் எண்ணம் ஏன் வந்தது, இங்கே அவர்களுக்கு இப்போது இருக்கும் மனநிலை... இவை! பற்றி காரண காரியங்களை ஆராய்ந்து, அவள் அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

முதலில், அந்தப் பெரியவரின் தன்மை பற்றி, அவளே கணிக்க வேண்டும். அதன்பின், அவர்களோடு பேசிப் பழகி, அவர்களது மனம் நோகாதவாறு, அவளுக்குத் தேவையான விவரம் சேகரிக்க வேண்டும்.

கொஞ்சம் திறமைக்குச் சவால் விடுகிற வேலைதான். அவள் பள்ளிப் படிப்பு இறுதி பிளஸ் டூவில் விருப்பப் பாடமாக மனோதத்துவம் எடுத்து, அதில் நல்ல மதிப்பெண்களும் கிடைத்திருந்தது, மனிதவள மேம்பாட்டில் கிடைத்த பட்டம், இவைகளால்தான், அவளுக்கு அந்த வேலை கிடைத்ததே!

கூடவே, கம்ப்யூட்டர் பயிற்சி!

படித்த அனைத்தையும், புத்தகங்கள் மூலமாக மேலும் அவள் வளர்த்தும் இருந்ததால், பணியை அவளால் திறம்படவே செய்ய முடிந்தது. பணி மகிமாவுக்கு மிகவும் பிடித்தும் போனது.

தினமும், தங்களை ஒத்தவர்களையே பார்த்து, ஒரேவிதமான செயல்களையே செய்து பழகியிருந்த அவர்களுக்கு, இளமையும், உற்சாகமுமாக மகிமாவின் வருகை ஓர் இனிய மாற்றமாக அமைந்தது. எனவே, அவளிடம் ஆர்வமாகவே வந்துபேசிப் பழகினர்.

அவளுக்குத் தேவையான விவரங்களைத் தடையின்றி அளித்தனர்.

பொதுவாக அங்கிருந்த பலரும், பெற்ற பிள்ளைகளால் தாங்கள் வஞ்சிக்கப்பட்டு விட்டதாகவே கருதினர். பிள்ளைகளின் சின்ன வயதில், அவர்களைக் கண்ணும் கருத்துமாக இப்படிப் பார்த்தேன். அப்படி வளர்த்தேன்., எல்லாவற்றையும் கொடுத்தேன். ஆனால், இன்றைக்கு அவர்கள் என்னை கைவிட்டு விட்டார்கள் என்று அதே புலம்பல்.



Uploaded by Neghu

பணம், சொத்துக்களின் மதிப்பில் வேறுபாடு இருக்கலாம். தன்னை நியாயப்படுத்திக் கொள்வதில், வசனத்தை அப்படியே காப்பி எடுத்துக் கொடுத்து விடலாம். குரல்கள் மட்டுமே வேறு... அந்த அளவுக்கு ஒரே குரலாகப் பேசினார்கள்.

ஒருசிலரைப் பார்க்கையில், மகிமாவுக்குப் பரிதாபமாக இருக்கும். சிலரிடம் எரிச்சல் வரும்.

நம்மைச் சுற்றி இருக்கும் பறவை, விலங்குகளைப் பார்த்துப் பாடம் கற்றுக் கொள்ள வேண்டாமா? அவைகளும், தத்தம் குஞ்சு, குட்டிகளை பேணித்தான் வளர்க்கின்றன. 'உயிரைக் கொடுத்து' என்பார்களே, அந்தஅளவு பாடு பட்டுத்தான் வளர்கின்றன.

ஆனால், எந்தப் பறவை, அல்லது விலங்கு, தன்னைத் தானே பேணிக் கொள்கிற பருவம் வந்த பிறகும், தன் குஞ்சு குட்டிகளுக்குத் தன்னை வருத்தி உணவளித்துப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது? உன் பாட்டை நீயே பார் என்று விட்டு விடுவதில்லையா?

அதன் பிறகும், மனிதர்கள் மட்டும் ஏன் இப்படிப் பாசம், பாசம் என்று உருகித் தன்னை அழித்துக் கொள்கிறார்கள் என்று வருத்தப்படுவாள். அந்த உருக்கத்தில்தானே, தனக்கென்று மிச்சம் மீதி வையாமல், 'எல்லாவற்றையும்' அந்த பிள்ளைகளுக்குக் கொடுத்து விடுவது.!

அதேபோல, பறவை, விலங்குகள் எதுவும் தன் குஞ்சோ, குட்டியோ வந்து, தனக்கு உணவு ஊட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் கிடையாது. மனிதனும், அதைப் போன்று, தனக்கு வேண்டியதைப் பார்த்துக்கொண்டு இருக்கலாம்தானே என்று ஓர் எரிச்சலும் அவளுக்கு வரும்.

ஆனால், இருவகை உணர்ச்சிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டுத்தான், மகிமா தன் அறிக்கைகளைத் தயாரித்தாள். ஏனெனில், இது ஓர் ஆராய்ச்சிக் குறிப்பே தவிர, அவளது சொந்தக் கருத்துக்களை அறிவிக்கும் கட்டுரை அல்ல.

ஒவ்வொருவரிடமும் கலந்து பேசியவைகளைத் தொகுத்து, கம்ப்யூட்டரில் ஏற்றியவள் கடைசி ஆளாக திரு மணிவாசகத்தின் குறிப்புகளை கையில் எடுத்தாள்.

அதுவரை எடுத்த அத்தனையிலும் மாறுபட்ட குறிப்புகள் அவை. அப்படி மாறுபட்டிருந்ததால்தான் அவளே, அவற்றைத் தனியாக வைத்திருந்ததும்.

மணிவாசகத்தைப் பொறுத்தவரை, அவர் அங்கிருந்த மற்ற பெரியவர்கள் அளவு வயதானவர் அல்ல. அவளுடைய தந்தை பராசரன் ஐம்பதுகளின் இறுதியில் இருந்தால், அவர் ஐந்தாறு வயது அதிகமாக,



அறுபதுகளின் தொடக்கத்தில் இருந்தார். மனைவி இறந்த பின், அவராகத்தான் குடும்ப வாழ்வில் இருந்து விலகி, இங்கே வந்து சேர்ந்திருந்தாரே தவிர, அவளுடைய மக்கள், அவரை ஒதுக்கி விரட்டவில்லை.

வெளிநாட்டில் இருந்த பிள்ளைகளிடம், இனிப்போய் ஒட்டி, கணவன், மனைவி, பிள்ளைகளே குடும்பம் என்று பழகிவிட்ட அவர்களுக்குப் புதிய சுமையாகி விடக் கூடாது என்ற நோக்கம் அவருக்கு. தன் விருப்பம் இதுவே என்று மக்களுக்குத் தெரிவித்துவிட்டு, பணம் கட்டி, இந்த இல்லத்தில் வசிப்பவர் அவர். இயலாத பலருக்குத் தன்னால் ஆன உதவிகளை அவர் செய்வதை, மகிமா பலமுறை கவனித்திருக்கிறாள்.

எனவே, அவரிடம் சற்று வேறுபாடான விவரங்கள் கிடைக்கும் என்பது, முதலிலேயே அவளது ஊகம். அது பொய்யாகவுமில்லை. ஆனால், மற்றவர்களைப் போலவே, எதிலுமே நம்பிக்கை இல்லாதவராக அவர் பேசிய விதம், அவளுக்கு மிகுந்த வியப்பை அளித்தது.

ஆனால், அந்த மனநிலை அவருக்கு வரக் காரணமும் மாறுபட்டதாகவே இருந்தது.

மனைவி இறந்ததும், ஒருவருக்கு ஒருவராக அவளோடு பழகி வாழ்ந்த ஊரில் தொடர்ந்து வசிக்க அவரால் முடியவில்லை. எங்கு பார்த்தாலும் அவள் ஞாபகம்!

ஆனால், உடனே இந்த இல்லத்து வாழ்வை அவர் நினைத்தாரில்லை!

மாறாக, இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாக எட்டிப் பாராமலே விட்டிருந்த சொந்த மண்ணை நாடிச் சென்றார். அங்கே பழைய நட்பு, உறவுகளைப் புதுப்பித்துக்கொண்டு, அந்தப் பகுதியில் எங்கேனும் வசிக்கலாம் என்ற எண்ணம் அவருக்கு.

ஆனால், அங்கேஅவர் நினைத்தது நடக்கவில்லை.

அவரோடு நட்புடன் பழகிய யாரையும் அவர் சந்திக்கவே முடியவில்லை. பலர் புலம் பெயர்ந்து சென்றிருந்தார்கள். ஓரிருவரின் காலமே முடிந்திருந்தது.

அப்படியான ஒருவரின் முடிவுதான் மணிவாசகத்தை அதிர வைத்து, மனிதர்களிடம் உள்ள நம்பிக்கையையே குலைத்து, சொந்த மண்ணிலிருந்து அவரை விரட்டியடித்து, அறிந்தவர், தெரிந்தவரே இல்லாத இந்த முதியோர் இல்லத்தை நாடி வரவைத்தது என்றார் அவர்.

உயிரான மனைவியின் பிரிவை விடவும், அதிர வைத்ததா?

ஏற்க முடியாமல் வினவிய மகிமாவிடம் அவர் விளக்கிச் சொன்னார்.



Uploaded by Naghu

"என் மனைவியின் பிரிவு, இப்படித்தான் என்று சில காலமாக எங்களுக்கு இருவருக்குமே தெரிந்திருந்த ஒன்று. வேதனைதான். ஆனால், அதிர்ச்சி கிடையாது. ஆனால், அங்கே ... சங்க பூமியில் நான் பெருமதிப்பு வைத்திருந்த ஒரு கோடீசுவரக் குடும்பம் முழுவதுமே, ஒரு சூழ்ச்சிக்காரனின் வலையில் சிக்கி, அடியோடு அழிந்து போயிருந்தது. தூரத்து உறவுதான். ஆனால், என் தம்பி போலவே, சதாவை நான் எண்ணியிருந்தேன். அந்த கோடீசுவருடைய ஒரே மகன், அவன் வைத்தியம் பார்க்கப் பணம் இல்லாமல், உயிரை இழந்திருந்தான். ஆசைப்பட்டு அவன் மணந்தவளின் கதியும் அப்படித்தான் முடிந்திருக்கும் என்கிறார்கள், அங்கே இருக்கும் ஒரு சில பெரியவர்கள். ஏனெனில், கணவனின் முடிவுக்கு பிறகு, அவளை அங்கே யாரும் பார்த்ததே இல்லையாம். உன்னைப் போலவே அழகாக, ஒரு பூ மாதிரி இருப்பாள் அந்தப் பெண் மஞ்சு. உன் கண்களிலாவது, ஒரு தைரியம் தெரிகிறது. மான் போல மருண்ட பார்வை அவளுக்கு, கணவனையும் இழந்து, பாவம் என்ன கதி ஆனாளோ? ஊரை விட்டு, நகர்ப்புறம் போனதாகவும் ஒரு பேச்சு இருக்கிறது! அவளைப் போன்ற ஆதரவற்ற அழகியை நகரம் வாழ விடுமா, என்ன?" என்று வருத்தத்துடன் அரற்றினார் மணிவாசகம்.

என்னவோ முரண்பட்டது, மகிமாவுக்கு யோசித்து, "கோடீசுவரக் குடும்பம் என்கிறீர்கள். வைத்தியம் பார்க்கப் பணம் இல்லாமல் எப்படிப் போகும், சார்?" என்று கேட்டாள்.

அதுதான் சொன்னேனேம்மா, ஒரு சூழ்ச்சிக்காரனிடம் ஏமாந்து, எல்லாவற்றையும் பெரியவர் தாரை வார்த்துவிட்டார், என்றேனே"

"அதெப்படி சார், பெற்ற மகன் இருக்கும்போது, அவனுக்கு ஒன்றுமே இல்லாமல், யாரோ ஒருவனுக்குப் போய்... ஊகூம் இதில் ஏதோ இருக்கிறது!" என்றாள் மகிமா.

"இருந்தன. இரண்டு விஷயங்கள்! ஒன்று சதா காதல் திருமணம் செய்தது! அடுத்தது, ஒரு நச்சுப் பாம்பை அந்தப் பெரியப்பா நம்பி வளர்த்தது!

சுற்றி வளைத்த தூரத்துச் சொந்தம். எனக்குப் பெரியப்பா முறை பெரியப்பாவுடைய தாத்தா காலத்திலிருந்தே, நிறைய பணம். உண்மையாக பெரிய மனிதர்களும் கூட, பரம்பரைப் பணக்காரர்கள். பெரியப்பாதான், ஊர்ச் சொத்துக்களை விற்று, இங்கே எஸ்டேட், மில் வாங்கி, எல்லாம் பெரிய லாபம்! பெரிய வாழ்வு வாழ்ந்தார்கள். எல்லாம் அழிவதற்காகவே போல, என் பெரியப்பா ஒரு வேலைக்காரப் பயலைக் கூடவே ஊட்டி வளர்த்தார். மகனுக்கு இணையான படிப்பு,



துணிமணிகள், வாழ்க்கை வசதிகள் "என் கடவுளே!" என்று கூப்பிடுவான். கைகட்டி நிற்பான். அவ்வளவு பணிவாம். மகன் திருமணத்தில் நாட்டமில்லை என்று மறுத்தபோது, பெரியவர் கை காட்டிய பெண்ணை மறு பேச்சின்றி மணந்து, அவரது மனதைக் குளிர வைத்தான். அயராது உழைப்பதாகக் காட்டிக்கொண்டு, பெரியவரின் சொத்துக்களை கணக்செடுத்து, அவரை ஏமாற்றி, 'பவர்' பத்திரத்தில் கையெழுத்தை வாங்கி, ஒவ்வொன்றாக தன் பெயருக்கு மாற்றியிருக்கிறான். வெளியே தெரியாமலே, பத்திரப் பதிவே செய்திருக்கிறான்.

"ஒன்று நடக்க வேண்டும் என்று இருந்தால், அதற்குச் சாதகமாகவே பலதும் நடக்கும். அத்தனை ஆண்டுகளாக திருமணத்தை மறுத்துக் கொண்டிருந்த மகன், வேற்று இனத்துப் பெண்ணைக் காதலித்தான். தந்தைக்கும் மகனுக்கும் ஒரே சண்டை. நம் வில்லன், அழகாக ஊதி வளர்த்திருக்கிறான்.

"பெரிய தகராறில், சதாப் பையன் வீட்டை விட்டு வெளியேறி விட்டான். விரும்பிய அவளையே மணமும் செய்தான் என்கிறார்கள். ஆனால், முதலில் தந்தை இணங்கி வரும்வரை காத்திருக்கப் போவதாக என்னிடம் சொன்னான். அப்போது நானும் பெரியப்பாவிடம் அவனுக்காகப் பேசி, நன்றாகத் திட்டு வாங்கினேன். அடுத்து வடக்கே கிளம்பும்போது, பெரியப்பாவை நான் பார்க்கக்கூட, வில்லன் விடவில்லை.

அவன்தினமும் ஓதியதில், சதாவைப் பெரியப்பா, ரொம்பவும் வெறுத்துவிட்டார் போல, அவனும் காத்திருந்து காத்திருந்து அலுத்துப் போய், காதலித்தவளை மணந்து கொண்டான் என்று நினைக்கிறேன்,

"அந்த அசுரப் பயல் வாய்ப்பை விடாமல், சொத்துச் சுருட்டலில் முழு மூச்சுடன் இறங்கியிருக்கிறான். தடுப்பார் இல்லாத நிலை அல்லவா?

"காதல், கல்யாணம் என்று எதிரிட்டுப் போய் விட்டாலும், லேசு பாசாகக் கேள்விப்பட்டு மகன் வந்து சொன்னபோது, அவனிடம் உள்ள ஆத்திரத்தில், பெரியவர் இதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பணம் போய்விடுமோ என்று பயந்து வந்திருக்கிறான் என்று, மகனை மிக இளப்பமாகப் பேசினாராம். அவன் மகா ரோஷக்காரன்! உங்கள் பணமும் நீங்களும் எப்படியோ போங்கள் என்று, அவன் ஊரையே வெறுத்துச் சென்றுவிட்டான். போன இடத்தில் எப்படியோ வாழ்ந்து, செத்தும் போனானாம். அவன் ஊரை விட்டுப் போனதுமே, வேலைக்கார நாய், வேஷம் கலைத்து, பெரியவரையும், மனைவியையும் வீட்டை



Uploaded by Naghu

விட்டு நடுத்தெருவுக்கு விரட்டிவிட்டான். அவமானமும் அதிர்ச்சியுமாக, கூடவே வேதனையுமாக இரண்டுபேரும், விரைவிலேயே போய் விட்டார்களாம்.

"அதுவும் சாதகமே என்றாலும், விஷயம் தெரிந்த ஊரார் முன் நிமிர்ந்து நிற்க முடியாதில்லையா? அரை விலை, கால் விலைக்கு எல்லாவற்றையும் விற்று எடுத்துக்கொண்டு, அந்த ராட்சசனும் கண் காணாமல் போய்விட்டான். சும்மா வந்த திருட்டுப் பணம், என்ன வந்தாலும் லாபம்தானே?

"இருபது ஆண்டுகளுக்கு முன் அப்போதே, ஒன்றரைக் கோடிக்கு விற்றானாம். அவன் கெட்டிக்காரன். இப்படிச் சம்பாதித்ததை, எதிலும் வீணாக விட்டிருக்க மாட்டான். இன்று 'மல்டி மில்லியனர்' ஆக, சொகுசாக வாழ்ந்து கொண்டிருப்பான்.

"பெரியவரிடம் கைகட்டி நின்ற அப்போதே, வெளியே பெரிய பணக்காரன் மாதிரி, பெருமை காட்டுவான்! இப்போதும்...

"நிச்சயமாக பரம்பரைப் பணக்காரர்கள் போல நடித்து, அங்கே சூழ உள்ளோரை ஏமாற்றிக் கொண்டிருப்பான்! அது மட்டும் எப்படியும் உறுதி!

"இவன் இப்படி கொடிக் கட்டிப் பறக்க, அங்கே உண்மை உரிமைக்காரக் குடும்பமே அடியோடு அழிந்து விட்டது. இதற்குமேல், மனிதத்தன்மை, நீதி, நியாயம்... ஏன் கடவுளிடம் கூட, எனக்கு எப்படி நம்பிக்கை வரும், சொல்லு?"

மதகு திறந்த வெள்ளம் போல, மனதை வருத்திய அத்தனையையும் கொட்டி முடித்த பிறகே, மணிவாசகம் அமைதியானார்.

சில வினாடி அமைதிக்குப் பிறகு, "என்னம்மா, ரொம்பவும் போரடித்து விட்டேனா? மனதில், இந்த நெருப்பு, எப்போதும் கழன்று கொண்டே இருக்கிறதா? நீ கேட்டதும், எல்லாவற்றையும் கொட்டிவிட்டேன்" என்றார், ஓர் ஆழ்ந்த பெருமூச்சுடன்.

சற்று நேரம், மகிமா தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருந்துவிட்டு "இன்னமும் ஒத்துக்கொள்ள முடியவில்லை, அங்கிள். பரம்பரைப் பணக்காரர்கள் என்கிறீர்கள். தாத்தா சொத்தை விற்று தந்தை தொழில் செய்தார் என்றால், அதில் பேரனுக்கு உரிமை இருந்திருக்குமே! பேரன் அதைக் கேட்டு வாங்கியிருக்கலாம். எப்படியும் சொத்துக்களை வாங்குகிறவர்கள் பேரன் சம்மதம் கேளாமலா இருந்திருப்பார்கள்?" என்று மேலும் வினவினாள்.

"சொன்னேனேம்மா. சதா ரோஷக்காரன்., பணமும் வேண்டாம் நீங்களும் வேண்டாம் என்று போய்விட்டான் என்றேனே! சொத்து அரை



விலைக்கும், கால் விலைக்கும் கிடைக்கிறபோது, எத்தனை பேர் தூண்டித் துருவிக் கேட்பார்கள், சொல்லு"

நெற்றியை அழுத்தி விட்டவளுக்கு, இன்னமும் ஒத்துக்கொள்ள மனம் வரவில்லை! "ஆனாலும்... அப்படி ஒருவர் அவ்வளவு சொத்தையும், வேலைக்காரனிடம் ஏமாறுவது என்றால்.... என்னையே எடுத்துக் கொள்ளுங்கள், அங்கிள். நல்ல வசதியில் வளர்ந்த பெண்தான். ஆனால், தோட்டக்காரன் கொஞ்சம் பூக்களைப் பறித்து, ஓசைப்படாமல் விற்கிறான் என்றால், தொடர்ந்து கண்டு கொள்ளாமல் இருக்க, என்னால் முடியாது. அங்கே நிறையச் சொத்து என்றால், அதை நிர்வகித்தது உங்கள் பெரியப்பாவாகத்தானே இருக்க வேண்டும்? அதெப்படி, ஒரேடியாக அவருக்குத் தெரியாமல், உங்கள் வில்லனால் விற்க முடியும்? அதுவும், அவ்வளவையுமே?" என்று கேட்டாள்.

"விதி என்றால், அதுதான் போலும்! அவருக்கு ஒரு நோய் வந்து, கால்கள் வலுவிழந்து, சக்கர நாற்காலியோடு கட்டிப் போட்டுவிட்டது. கம்பீரமாக வளைய வந்தவருக்கு, இது மிகவும் குன்றலாகிவிட்டது. குறையை வெளியே காட்டக் கூடாது என்று, அறையை விட்டு வெளியே வருவது இல்லை! அசட்டு ரோஷம்! அதே சமயம், மகன் கதை வேறு, எல்லாமாகச் சேர, மனம் நொந்த நேரத்தில், வில்லனின் உருகல் நடிப்பு, ஆறுதல் மாதிரித் தோன்றி, நன்றாகச் சறுக்கி விழ வைத்திருக்கிறது என்று இப்போது புரிகிறது!" என்றார் அவர் யோசித்தவாறு.

மகிமா முகத்திலும் யோசனைதான். "ஆனால், நீங்கள் இவ்வளவு சொல்லியும் கொஞ்சம் குழப்பமாகத்தான் இருக்கிறது, அங்கிள்! முழுசாக மனதில் ஏற்க முடியவில்லை!" என்றாள் பெண்.

"தலையில் அடித்து சத்தியம் செய்தாலும், அப்படித்தான் இருக்கும்! ஏனென்றால், இப்போது சத்தியத்தின் மதிப்பே அவ்வளவு இறங்கிப் போய்விட்டது. நீ ஒன்று செய். கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழி. அங்கே போய், சங்கபூமி எஸ்டேட் என்று விசாரித்துப் பார். அங்கே இந்த குடும்பத்துக்கு ஒரு மில் கூட உண்டு என்றேனே. அதன் பெயர்கூட சங்கம் மில்ஸ்தான். அனேகமாகப் பெயரை மாற்றியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நீயே, நேரில் போய்ப் பார்த்தால்தான், உனக்குப் புரியும்" என்றார் மணிவாசகம்.

"செய்கிறேன் அங்கிள்" என்று அவரிடம் விடைபெற்றுச் சென்றாள் பெண்.

செய்யலாம். வேலை செய்யத் தொடங்கி, மூன்று மாதங்களாக விடுமுறையே எடுத்ததில்லை. அத்தோடு இல்லத்து முதியவர்களோடு பேட்டி மட்டுமின்றி, பல்வேறு உதவிகளையும், நேரம் காலம் பாராமல்



Uploaded by Naghu

மகிமா செய்வதுண்டு. அது நிறுவனத்துக்கும் தெரியும். அந்த உதவிகளே, அவர்களை மனம் விட்டுப்பேச வைத்தது என்பதும்!

எனவே, வெளியூர் செல்ல வேண்டியிருப்பதாகச் சொல்லி, ஒரு வாரமே விடுப்பு கேட்டாலும், அலுவலகத்தில் கொடுத்து விடுவார்கள்.

ஆனால், ஒரே ஒரு பெரியவரின் பேச்சு பற்றி ஆராய்வதற்காக, ஒரு பயணம் என்றால், அவளுக்குத்தான் மனம் ஒப்பவில்லை!

ஆனாலும், சும்மா இருக்கவும் அவளால் முடியவில்லை.

அங்கே கோவைக்குப் போய்த்தான் விவரம் அறிய வேண்டுமா? இருந்த இடத்திலிருந்தே உலக நடப்புகள் அத்தனையையும் அறிந்து சொல்லுகிற பெற்றோர், அவளுக்கு இருக்கிறார்களே, அவர்களுக்கு இந்த விவரமும் தெரிந்திருக்கக் கூடாதா, என்ன?

சற்று நிம்மதியுள்ளவளாக, எழுந்து சாப்பிடப் போனாள் மகிமா.

கடைசியாக அழைத்தபோதே, அன்னையின் குரலில் மாற்றம் தெரிந்தது என்பதும், ஒரு காரணம், தாயாருக்குக் கோபம் வரத் தொடங்கிவிட்டது என்பதன் அறிகுறி.

உணவறைக்குப் போனால், பாதி சாப்பிட்டு முடித்திருந்தார் தந்தை. தாயார் தொடங்கியிருந்தாள்.

அவளுக்காகக் காத்திருந்து, அலுத்துப் போய், உண்ணத் தொடங்கியிருக்கிறார்கள்!

Uploaded by Naghu

"சாரிப்பா! சாரிம்மா. இன்றைய வேலையைச் சீக்கிரமாக எழுதி முடித்துவிட்டு வந்து விடலாம் என்று நினைத்தேன்! எப்படியோ நேரமாகிவிட்டது!" என்று சிறு வருத்தம் காட்டி கூறியவாறே, தன் இடத்தில் அமர்ந்தாள் பெண்.

ஆனால், " நீ வேலை பார்க்கவே வேண்டாம் என நாங்கள் சொல்லுகிறோம். நீ தாமதத்துக்கு, அந்த வேலையையே சாக்கு சொல்கிறாய்? அழகுதான்! பேசாமல், அதைவிட்டுத் தொலை" என்று எரிச்சல் குறையாமலே பேசினாள் தனலட்சுமி.

'பாருங்கப்பா இந்த அம்மாவை' என்று தந்தையிடம் செல்லம் கொஞ்ச முடியாது. ஏனெனில், அன்னையை விட அதிகமான தீவிரத்துடன் வேலையை ராஜினாமா செய்யச் சொல்லிக் கொண்டிருக்கிறவர் பராசரன்.

வாய்ப்பை விடாமல், மீண்டும் பாட்டைத் தொடங்குவார்! எனவே, வெறுமனே அசடு வழிதலோடு, அந்தப் பேச்சை முடித்தாள் மகிமா.

தொடர்ந்து வேலை தொடர்பாக பேச முடியாது என்று உணர்ந்து, சற்று நேரம் ரசித்துச் சாப்பிடுவது போலப் பாவனை செய்தாள்.

அதுவே நல்லதாகி, உணவை முடிக்கப் போன பராசரன், "இன்னும்




**இனிமையான குடும்ப நாவல்கள்**

**லதா சேகர்**

| | |
|---|---|
| ➢ மனதைத் தொட்ட மயிலிறகே! | 60.00 |
| ➢ நெஞ்சில் விழுந்த நேசமே! | 110.00 |
| ➢ என்றாவது ஒருநாள் | 80.00 |
| ➢ புன்னகைப் பூக்கள் | 70.00 |
| ➢ எங்கேயும் எப்போதும் என்னில்! | 120.00 |

**அகிலா கோவிந்த்**

| | |
|---|---|
| ➢ மௌனமே காதலாக! | 65.00 |
| ➢ காதல் தேன் நிலா | 80.00 |

**மற்றும் அகிலா கோவிந்த எழுதிய 17 நூல்கள் அடங்கிய செட் ஒன்று ரூ.1375**

**மதிப்ரியா**

| | |
|---|---|
| ➢ கள்வெறி கொள்ளுதடி | 50.00 |
| ➢ காதல் எனும் காவியமே | 60.00 |

**அருணா ஹரி**

| | |
|---|---|
| ➢ திருமகள் தேடி வந்தாள் | 50.00 |
| ➢ வீணையடி நீ எனக்கு | 50.00 |

**பிரியா கார்த்திகேயன்**

| | |
|---|---|
| ➢ உனக்கும் எனக்குமா இடைவெளி | 70.00 |

**சசிகலா துரைராஜ்**

| | |
|---|---|
| ➢ விழிகளில் ஒரு கவிதை | 60.00 |
| ➢ உயிரின் உயிரே | 60.00 |

**மேகலா சித்ரவேல்**

| | |
|---|---|
| ➢ ஆனந்த ஆராதனை | 45.00 |
| ➢ கோடை மழை | 50.00 |
| ➢ முத்தழகி | 90.00 |
| ➢ சந்தனமலர் சிரித்தது | 60.00 |

வெளியீடு: **பிரியா நிலையம்**, சென்னை-14. தொடர்புக்கு: **94444 62284**

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு தரப்படும். VPP யும் உண்டு.

நூல் கிடைக்குமிடம் - M.O அனுப்ப வேண்டிய முகவரி

**இலக்குமி நிலையம்**

53, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14. போன்: 28133658

**கிடைக்குமிடங்கள்**

**சென்னை:** கார்த்திக் புத்தக நிலையம், போன்: 24958186 **கோவை:** விஜயா பதிப்பகம், போன்: 0422 - 2394614. கந்தசாமி பதிப்பகம், போன்: 0422-2214834. ஈரோடு: இந்து புக் பார்க், போன்: 0424 - 2267227, சி.கண்ணன் டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ், போன்: 9894715275, சேலம்: அஜந்தா புக் சென்டர், போன்: 2421755. நெல்லை: அருள் நந்தி சிவம், போன்: 0462 - 2339692 **மதுரை:** மல்லிகை புக் சென்டர், போன்: 0452 -2341739. **இராமநாதபுரம்:** அருணா நோட் புக் ஸ்டோர்ஸ், போன்: 228294. **திருச்சி:** தேவதி புக் ஸ்டால், போன்: 0431 - 2707708.

**இலங்கை: பூபால சிங்கம் புத்தக சாலை, 202 SEA ST, Colombo-11.**

ஒரு பாதி சப்பாத்தி வை, தனம். மெய்யாகவே, இந்தப் பனீர் பட்டாணிக் குருமா நன்றாகத்தான் இருக்கிறது" என்று சாப்பிடத் தொடங்கினார்.

செய்தது, சமையல்காரம்மாதான். என்றாலும் தன் நளபாகத்தைக் கணவர் புகழ்ந்த மாதிரி, தனலட்சுமியும் மகிழ்ந்து, புன்னகை செய்தாள்.

ஒரு வழியாக அவளது பணியில் இருந்து பெற்றோர் மனம் நல்லபடியாக விலகிறது என்று, மகிமாவுக்கும் நிம்மதியே.

இதுதான் சரியான நேரம் என்று எண்ணி "அப்பா, அம்மா உங்களுக்கு 'சங்கபூமி எஸ்டேட்' பற்றி ஏதாவது தெரியுமா?" என்று வினவினாள்.

அவள் சரியான நேரம் என்று கருதியது சரியில்லை போல, பராசரன், தனலட்சுமி இருவருக்குமே புரையேறிவிட்டது.

மகள் பேச்சில் கவனம் செலுத்தியதில், வாயில் உணவு இருப்பதை மறந்து காற்றையும் சேர்த்து இழுத்துவிட்டார்கள் போலும்!

அவசரமாக எழுந்து, இருவரின் தலையையும் தட்டிவிட்டுத் தண்ணீர் எடுத்துக் கொடுத்து, "என்ன ஒற்றுமை! என்ன ஒற்றுமை" என்று கேலி செய்தாள் மகள். "நீங்கள் இருவரும் பக்கத்திலேயே இருந்தால்கூட ஒருவரைப் பற்றி ஒருவர் நினைத்துக் கொண்டே இருப்பீர்களாக்கும்! ஆனாலும், இது ரொம்பவும் அதிகப்படியாகத் தெரியவில்லை?"

ஆனால் புரையேறியதால் எரிச்சலுற்றிருந்த பெற்றோர், இந்தக் கிண்டலை ரசிக்கவில்லை.

Uploaded by Naghu

தொண்டைக் கமறலில் கம்மிய குரலில், "இந்த அரைச் சப்பாத்தி அதிகப்படிதான் போல" என்றவாறு எழுந்துபோய் கையைக் கழுவினார் பராசரன்.

"எனக்கும் அப்படித்தான் தெரிகிறது" என்று தானும் கை கழுவப் போனாள் தனலட்சுமி.



## தீக்குள் விரலை வைத்தேன் 3

**தொ**ண்டையைச் செருமிக்கொண்டே இருந்த பராசரனும் தனலட்சுமியும் விரைவிலேயே படுக்கப் போய்விட, சங்கபூமி பற்றிய விவரம் கேட்பதற்காக, மகிமா மறுநாள் வரை காத்திருக்க நேர்ந்தது.

ஒருவழியாக, இருவரும் பத்திரிகை படித்தவண்ணம் காஃபி அருந்துகையில், மகிமா, பெற்றோரைப் பிடித்தாள். "இப்போது சொல்லுங்கள், அப்பா. சங்கபூமி எஸ்டேட் பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று மறுபடியும் கேட்டாள்.



பராசரனுக்கு, அந்தப் பெயரே விசித்திரமாக இருந்தது.

"என்னாது? சங்குபூமியா? அதை, இங்கே கேட்டால்? இங்கே சென்னையில் கிடையாது. தெற்குப் பக்கமாகக் கடற்கரை ஓரமாக, எங்கானும் சங்கு விளைகிற இடத்தில் போய்க் கேளு! ராமேஸ்வரம் பக்கத்திலே சங்கு விளைவதாகக் கேள்வி"

அவள் குறுக்கிட முயன்றதைக் கண்டுக்கொள்ளாமல், பத்திரிகையில் கவனத்தைப் பதித்தவாறு, சொல்லி முடித்தார் பராசரன்.

அவர் முடிக்கும் வரை காத்திருந்து "இது சங்கு பூமி இல்லைப்பா. 'சங்கபூமி' மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்களே, அந்த நினைவில், மதுரைக்காரர்கள் யாரோ, கோயம்புத்தூர் பக்கத்தில், இந்தப் பெயரில் தொழில் வைத்து வளர்த்திருக்கிறார்கள்! தொழில் என்றால் உங்களுக்குத் தெரியுமோ என்று கேட்டேன்ப்பா" என்று விளக்கினாள் மகள்.

"எங்கேம்மா? நம் தொழிலே சென்னையில் எனக்குச் சரியாக இருக்கிறது. சங்கு எங்கே, கங்கு எங்கே என்று எங்கே அலைவது? எதற்காக அலைவது? இந்தப் பெயர் இப்போதைக்கு, எனக்குக் கேள்விப்பட்ட மாதிரியே இல்லை. அதனால் ஆளைவிடு!" என்று மீண்டும் பத்திரிகையில் ஆழ முயன்றார் பராசரன்.

"இப்போது நசித்துப் போய்விட்டதாம், அப்பா. ஆனால், பத்திருபது ஆண்டுகளுக்கு முன்பாக, ரொம்பச் செழிப்பாக, ஓகோ என்று வாழ்ந்தார்கள் என்று மணிவாசகம் சார் சொன்னார். அதனால்தான்..." என்று தொடர்ந்தவளின் பேச்சில், ஆத்திரத்துடன் குறுக்கிட்டார் பராசரன்.

"மணிவாசகமா? அது யாரவன் மணி, மாலை என்று பேர் வைத்துக்கொண்டு? கிறுக்குப் பயல்! அப்போது சங்கு என்றாய்? அதைச்சொல்ல ஒரு மணியா? உருப்படியாகத் தங்கம், வெள்ளி என்று சொல்லப்படாது? இந்த அடி மட்டப் பெயரே நன்றாயில்லையே! இது போல ஆட்களோடு பழகக் கூடாது என்றுதான், உன்னிடம் இந்த வேலையே வேண்டாம் என்றேன்" என்றார், எரிச்சல் குரலில்.

"என்னப்பா நீங்கள்? தேவாரம், திருவாசகம் என்று அன்றைக்கு இலக்கிய மன்றக் கூட்டத்தில் அவ்வளவு அள்ளிவிட்டுவிட்டு, மணிவாசகம் என்கிற பெயரை மட்டம் என்கிறீர்களே? கொஞ்சம் கூட நன்றாகவே இல்லை!" என்றாள் சலுகையாகப் பேசினாள் மகள்.

ஆனால், அதுவும் அவருக்கு ஒப்புதலாக இருக்கவில்லை.

"அட, யாரடி இவள்? நாலு பேர் மதிக்க, அதற்குத் தோதாகப் பொய்யும் புளுகுமாக ஏதாவதும் அளப்பதுதான். அதை வாழ்க்கையிலுமா

பிடித்துக்கொண்டு தொங்குவது? காசு பணம் இல்லாமல், இதுபோல இல்லங்களில் வந்து கிடக்கும் கண்ட வெறும் பயல்கள் ஏதோ உளறிக் கொட்டினார்கள் என்று, இனியும் என்னிடம் வந்து குத்திப் பிடுங்கினால், எனக்கு பொல்லாத கோபம் வரும்! போ, போய் இந்தக் கிராக்குத்தனத்தை விட்டுவிட்டு, உருப்படியாக வேறே வேலை ஏதானும் இருந்தால், அதைப் போய் செய்!"

தந்தையின் பேச்சில் தெறித்த சில வார்த்தைகள், மெய்யாகவே அவருக்கு மனம் அமைதியாக இல்லை, ஏதோ எரிச்சல், சங்கடம் என்று காட்டின.

ஏற்றாற்போல, "அப்பாவுக்குத் தொழிலிலே ஏதோ பிரச்சினை நீ வேறு, எந்த நாயோ, ஏதோ உளறியது என்று, அவருக்கே தெரியாத விஷயங்களை எல்லாம் கேட்டுத் தொந்திரவு செய்யலாமா? தெரிந்தால், அதை உன்னிடம், அப்போது சொல்லியிருக்க மாட்டோமா? எவனோ பிழைப்புக்கு வழியற்ற ஊரான் உளறினான் என்று, உனக்கும்தான் இந்த வீணான வேலை எதற்கு? கண்ட கிழடு கட்டைகளோடு பழகி, நீயும் வேண்டாததை யோசித்து மனதைக் குழப்பிக் கொள்ளாதே. பண்டிகைக்குப் புது மாதிரியான டிசைனர் பட்டு நிறைய வந்திருக்கிறதாம். நம்ம காஞ்சிப் பட்டுக்காரர் நேற்று ஃபோன் பண்ணினார். உன் சினேகிதிகளோடு போய்ப் பார்த்துவிட்டு வருகிறாயா? அப்படியே, எனக்கு ஏற்றதாக ஏதேனும் இருக்கிறதா என்று பார்!" என்றாள் தனலட்சுமி.

Uploaded by Naghu

ஆகத் தாயாருக்கும், இது உபயோகமற்ற வேலையாகத்தான் தெரிகிறது.

தந்தை தடை செய்தார் என்றால், தாயார் திசை திருப்ப முயல்கிறாள்!

இது பயனற்ற பணி என்றால், பட்டுச்சேலை பார்ப்பது மட்டும், உலக மகா உபயோகமான வேலையாக்கும்? ஆளுக்கு ஒரு பக்கம் விரட்டுகிறார்களே!

இதில், கண்ட ஊரான், நாய் என்று இளப்பம் வேறு! பணமோ, புகழோ, ஏதோ ஒரு சொந்த லாபம் தராத எதுவும், இவர்களுக்கு மட்டம்தான்! ஆனால் இவைகளுக்காக மட்டுமாக வாழுவதா?

ஊகூம், மகிமாவால் முடியாது.

இருக்கட்டும். இனி இவர்களிடம் கேட்டுப் பயனில்லை. அவளாகத்தான் கண்டுபிடிக்க வேண்டும்!

எப்படி? கோவைப் பக்கம் தலை வைத்துப் படுப்பதாகச் சொன்னால்கூட, அன்னை, தந்தை இருவருமே அனுமதி மறுக்கக் கூடும். அந்த சங்கபூமி பற்றிய வீண் வேலையைக் கைப் பணம்



செலவழித்துத் தொடர்கிறாள் என்று ஆத்திரப்படுவார்கள்!

மகளுக்கு நகை, துணி என்றால் எத்தனை லட்சங்கள் செலவு செய்யவும் தயாராக இருக்கும் பராசரன் தம்பதியிடமிருந்து, இது போன்ற செலவுகளுக்கு, எப்போதும் பைசா பெயராது. பாங்க்கில், அவள் பெயரில் இருக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு போகலாம்தான். ஆனால், ஒரேடியாகப் பெற்றோரை எதிரிட்டுக்கொண்டு செல்ல மனமற்று, மகிமாவும் பொறுமை காத்தாள்.

அத்தோடு, ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முந்தைய கதை. அதைப் பற்றி அறிய, ஓரிரு மாதங்களே தாமதம் ஆனாலும் ஒன்றும் பிரச்சினையில்லை.

எனவே, சங்க பூமி பற்றிய பேச்சையே மகிமா விட்டுவிட, இடையிலே அடித்த அலை தானாகத் திரும்பிப் போய்விட்டது என்று எண்ணிப் பெற்றோரும் நிம்மதி அடைய, வாழ்க்கை பழைய மாதிரியே இயல்பாகச் செல்லலாயிற்று.

ஆனால், தனக்குத்தானே பொறுமையை அறிவுறுத்திக்கொண்டு மனதால் வழியைத் தேடிக்கொண்டே இருந்தவளுக்கு அந்த வழி, விரைவிலேயே கண் முன்னே கதவைத் தட்டிக்கொண்டு வந்து நின்றது.

கல்லூரித் தோழி ஒருத்தி, தனக்குத் திருமணம் என்று மகிமாவை அழைக்க வந்தாள். அவளைப் பராசரன், தனலட்சுமிக்கும் நன்றாகத் தெரியும். முக்கியமாக, அவளுடைய தந்தையை, தொழில் துறையில் முக்கிய புள்ளி என்பதால், இந்தப் பழக்கத்துக்கு, அவர்கள் தடை விதித்தது இல்லை.

இப்போது திருமணப் பத்திரிகையோடு வந்த பெண்ணையும், தனலட்சுமி மிகவும் சந்தோஷமாகவே வரவேற்றாள். வெளியூரில் திருமணம், எல்லா சினேகிதிகளையும் அவளே அழைத்துப் போய், திருப்பியும் அனுப்பி விடுவதாகச் சொன்னதற்கும், சம்மதமே தெரிவித்தாள்.

இதுபோன்ற பெரிய குடும்பங்களோடு பழகுவது மகளுக்கு நல்லதுதானே, என்ற எண்ணம்!

ஆனால், மணமகன் வீட்டாரின் வேண்டுதலின்படி, கோவை ஈச்சனாரிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் வைத்துத் திருமணம் என்று மணப்பெண் மல்லிகா கூறவும், தனலட்சமி சற்று தயங்கி, தன் மகளைப் பார்த்தாள்.

ஆனால், அதைக் கவனியாதது, பத்திரிகையில் இருந்த மணமக்களின் படங்களைக் காட்டி, தோழியை அழைத்து, மகிமா ஏதோ கேலி பேசுவதைக் காணவும், தாயின் முகம் கனிந்தது.

அதற்கு மேல் தடை சொல்லாது, தலையாட்டி விட்டாள்.

இரவில் தூக்கம் வராமல், ஏதோ மனம் குழம்பியது.

சற்று நேரம், இப்புறமும், அப்புறமுமாகப் படுத்துப் பார்த்துவிட்டு, எழுந்து ஹாலுக்கு வந்தால், பெற்றோரின் படுக்கையறையில் ஏதோ பேச்சு, விவாதம் போலக் கேட்டது.

ஒட்டுக் கேட்பது தப்பு. அதுவும், பெற்றோரின் தனிமைப்பேச்சைக் கவனிப்பது, பெரும் பிழை என்று எண்ணி, மறுபடியும் தன் அறைக்கே திரும்பிச் சென்று படுத்தாள் மகிமா.

எப்போதுமே அவளுக்கு இது ஒரு பிரச்சினை. பெற்றோர் இயல்புக்கு மாறாகவோ, நியாயத்துக்குப் புறம்பாகவோ நடந்தால், அவளுக்குச் சரியாகத் தூக்கம் வராது!

பெருமளவு, அதைக் கண்டு கொள்ளாதது போல நடந்து கொள்ள, அவள் பழகி விட்டிருந்தாலும், இது போன்ற சில்லறைத் தொல்லைகள், அவளுக்கு நேரத்தான் செய்தன. தூக்கம் கெடுதல், பசியின்மை போன்ற வேதனைகள் நேருவது பழக்கமே.

இன்றும் அதேதான்.

கோவை ஈச்சநாரி கோயில் என்றதுமே, தாயின் உடல் விறைப்பதை மகிமா உடனே உணர்ந்து கொண்டதோடு, அதற்கு ஏற்ப அப்போது நடிக்கவும் செய்தாள்.

ஆனால், நெஞ்சின் ஒரு மூலையில் குத்திக்கொண்டே நெருஞ்சி முள், உறுத்தலை விடவில்லை!

Uploaded by Naghu

இவ்வளவு தூரமா, பணத்துக்கு மதிப்புக் கொடுப்பது?

இவர்களுக்கு புத்தி புகட்டுவதற்காகவே, காசு பணமே இல்லாத ஒரு பரம ஏழையை மணந்து கஷ்டப்பட வேண்டும் என்று நினைத்துவிட்டு, சேச்சே என்ன அசட்டு யோசனை என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

ஒன்று திருமணம் என்பது, மனப்பூர்வமான அன்பில் நடப்பதாக இருக்க வேண்டும்.

அடுத்தது, அவளுடைய பெற்றோரின் தவறுக்கு, அவள் ஏன் கஷ்டப்பட வேண்டும்? முகத்தின் மேல் உள்ள கோபத்தில் மூக்கை வெட்டிக் கொள்ளும் பைத்தியக்காரத்தனத்தை அவள் செய்வதா?

இல்லை, இவர்களை மாற்றுவதற்கு, வேறு வழியைத்தான் தேடியாக வேண்டும்.

இப்போதைக்கு, அவள் அவளாக இருந்து, மற்றவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டும். முதலில் மணிவாசகம் சொன்ன இந்தக் குடும்பத்தைப் பற்றி விசாரித்துக் கண்டுபிடித்து,



தேவைப்பட்டால் அங்கிருந்து தொடங்கலாம்!

வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்தாலும் 'சங்கபூமி' குடும்பத்தினரைப் பற்றி, மகிமா கணமும் மறந்தாளில்லை!

திருமண வீட்டிலேயே, சில முதியவர்களை அணுகி, அவர்களோடு பேச்சுக் கொடுத்து, சங்கபூமி பற்றி விசாரித்துப் பார்த்தாள் அவள். பெரும்பாலும், திருப்பூர், கோவையையே சார்ந்தவர்களாக இருந்த அவர்களுக்குச் சங்கபூமி பற்றி, எதுவும் தெரியவில்லை!

சங்கம் என்ற மில் பற்றி கேட்டபோதும், கிட்டத்தட்ட அப்படித்தான்.

அதிக வயதான ஒரே ஒருவர் மட்டும், வெகுவாக யோசித்துவிட்டு, "ஒரு காலத்தில், அப்படி ஒரு மில் இருந்ததாக ஞாபகம், அம்மணி. ஆனால், அது போல சற்று நசித்துப்போன மில்களை பெரிய நிறுவனம் ஒன்று, வாங்கி, முழுசாகத் தன்னோடு இணைத்து, ரொம்பவும் பெரிதாக்கிக் கொண்டதாக கேள்வி" என்றார்.

ஆனால், அந்தப் பெரிய நிறுவனம் பற்றியும், அவருக்கும் எதுவும் தெரியவில்லை.

"எல்லாமே, இப்போது ரொம்பப் பெரிய அளவில் தொழில் நடத்துவதாகக் காட்டுவதில்தான் வெற்றி என்கிற மாயையில், வர்த்தக உலகம் இருக்கிறதாமே! நாலுபேர் கூட்டு சேர்ந்தாவது, பிரம்மாண்டமாக நடத்துவதாகக் கதை பரப்பி விடுகிறார்கள். இதில், எதில் அந்த மில் இணைந்தது என்று நினைவில்லையே..." யோசித்துவிட்டு எதிர்மறையாகத் தலையாட்டினார் பெரியவர்.

வயதின் மறதி!

"எதற்கும், சற்று யோசித்துப் பாருங்களேன், அங்கிள். நினைவு வந்தால், தயவு பண்ணி என்னிடம் சொல்கிறீர்களா?" என்று கெஞ்சுதலாகக் கேட்டு அவரது தலையாட்டலைப் பதிலாகப் பெற்றுக் கொண்டு போனாள் அவள்.

ஆனால், மாலை வரவேற்பின்போது, அவரைத் தேடிப் பிடித்து, விவரம் ஏதாவது நினைவு வந்ததா என்று அவள் கேட்டபோது, "ஆனால் அந்த விவரம் உனக்கு எதற்கு?" என்று பதில் கேள்வி கேட்டார் அந்தப் பெரியவர்.

எதற்கு என்று என்ன விளக்கம் சொல்லுவது?

சற்று யோசித்துவிட்டு "சென்னையில் ஒருவர், இந்த சங்கபூமி பற்றி கூறினார், அங்கிள். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் ஓகோ என்று வாழ்ந்த குடும்பமாம். பழைய உறவைப் புதுப்பிக்கலாம் என்று வந்தால், ஒருவரைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டார். அவர் முதியோர் இல்லத்தில் இருப்பவர். அதே இல்லத்தில்தான் நான்

பணி செய்வதும், நான் கோவை வருகிறேன் என்றதும், என்னையும் விசாரித்துப் பார்க்கச் சொன்னார். அதுதான் கேட்டேன்" என்று ஏதோ ஒரு வகையில் உண்மையும் கற்பனையுமாக கலந்து, அவருக்குப் பதில் உரைத்தாள் மகிமா.

"அதுவா விஷயம் அம்மிணி" என்று கேட்டு எங்கோ பார்த்தார், அந்தப் பெரியவர்.

அதற்குள் அவள் பரபரத்தாள் "அந்த சங்கபூமி அவர்களது மில் சங்கம்... எதைப் பற்றிய விவரமேனும் உங்களுக்குத் தெரிய வந்ததா அங்கிள்? தெரிந்தால் சொல்லுங்களேன்! நான் போய்ப் நா....ன் செ...சென்னைக்குப் போய், அந்த அங்கிளிடம் சொல்ல வேண்டும்"

பெரியவருக்குச் சிரிப்பு வந்தது.

"அந்த அங்கிள், இந்த அங்கிள்! எத்தனை அங்கிள்!" என்று குலுங்கிச் சிரித்தார் அவர் "பேசாமல், சார் என்று ஆங்கிலத்திலோ, ஐயா என்று தமிழிலோ கூப்பிட வேண்டியதுதானே?"

நல்ல கேள்விதான்!

முறுவலோடு பதில் சொன்னாள் மகிமா "செய்யலாம், ஆனால் சார், ஐயாவை விட அங்கிள் என்றால், ஏதோ சொந்தம் போலத் தெரிகிறது, அல்லவா? உடனே மாமா, சித்தப்பா, பெரியப்பா எனலாமே என்று கேட்காதீர்கள். என்னைப் போல ஒரு பெண், எல்லோரையும் மாமா என்று அழைத்துவிட முடியாது. அவருக்கு வளர்ந்த மகன் இருந்தால், அசுசியாகிப் போகும். பெரியப்பா, சித்தப்பா என்றால், அப்பாவுக்கு மூப்பா இளமையா என்று யோசிக்க வேண்டும். பொத்தாம் பொதுவாக இப்படி அங்கிள் என்பது எவ்வளவு வசதி பாருங்கள்"

"அப்படிப்போடு அறுவாளை!" என்று அவர் மீண்டும் நகைக்க, அவளும் 'உறுமீன் நாடும்' கொக்காய் அவர் சிரித்து முடிக்கும் வரை காத்திருந்துவிட்டு "சொல்லுங்கள் அங்கிள், சங்கபூமி பற்றி உங்களுக்கு என்ன தெரியும்" என்று அதிலேயே நின்றாள்.

"ஒன்றும் தெரியாதே!" என்று இரு கைகளையும், விரித்துக் காட்டினார் முதியவர்.

அவள் ஏமாற்றத்துடன் நோக்கவும், "ஆனால் நீ விசாரிக்கிற ஆளே, தப்பில்லை? ஏதேனும் டிராவல்ஸ் ஆட்களில் கேட்டால், அவர்கள் இங்கும் அங்குமாக ஊரெல்லாம் ஓட்டிப் பழகியிருப்பார்கள். காலப் போக்கில், அந்த எஸ்டேட் சின்னதாகி இருந்தாலும், அவர்களுக்குத் தெரியாமல் இராது! நீ தங்கியிருக்கும் ஹோட்டல் முகப்பிலேயே கூட, ஒரு 'ட்ராவல்ஸ்' இருக்கிறது. அவர்களிடம் விசாரித்துப் பார்" என்றார் பெரியவர்.



ஏதோ தோன்ற "நான் எந்த ஹோட்டலில் தங்கியிருக்கிறேன் என்று, உங்களுக்கு எப்படித் தெரியும், அங்கிள்?" என்று வியப்புடன் வினவினாள் மகிமா.

"அ..அது... வந்து... எ..எப்படித் தெரியும்? ஓ.. நினைவு வந்து விட்டது. அது என்னம்மிணி, பெரிய பிரம்ம ரகசியமா? கலியாண மாப்பிள்ளையும், பெண்ணும் இன்றைய கதாநாயகன், கதாநாயகிதானே? அவர்கள் என்ன செய்கிறார்கள், ஏது செய்கிறார்கள் என்பதுதான் முக்கிய தலைப்பு! அதுவும், மணப்பெண்ணோடு அவளுடைய அழகான சினேகிதிகள் சில பேர் வந்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் என்ன செய்கிறார்கள், எங்கே இருக்கிறார்கள் என்பது, தலையாய செய்தி! அப்படி ஏதோ பேச்சில் காதில் விழுந்ததுதான். நீ தங்கியிருப்பது, 'வெண்ணிலா' நட்சத்திர ஹோட்டலில்தானே? மல்லிகாவுடைய சினேகிதிகளுக்கு அங்கேதான் ரூம் போட்டிருப்பதாகக் கேள்வி. கேள்விப்பட்டது, சரிதானா, இல்லையா?" என்று அவளையே கேள்வி கேட்டார் பெரியவர்.

புன்னகை அரும்பியபோதும், "ரொம்பவே சரிதான், அங்கிள். ஆனால், எங்களுக்கே தெரியாமல் மற்றவர்கள் கண்ணில், வாயில் விழுந்து, எழுந்து கொண்டிருக்கிறோம் என்று எனக்குத் தெரியாது! அறியாமல் நாங்கள் தப்புத் தவறாக எதுவும் செய்துவிடவில்லையே?" என்று சற்று அக்கறையுடனேயே வினவினாள் பெண்.

"சேச்சே! அப்படி எதுவும் இல்லை, அம்மிணி. மல்லிகாவுக்கு இங்கே நல்ல பெயர். அவளுடைய சினேகிதப் பசங்களும், சொக்கத் தங்கம் என்றுதான் பேச்சு" என்று பெரியவர் கூற, மகிமாவுக்கு நிம்மதியாக இருந்தது.

வந்த இடத்தில், தோழியான கல்யாணப் பெண்ணுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கி விடக்கூடாது அல்லவா? ஒருவரைப் பற்றித் தெரிந்துகொள்ள, அவரது நட்பு வட்டத்தைக் கவனித்தால் போதும் என்பார்களே! நல்லவேளையாக நல்ல பேச்சுதான் என்கிறார் பெரியவர்!

அந்தப் பெரியவர் சொன்னது, அவளுக்குச் சரியாகவே தோன்றியது. மற்றவர்கள் அறியாத இடங்கள், ஊரெல்லாம் சுற்றி, ஆட்டோ, டாக்சி ஓட்டுகிறவர்களுக்குத் தெரிந்திருக்க, அதிக சாத்தியம் இருக்கிறது.

அத்தோடு, ஒரு பெரிய ஹோட்டலில் போக்குவரத்து நிறுவனம் வைத்திருப்பவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருப்பார்கள். தப்பு நடந்தால், ஹோட்டல் பெயரும் கெட்டுவிடும் என்பதால், ஹோட்டல்காரர்களே நல்ல நம்பிக்கையானவர்களுக்குத்தான் இடம் கொடுத்திருப்பார்கள். எனவே, அங்கிருந்து ஒரு டாக்சியை ஏற்பாடு

Uploaded by Naghu

செய்துகொண்டு செல்வது பாதுகாப்பானதாகவும் இருக்கும்!

மகிமா முடிவு செய்துவிட்டாள்!

மறுநாள் இயற்கை காட்சிகளை ரசிக்கவென்று ஊட்டிக்கும் ஆன்மீகத் தேடலாக 'ஈஷா' சென்டருக்கும், நீர் விளையாட்டுக்காக மேட்டுப்பாளையத்துக்குமாக மற்ற தோழிகள் கிளம்பியபோது, அவள் சங்கபூமியைத் தேடிப் புறப்பட்டாள்.



## தீக்குள் விரலை வைத்தேன் 4

சங்கபூமியைத் தேடி, மகிமா தனியாகத்தான் சென்றாள்.

இருக்கிறதோ, இல்லையோ? இருந்தாலுமே, அது என்ன நிலையில் இருக்கிறதோ என்று எதுவுமே தெரியாத ஓர் இடத்துக்குத் தன் தோழிகளை வற்புறுத்தி அழைத்துச்செல்ல, மகிமாவுக்கு விருப்பம் இல்லை.

மணிவாசகம் சொன்ன அளவில் பார்த்தால், எப்படியும் அது நல்ல நிலையில் இருப்பதிற்கில்லை!

அவளுக்குத்தான், என்ன போரடித்தாலும் தாங்கிக்கொள்ள 'மணிவாசகம் சாருக்கு விவரம் சொல்ல வேண்டும்' என்பதாக ஒரு காரணம் இருந்தது. இதற்காக, மற்றவர்களையும் கஷ்டப்படுத்துவானேன்? அவர்கள் விருப்பம் போல சந்தோஷமாக சுற்றிவிட்டு வரட்டுமே!

அவையெல்லாம், அவள் ஏற்கனவே பார்த்த இடங்கள் வேறு.

தன்னந்தனியே செல்வது பற்றியும், மகிமாவுக்கு எந்த விதமான சங்கடமும் தோன்றவில்லை.

சும்மாவே, ஹோட்டல் வளாகத்துக்குள் இருப்பது, பாதுகாப்பு என்று எண்ணியவளுக்கு அந்த 'டிராவல்' நிறுவனமும் அதே ஹோட்டலைச் சேர்ந்ததே என்று அறிந்ததும், கொஞ்ச நஞ்சம் இருந்த தயக்கமும் விட்டுப் போயிற்று. அவளை மறுபடியும் ஹோட்டல் அறைக்கு, நல்லபடியாகக் கூட்டி வந்து சேர்ப்பது, டாக்சி டிரைவரின் பொறுப்பாயிற்றே!

இல்லாவிட்டால், ஹோட்டல் நிர்வாகம், அந்த வண்டியோட்டியைப் பீஸ், பீசாக்கி விடாதா?

அத்தோடு, அவளும் ஓரளவு பாதுகாப்புக் கலைகள் அறிந்தவளே.

இப்போது, சங்கபூமி என்று ஒன்று இருக்க வேண்டும். அவ்வளவே! இருந்தால், எப்படியும் கண்டுபிடித்து பார்த்துவிடலாம். ஆனால் அது



Uploaded by Naghu

பற்றிய விவரமே யாருக்கும் தெரியாதபோது...

எதற்கும் இருக்கட்டும் என்று 'சங்கபூமி' பற்றித் தெரிந்திருந்தால், அங்கே சென்று வருவதற்கு, நம்பிக்கையான ஒரு வண்டியோட்டி வேண்டும் என்று, அன்று காலையில் திருமணத்துக்காக கிளம்பும்போதே, ஹோட்டல் நிர்வாகியிடம் மகிமா தெரிவித்திருந்தாள்.

சங்கபூமி பற்றி, அவருக்குத் தெளிவாக எதுவும் தெரியாவிட்டாலும், நிறுவனத்தைச் சார்ந்த வண்டிகளை ஓட்டும் எல்லோருமே நம்பிக்கையானவர்களே என்றும், அவர்களிலும் சிறந்த ஒருவனை ஏற்பாடு செய்து தருவதாகவும் அவர் உறுதியளித்திருந்தார்.

இரவில் கணக்கு முடிக்க வரும் காரோட்டிகளிடம் சங்கபூமி பற்றி விசாரிப்பதாகவும், அவளிடம் உறுதி கூறியிருந்தார்!

அன்றிரவு வரவேற்பு வைபவத்தை முடித்துக்கொண்டு, திரும்பி வரும்போது, அவள் இருந்த அறைக்குள் மணியடித்தது.

பெற்றோர் செல்லுக்குத்தான் தொடர்பு கொள்வார்கள்.

அவசரமாக ஓடிச்சென்று ரிசீவரை எடுத்துக் கேட்டால், சரியான காரோட்டி கிடைத்துவிட்டார் என்றார் நிர்வாகி. அதாவது, சங்கபூமி இருக்குமிடம் தெரிந்த காரோட்டி!

மகிமாவுக்கு ஒரே மகிழ்ச்சி! அவளுக்கிருந்த உற்சாகத்தில், அப்போதே காரோட்டியிடம் பேசலாமா என்று வினவினாள்.

"அது... நேரமாகி விட்டதால், போய்த் தூங்கிவிட்டு காலையில், புத்துணர்ச்சியோடு வரவேண்டும் என்று அனுப்பி வைத்து விட்டுத்தான், உங்களிடம் நான் விஷயத்தைச் சொன்னதே! அதனால், அவரைக் காலையிலேயே பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று நிர்வாகி சொன்னதும், அவளுக்குச் சரியாகத்தான் தோன்றியது.

எப்படியோ? சங்கபூமி பற்றி, ஏதோ விவரம் தெரியப்போகிறது.

அந்த விவரம், மணிவாசகம் கூறியது போலவே இருக்கப் போகிறது என்றும், மகிமாவுக்கு எண்ணம்தான். மற்றபடி, அந்த எஸ்டேட் நல்ல நிலையில் இருந்திருந்தால், அது பற்றிப் பலருக்குமே, தெரிந்திருக்குமே! அது பற்றி விவரம் அறிய, இந்தப் பாடு பட நேர்ந்திருக்காதே!

வயிற்றுக்குள் ஏதோ இழுத்துப் பிடிப்பது போல, அவளது உடலில் ஓர் இறுக்கம் பரவியது.

அவ்வப்போது பெற்றோர் தடுப்பதும் சரிதான். அவளுக்குச் சம்பந்தமே இல்லாத ஒன்று பற்றி, அவள் இப்படி மனம் படபடத்து சங்கடப்படுவது, தேவையில்லைதானே?

பயின்றிருந்த பல்வேறு பயிற்சிகளின் மூலம், பிடிவாதமாக உடம்பை தளர விட்டுக்கொண்டு, மெல்ல உறங்கிப் போனாள் மகிமா.

மறுநாள் காரை ஓட்டி வந்தவனைப் பார்க்கையில் மகிமாவுக்கு உள்ளூர வியப்புடன் கூடிய சிறு ஏமாற்றம் உண்டாயிற்று!

ஏமாற்றத்தின் காரணம் எளிதாகப் புரிந்தது. வயதானவருக்கு, சங்கபூமியின் விவரம், அதிகமாகத் தெரிந்திருக்கும், அதைத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணம்!

ஆனால், இந்த காரோட்டி வயதானவராக இருப்பார் என்று அவள் ஏன் எதிர்பார்த்தாள்?

முன்னதன் காரணமேதான், இதற்கும். சங்கபூமி பற்றி அறிய வேண்டுமானால், அதைப்பற்றி அறிந்திருக்கக் கூடிய அளவு, குறைந்தது ஐம்பது, அறுபது வயதேனும் ஆனவராக இருப்பார் என்று கணக்கிட்டு, அப்படி ஒருவரை எதிர்பார்த்திருக்கிறது, மனது.

இன்னும்... இன்னும் ஏதோ! அதை, அப்புறமாக யோசித்துக் கொள்ளலாம்.

ஆனால், இப்போது இருபதுகளின் கடைசிகளில் இருக்கும் ஒருவன், கார்ச் சாவியோடு வந்து நிற்கிறானே என்று, மகிமா சற்று நிலைகுலைந்து போனாள்.

இவனை எங்கோ பார்த்திருக்கிறாளோ? ஆனால், எங்கே?

சற்று யோசித்துவிட்டு, இல்லை என்ற முடிவுக்கு வந்தாள்.

ஏனென்றால், இந்த முகம் எளிதில் மறக்கக் கூடியது அல்ல!

காரில் அமர்ந்து, கார் ஓடத் தொடங்கிச் சற்று தூரம் சென்றபின், "சங்கபூமி' பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்? வீட்டுப் பெரியவர்கள் சொன்னார்களா?" என்று மகிமா பேச்சுக் கொடுத்தாள்.

சில நிமிஷங்களோ, அல்லது சில வினாடிகளோதான், அவன் பதில் சொல்லவில்லை.

விட்டுவிடலாமா என்று ஒரு தரம் மகிமா யோசித்தாள்.

ஆனால், அதெப்படி விடுவது? இந்த டாக்சி, அவளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது. இதற்குப் பணம் கொடுக்கப் போவது அவள். அதிலும் முக்கியமாக, இந்த சங்கபூமிக்காவே, இந்தக் காரோட்டியை ஏற்பாடு செய்ததும், பின்னே அவன் பதில் சொல்லித்தானே ஆக வேண்டும்?

மகிமா என்ன, அவனது சொந்த விஷயத்தையா கேட்டாள்?

குரலில் சற்று அழுத்தம் கொடுத்து, "சங்கபூமி பற்றி எப்படித் தெரியும் என்று கேட்டேன்" என்று மறுபடியும் கேட்டாள், அவள்.

இப்போதும், ஒருகணம் தாமதித்தே என்றாலும், பதில் சொன்னான், அந்தக் காரோட்டி "ஊர் தாண்டியதும் சொல்கிறேன். இந்தப் போக்குவரத்தினூடே பேசுவது கடினம்"



வெளியே பார்த்தவளுக்கு, அவனது காரணத்தை ஒத்துக்கொள்ள முடியவில்லை. அகலமான பெரிய சாலை! முறையற்று ஓடாமல், வண்டிகளும் ஒழுங்காகத்தான் சென்று கொண்டிருந்தன. சென்னையில், அவளே காரை ஓட்டிச் செல்கிறவள் என்பதால், பேச்சைத் தவிர்ப்பதற்காகச் சும்மாவேனும் வாயில் வந்ததைச் சொல்கிறானோ என்று சந்தேகம் வந்தது.

அத்தோடு, பேச்சிலோ, குரலிலோ, மரியாதையுமில்லை!

திரும்பிச் சென்றதும், அவனைப் பற்றி புகார் சொன்னால் என்ன ஆகும் என்ற பயமே இல்லையே!

புகார் பற்றி எண்ணும்போதுதான், இவனது பெயரையே கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்பது, மகிமாவுக்கு நினைவு வந்தது. போக்குவரத்து குறைந்ததும், முதலில் அதைத் 'தெரிந்து கொள்ள வேண்டும்!

அதே நினைவாக, ஊர் எல்லையைத் தாண்டியதும், "உன் பெயர் என்ன?" என்று வினவினாள்.

அவனது உடல் லேசாக விறைப்பது, பின்னிருந்து பார்க்கத் தெரிந்தது.

ஏன் என்று அவள் யோசிக்கையில், "வேண்டுமானால் முன்னே வந்து உட்கார்ந்து கொள், பேசுவது தெளிவாகக் கேட்கும்" என்றான் அவன்.

உட்கார்ந்து 'கொள்!' 'வெண்ணிலா' நிறுவனத்தில் காரோட்டிகளுக்கு மரியாதையே கற்றுக் கொடுக்கவில்லையே! புகார் செய்துதான் ஆக வேண்டும் போல!

"பரவாயில்லை. கொஞ்சம் உரக்கப் பேசினால் கேட்கும். சொல்லு"

"என்ன சொல்ல வேண்டும்?"

பொறுமையை இழுத்துப் பிடித்து "நிறைய. முதலில் உன் பெயர்" என்றாள் மகிமா.

தலைக்கு மேலே கண்ணாடியைச் சரி செய்தபடி "நிகிலன்" என்றான் அவன்.

நல்ல பெயர்தான் என்று நினைத்ததைச் சொல்லாமல், "அப்புறம் சங்கபூமி" என்றாள் அவள்.

"சங்கபூமிக்கு என்ன?"

எரிச்சலை அடக்குவது, அவளுக்குக் கடினமாக இருந்தது. எனவே, ஓரளவு பொறுமையிழந்த குரலில், "அதை நீங்... நீதான் சொல்ல வேண்டும். சங்கபூமி பற்றி அறிந்தவன் என்பதால் மட்டுமே, நீ எனக்குக் காரோட்டியாக வந்திருக்கிறாய். அதனால், பிகு பண்ணாமல் சங்கபூமி



Uploaded by Naghu

பற்றி அறிந்ததைச் சொல்லு" என்று சற்று அதிகாரமாகவே மகிமா உத்தரவிட்டாள்.

"சங்கபூமி என்று அழைக்கப்பட்ட இடத்திற்கு, உன்னை அழைத்துப் போய் கூட்டி வருவதுதான் எனக்கு இடப்பட்ட பணி. அதற்கு மேல், ஏதேனும் என்றால், எனக்கு தனியாகப் பணம் தர வேண்டியிருக்கும்" என்றான் அவன் கறார் குரலில்.

அதிர்ச்சியாக இருந்தது, மகிமாவுக்கு.

எப்படி இது? நம்பிக்கையான நிறுவனத்தில் பணி செய்கிற ஒருவன், இப்படி தனியாகப் பணம் கேட்பானா? மற்றதெல்லாம் பெரிய குற்றமில்லை, போகிறது என்று விட்டுவிட்டாலும், இதைப் பற்றி நிறுவனத்தில் சொல்லியே தீர வேண்டும்.

அல்லது, இவனுக்கு ஓர் எச்சரிக்கை கொடுத்துவிட்டு, அப்புறம் வேண்டுமானால், மேலே நடவடிக்கை எடுக்கலாமே.

இந்த எண்ணத்தோடு "இதோ பார் நிகிலன், இந்த மாதிரி நிறுவனத்து வாடிக்கையாளர்களிடம் தனியாகப் பணம் கேட்பது தப்பு என்று தெரியுமா? நிர்வாகத்திடம் சொன்னால், வேலையை விட்டே விரட்டி விடுவார்கள். அதனால், இதுபோல தப்பு இனி செய்யாதே!" என்று காரோட்டி நிகிலனுக்குப் புத்திமதி சொன்னாள் மகிமா.

சட்டென வாய் விட்டுச் சிரித்தான் நிகிலன்.

"எ...என்ன?"

"இல்லை... இதற்கே புகாரா என்று நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது" என்றான் அவன்.

"புரியவில்லை. நீ அப்படிப் பணம் கேட்பது தப்புதானே?"

"அது தப்பாக இருக்கலாம். ஆனால் அதை விடப் பெரிய தப்புகள், எத்தனையோ இருக்கின்றனவே, அவையெல்லாம் விட்டுவிட்டு, இதற்குப் போய் அலட்டுகிறாயே, அதுதான் வேடிக்கையாக இருக்கிறது" என்றான் அந்த நிகிலன்.

"திருட்டு, கொள்ளை... ஏன், கொலை கூடக் குற்றப் பட்டியலில் உண்டுதான. ஆனால், நீ செய்த தப்பு எதுவோ, அதற்காகத்தானே புகார் பண்ண முடியும்?"

"ஓகோ, அப்படியா விஷயம்?" என்று காரைப் பக்கவாட்டுச் சந்து ஒன்றில் திருப்பினான் நிகிலன்.

"இங்கே, எங்கே?" என்று மகிமா கேட்பது காதிலேயே விழாதது போலக் காரை மிகவும் வேகமாகச் செலுத்திச் சென்றான், அவன்.

ஓரளவு நன்றாகப் பராமரிக்கப்பட்ட சாலையே என்றாலும், சிறு ஒற்றை வாகனப் பாதைதான், அது. எதிரே இன்னொரு வண்டி வந்தால்,



ஒருபுறம் சரளைக் கல்லில் இறங்கித்தான் செல்ல வேண்டும்.

அது மட்டுமல்ல. முன்னும் பின்னும் சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை, வேறு வாகனம் என்ன, ஆள் நடமாட்டம் கூட இருக்கவில்லை என்று காணவும், மகிமாவுக்கு சற்று மனம் கலங்கியது.

"இதோ பார் நிகிலன், சற்றுக் காரை நிறுத்து. நிறுத்து என்கிறேன்!" என்று இயன்றவரை அதட்டலாக உத்தரவிட்டாள், அவள்.

திடீர் பிரேக் போட்டு, அவன் வண்டியை நிறுத்திய விதத்தில், அவள் துள்ளி, முன் சீட்டில் போய் முட்டிக்கொண்டு, சமாளித்து நிமிர்ந்தாள்.

கோபமாக, "என்ன இது?" அவள் கேட்க, தோளைக் குலுக்கி "நீதானே நிறுத்தச் சொன்னாய்?" என்று பதில் கேள்வி கேட்டான், நிகிலன்.

இன்னமும் மூச்சு வாங்கிக் கொண்டு "அதற்காக இப்படியா?" என்று கேட்டாள் மகிமா.

"காதுக்குள் வந்து, காட்டுக் கத்தலாகக் கத்தினால், இப்படித்தான் நிறுத்த நேரும்!"

மொத்தமாக இவனைப் பற்றி புகார் பட்டியல் கொடுக்க வேண்டியதுதான். அல்லது, இனியேனும் ஒழுங்காக நடந்து கொண்டால் பாவம் என்று விட்டுவிடலாம். எப்படியும் யாரோ ஒருவன் பிழைப்பை, அவள் கெடுப்பானேன்?

சற்று அமைதியடைந்தவளாக, "இதுதான் சங்கபூமிக்குச் செல்லும் வழியா?" என்று, முயன்று வருவித்த இயல்பான குரலில், நிகிலனிடம் கேட்டாள்.

"இல்லை!"

மீண்டும் துள்ளிப் போய் முன் இருக்கையில் முட்டாத குறை அவளுக்கு! அந்த அளவுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

"பி...பின்னே, இங்கே எதற்காக வந்தோம்?"

காரை விட்டு இறங்கி, அவளையும் இறங்கும்படி சைகை செய்தான் அவன்.

தயக்கத்துடனேயே அவள் இறங்கவும், சொன்னான்.

"புகார் செய்வதற்குப் பெரிய குற்றம் இல்லையே என்று நீ வருத்தப்பட்ட மாதிரி இருந்தது. பக்கவாகப் புகார் செய்வதற்குத் தகுந்தபடி பெரிய தப்பு ஏதேனும் செய்யலாம் என்றுதான், இடையூறு செய்ய ஆளில்லாத இந்த இடத்துக்கு கூட்டி வந்தேன்" என்றான் நிகிலன்.

குரலில் ஏளனம் தெறித்ததோ?



Uploaded by Naghu

சட்டெனப் பின்னடைந்து "ஏய்... என்ன மிரட்டுகிறாயா? அங்கேயே நில். என்னை யார் என்று உனக்குத் தெரியாது. தற்காப்பு கலை பயின்றவள் நான். என்னை நெருங்கினால், அடித்துப் போட்டுவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு போய் விடுவேன். நீதான் கஷ்டப்படுவாய்! தெரிந்துகொள்!" என்று மகிமா, அவனை எச்சரித்தாள்.

மெய்யாகவே, இப்படி நடக்க வேண்டுமா என்ற எரிச்சல் தவிர, அவள் ஒன்றும் ரொம்பப் பயந்துவிடவில்லை.

அவளுக்கே உரிய துடிப்பில், பாதுகாப்புக் கலைகள் கொஞ்சம் தெரிந்துதான் வைத்திருந்தாள் அவள். அதைப் பயன்படுத்தி, இரண்டு பேரை, நன்கு மொத்தியும் இருக்கிறாள்.

எச்சரிக்கைக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்றால், வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

அவனை எச்சரித்ததோடு மட்டுமின்றி, கவனத்தோடு மகிமா நின்ற போர்க்கோலத்தைப் பார்த்ததும், நிகிலன் வாய்விட்டு நகைத்தான்.

ஏளனமாகத்தான்!

அவள் யோசனையோடு பார்க்கவும், "ஆமாம், பெண்ணே, நீ சொன்ன பாதுகாப்புக் கலைகளை, நீ மட்டும்தான் பயில முடியுமா? கராத்தேயில் கறுப்பு பெல்ட் வாங்கியவனை, உன்னால் என்ன செய்ய முடியும்?" என்று நிகிலன் கேட்டபோது, பதில் சொல்ல முடியாமல் விழித்தவள் அவள்தான்.

ஏனெனில், அவள் பிரவுன் பெல்ட் கூட முயன்றதில்லை. பயின்றதே, தேவைக்கு அதிகம் என்கிற மிதப்பு! உடன் பயின்ற மற்ற பெண்களை விடச் சிறப்பாகச் செய்ததால் வந்த அசட்டுத் தைரியம்!

அதிலேயே இருமுறை முயன்று வெற்றியும் கண்டதால், தன் திறமை பற்றிய இறுமாப்பும் கூட!

ஆனால், இப்படி ஓர் இக்கட்டு வரக்கூடும் என்று, அவள் கனவிலும் கருதவில்லையே! கருதியிருந்தால், அதை முழுமையாகக் கற்றுத் தேர்ந்திருப்பாளே!

ஆனால், இந்த மறுகலால், இப்போது எந்த விதப் பயனும் இல்லை.

அனிச்சை போலத் தானாகக் கால்கள் பின்னடையப் பின்னடையத் தொடர்ந்து அவளை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த வில்லனை நிறுத்தியாக வேண்டும்.

சும்மா ஓர் அழகான பெண்ணைக் கண்டதும், பின் விளைவை யோசியாது முயன்று பார்க்க எண்ணும் இவனது மூளையைத்தான் யோசிக்க வைக்க வேண்டும்.

கவனமாகப் பின்னடைந்தபடியே "இதோ பார் நிகிலன், இந்தக்



காரில் நான் ஏறியதும், காரை நீ ஓட்டி வந்ததும், ஹோட்டலில் எல்... நிறையப் பேருக்குத் தெரியும். அதிலும், இந்த சங்கபூமிக்காக, நிர்வாகியே ஏற்பாடு செய்து கொடுத்த காரோட்டி, நீ. பத்திரமாக நான் ஹோட்டலுக்குத் திரும்பிப் போய் சேராவிட்டால், உன் கதி என்ன ஆகும் என்று யோசித்துப் பார்!" என்று அவனைத் தேக்க முயன்றாள்.

"அதெல்லாம் என் பிரச்சினை. அதை பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? தேவையில்லை" என்று, அதே வேகத்தில் முன்னேறிக் கொண்டே இருந்தான் அவன்.

"அப்புறம், உன் எதிர்காலமே வீணாகி விடுமே! சற்று யோசி..." என்றபோது, மகிமாவின் உடல் தன்னை மீறி லேசாக நடுங்கியது.

"மறுபடியும் என் எதிர்காலம்தானா? உன் எதிர்காலம்? அது என்னம்மா ஆகும்? அதை நினைத்தால், இங்கே நடக்கப் போவதாக நீ எண்ணுவதை வெளியே மூச்சு விடுவாயா என்ன?"

என்ன திமிர்! கொதித்துப் போனாள் மகிமா.

"என்னடா சொன்னாய்? காலம் காலமாக, இந்த திமிரில்தானே, நீங்கள் எல்லோரும்..." என்றவாறே சுற்றுமுற்றும் பார்த்துத் தேடியவள், சாலை ஓரமாகக் கிடந்த சரளைக் கற்களில் பெரியதாக ஒன்றைப் பாய்ந்து சென்று கையில் எடுத்துக் கொண்டாள்.

"இதற்கு மேல், நீ ஓர் அடி எடுத்து வைத்தாலும், மண்டையைப் பிளந்துவிடுவேன்!" என்று அதை வீசுவதற்கு தயாராக நின்றாள்.

ஒரு வழியாக அவன் நின்றபோதும், அஞ்சியது போலத் தோன்றவில்லை "நீ கல்லை வீசும்போது தோதாகத் தலையைக் கொடுத்துக்கொண்டு, அசையாமல் நிற்பேன் என்று எண்ணினாய் போல!" என்று ஏளனம்தான் செய்தான்.

அவன் சொன்னதும் சரிதான்.

சற்று நகர்ந்தாலும் கூட, உடலில் ஏதோ ஓர் இடத்தில் 'நச்'சென்று பட்டுவிடும் அளவுக்கு, மகிமாவுக்கு கிடைத்தது ஒன்றும் பெரிய கல் அல்ல. கிரிக்கெட் பந்து அளவு கூட இல்லாதது. ரோடு போடும்போது பயன்படுத்தியதில் விட்டுப்போன சற்றுப் பெரிய சரளை, அவ்வளவே! இதை வீசும்போது, லேசாக நகர்ந்தாலே, கல்லைத் தவிர்த்து விடலாம். அத்தோடு, கண்ணிலோ, நெற்றிப் பொட்டிலோ பட்டால் ஆபத்தை விளைவிக்கக்கூடுமே தவிர, மற்றபடி இதனால் பெரிதாக ஒரு பாதிப்பும் இராது!

பின்னே? இந்தப் பாவியிடமிருந்து தப்புவதற்கு எப்படிப் போராட வேண்டியிருக்கும்!

மகிமா பதைப்புடன் வேகமாக யோசித்தபோது பார்த்துக்கொண்டே



Uploaded by Naghu

நின்ற அந்த நிகிலனின் முகம் மாறியது!



## தீக்குள் விரலை வைத்தேன் 5

மகிமாவின் பதைப்புடன் கூடிய வேக மூச்சுகள் தவிரச் சற்று நேரம், அங்கே எந்த வித ஓசையும் இல்லாதிருந்தது.

அதன்பின் "நிலைமை என்ன என்று, இப்போது நன்றாகப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்! சற்றும் பழகியிராத புது இடத்தில், முன் பின் அறியாத ஒருவனோடு தனியாகப் பயணம் கிளம்பிப் போவது, எவ்வளவு முட்டாள்தனம்? அதுவும் செல்ல வேண்டிய இடம் பற்றியும் தெரியாது. ஆபத்தை வா வா என்று, இரு கை நீட்டி வரவேற்பது போல இல்லை?" என்று கேட்டுச் சற்று நிறுத்தினான் நிகிலன்.

பதிலுக்காகக் கேட்டது போல அல்லாமல், அவன் சொன்னது, அவள் மனதில் பதிவதற்காகப் பேச்சை நிறுத்தினான் என்றே, மகிமாவுக்குத் தோன்றியது.

ஆனால், சைத்தான் வேதம் ஓதுவது போல, இவன் என்ன, அவளுக்கு உபதேசிப்பது?

ஆத்திரமும் வெறுப்புமாக அவள் பார்க்கையில், "சரி. கல்லைக் கீழே போட்டுவிட்டு வா, போகலாம்?" என்று அழைத்தான் அவன்.

"எங்கே?"

"சங்கபூமிக்கு. அங்கே செல்வதற்காகத்தானே கிளம்பினாய்?"

"உன்னோடு எங்கே செல்லவும், நான் ஓர் அடி கூட எடுத்து வைக்க மாட்டேன்!" என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினாள் மகிமா.

"பின்னே, இங்கேயே நின்று கொண்டிருக்கப் போகிறாயா?" என்று பழைய ஏளனக் குரலில் கேட்டான் நிகிலன். "பாதையைப் பார்த்தாய் அல்லவா? இது பஸ் ஓடும் சாலை அல்ல. அக்கம் பக்கத்துச் சிறு கிராமங்களுக்குச் செல்லக் கூடிய கிளைச் சந்து. எனவே, வேறு வாகனங்களும் வருவதற்கில்லை. பருத்திக் காட்டுக்கோ, மற்ற வேலைகளுக்கோ சென்றவர்கள் திரும்பி வரும்வரை இங்கேயே நிற்பதானால், கிராமத்து மனிதர்கள் என்றால் மகா உத்தமர்கள் மட்டும்தான் இருப்பார்கள் என்று எண்ணிவிடாதே. அவர்களிலும், எல்லா விதமும் இருப்பார்கள். வாங்குகிற ஊதியத்தை குடித்து முடித்துவிட்டு வருகிறவர்கள் கையில் சிக்கினால் என்ன ஆவாய் என்று சொல்ல முடியாது!"



"மிரட்டுகிறாயா? நான் உன்னை நம்பமாட்டேன்"

"நான் நடப்பைச் சொன்னேனே தவிர, உன்னை மிரட்ட என்று எதையும் சொல்லவில்லை. பகலெல்லாம் உடல் ஓய உழைப்பதும், கொஞ்சம் குடித்துவிட்டு வந்து படுப்பதும், பொதுவாக அவர்களுள் தவறாகக் கருதப்படுவது இல்லை. குடி கொஞ்சம் கூடி விடும்போதுதான் தகராறு. இதை, நம்புவதும் நம்பாததும் உன் விருப்பம்"

அவன் கூறுவது பொய்யில்லை. மகிமா வீட்டில் சுற்று வேலை செய்கிற சரோஜாவுடைய கணவன் அப்படித்தான். மூட்டை தூக்கும் கணவன் இரவில் குடித்துவிட்டு வந்து அடிப்பதைக் கூடப் "பாவம்மா. உடம்பு அலுப்புக்காகக் குடித்தது. கொஞ்சம் கூடிப் போச்சுது, போல" என்றுதான் அவளே சொல்லுவாள்.

"முன்னே போ வருகிறேன்" என்றாள் அவள்.

"ஊகூம். அந்தப் பேச்சு உதவாது. நான் முன்னே பார்த்து நடந்து போகும்போது, பின் மண்டையில் கல்லால் அடிக்க மாட்டாய் என்று என்ன நிச்சயம்?"

உண்மையில் அப்படி ஓர் எண்ணம் மகிமாவுக்கு இருக்கத்தான் செய்தது. ஊகிப்பதற்குப் பெரிய மூளையும் தேவையில்லை!

ஆனாலும் "அதெல்லாம் மாட்டேன்" என்றாள் அவசரமாக.

"நான் நம்ப மாட்டேன்." என்றான் இப்போது அவன். "உனக்கு கார் ஓட்டவும் தெரியும். எக்குத் தப்பாக எங்கேனும் அடிபட்டுவிட்டால் அப்படியே விட்டுவிட்டுப் போய் விடுவாய். அப்புறம் நான் அல்லவா, இங்கே தனியாக விழுந்து கிடக்க வேண்டும். ஊகூம், அதெல்லாம் வேலையாகாது. கல்லைத் தூர எறிந்துவிட்டு, என் பக்கத்தில் நடந்து வா. வேண்டுமானால், கையெட்டும் தூரதுக்கு தள்ளியே, சாலையின் அந்த ஓரமாக நடந்து வா. காரிலும், முன்னாலேயே ஏறு. எந்த நேரம், பின்னாலிருந்து எதைப் போட்டு கழுத்தை இறுக்குவாயோ என்று பயந்துகொண்டே காரை ஓட்ட முடியாது. அத்தோடு, என் காருக்கு என்னவும் ஆனாலும், என்னால் தாங்க முடியாது!"

கார் வரை சென்ற பிறகும், மகிமா தயங்கினாள்.

"உ...உன்னை எப்படி நம்புவது?" என்று சற்றுத் தளர்ந்த குரலில் கேட்டாள் அவள்.

"நம்பித்தான் ஆக வேண்டும்" என்றான் நிகிலன். "ஒன்று நம்பாமல், இங்கேயே இருப்பதும், உனக்கு ஆபத்து என்பது. அடுத்தது, உன்னிடம் தப்பாக நடப்பது என்றால், அதற்குக் கார் வரை அழைத்து வர வேண்டியது இல்லை"

ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மையே என்றாலும், சற்று முன்



Uploaded by Naghu

அவளை, அவன் அதிரடித்ததற்கு அவன் சொன்ன காரணத்தை, அவளால் முழுதாக நம்ப முடியவில்லை.

ஒருவேளை, அவள் சும்மா ஒத்துக் கொள்ளவோ, பயந்து பணியவோ மாட்டாள் என்று புரிந்ததால் கூட, அவன் திரும்ப அழைத்து வந்திருக்கலாம்தானே?

இல்லை என்று என்ன நிச்சயம்?

கிளைப் பாதை முடிகிறவரை, வந்த வழியிலேயே கார் சென்றது. பிறகு கார் வேறு புறம் திரும்பவும், மகிமா விலுக்கென்று நிமிர்ந்து அமர்ந்தாள்.

"கார் ஏன் இப்போது வேறு பாதையில் செல்கிறது?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"சங்கபூமிக்குச் செல்வது. உன் தலையாய குறிக்கோள் என்று சொன்னார்களே! உன்னை அங்கே அழைத்துச் செல்வதுதான், என்னிடம் கொடுக்கப்பட்ட வேலை"

"பரவாயில்லை. நான் இன்னொரு தரம் அங்கே போய் கொள்கிறேன். இப்போது ஹோட்டலுக்குக் காரைத் திருப்பு" என்றாள் மகிமா.

என்னதான் நல்ல கார் என்றாலும், என்னதான் இவன் நன்றாகக் காரை ஓட்டினாலும், இந்த அயோக்கியன் ஓட்டும் காரிலிருந்து, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக இறங்கி விட வேண்டும் என்று நினைத்தாள் அவள்.

எதற்காக நல்லபடியாகவே அவன், அவளைத் திருப்பிக் கூட்டி வந்திருந்தான் என்றாலும், இவனது சங்காத்தமே வேண்டாம்!

காரை சாலை ஓரமாகச் செலுத்தி, நிறுத்தினான் நிகிலன்.

அவள் புறமாகத் திரும்பி, "இதோ பார். திருமண மண்டபத்திலிருந்து, நீ சங்கபூமி, சங்கபூமி என்று விசாரித்துக் கொண்டு அலைந்தது, எல்லோருக்கும் தெரியும். அங்கே செல்ல முயற்சிப்பாய் என்பதும், நிச்சயம்! அழகாய் இருக்கிறாய்! தப்பானவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். அவர்கள் கையில் சிக்கினால், என்ன ஆகும் என்று, ஒரு சின்ன எச்சரிக்கை செய்தேன். அவ்வளவே, நான் ஒன்றும் எந்தப் பெண்ணைக் கண்டாலும் முயன்று பார்க்கும் கயவன் அல்ல. இவ்வளவு தூரம் வந்து விட்டாய், சங்கபூமியைப் பார்த்துவிட்டே, போய்விடலாம். என்னை நம்பு" என்றான்.

எப்போதும் உள்ள திடம் இன்னமும் முழுமையாகத் திரும்பியிராத நிலை அவளுக்கு.

கூடவே இவன் என்ன, அவளுக்கு எச்சரிக்கை செய்வது?

அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்து, "திருமணத்தின்போது நான்



சங்கபூமி பற்றி விசாரித்தது, உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

"ஏன்? நீ என்ன ரகசியமாகவா கேட்டாய்? அதிலும் வந்திருந்த பெரியவர்கள் அத்தனை பேரையும் துளைத்து எடுக்கவில்லையா? திருமணத்துக்கு வந்திருந்த என் காதிலும் விழுந்தது"

அவன் பேச்சை ஜீரணிக்க சில வினாடி பிடித்தது, அவளுக்கு.

மல்லிகாவின் திருமணத்துக்கு இவன் வந்திருந்தான் என்றால், அதிலும், அந்தப் பெரியவர்களோடு அவள் பேசியதைக் கேட்கும் இடத்திலும் இருந்தான் என்றால், இவனும் அழைப்பின் பேரில் திருமணத்தில் கலந்து கொண்டவனாகவே இருக்க வேண்டும்.

"இரு வீட்டாரும் பெரிய இடம். அதனால், பாதுகாப்புக் கருதி, உறவிலும், நட்பிலும் நெருங்கியவர்களை மட்டும்தான் அழைத்திருக்கிறோம்" என்று மல்லிகா அழைக்கும்போதே சொன்னாளே.

அப்படியானால், இவனும் ஓர் உறவினனா? மற்றபடி, அவள் பெரியவர்களுடன் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்திருந்து, அவளது பேச்சைக் கேட்பது கடினம்!

கார் பற்றிக் கூட 'என் கார்' என்று ஏதோ சொன்னானே!

"உங்கள் கார், 'வெண்ணிலா டிராவல்ஸ்' நிறுவன வண்டியாக எப்படி வந்தது?"

அவனது பார்வையில், இப்போது சிறு மெச்சுதல் இருந்தது.

"மிகவும் தேவை எனும்போது 'ட்ராவல்'சுக்குக் காரை கொடுப்பதும், ஓட்டுவதும் உண்டு. இப்போதும் அது போன்ற ஒரு தருணம். இதுவும் வருமானம்தானே?"

"ஓ!"

மகிமாவுக்கு இப்போது விஷயம் புரிந்தது.

இந்த நிகிலன், பெண்ணுக்கோ, மாப்பிள்ளைக்கோ உறவினன். கொஞ்சம் வசதி குறைவானவன் போலும். வாய்ப்புக் கிடைத்தால், இப்படியெல்லாம் வருமானம் பெருக்குகிறவனும் கூட. அத்தோடு, அவள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'வெண்ணிலா' ஹோட்டல் நிர்வாகிக்கும் தெரிந்தவன். நிர்வாகியிடம் மகிமா மிகவும் கேட்டதால், சங்கபூமி பற்றித் தெரிந்த இவனை, வண்டியோடு அவளுக்காக அவர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

நடப்புக்கு மாறாக, டிரைவருக்கு மரியாதை கொடுத்து நிர்வாகி குறிப்பிட்டபோதே, இது வேறு என்று அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்!



Uploaded by Naghu

"மணமக்களில், நீங்கள் யாருக்குச் சொந்தம்?"

புன்னகை விரிய "பரவாயில்லையே!" என்று வெளிப்படையாகப் பாராட்டினான் நிகிலன். "மல்லிகாவுக்கு உறவு" என்று தெளிவு படுத்தியவன், "இப்போது பேச்சும் சரியாக இருக்கிறது" என்றும் சேர்த்துச் சொன்னான்.

அவள் ஒருமையில் விளித்துப் பேசியதை குறிப்பிடுகிறான். நிகிலனின் தோள்கள் விறைப்புற்றது. அதற்காகத்தானா? 'கடுகு சிறுத்தாலும் காரம், போகாது' என்பது, இதைத்தானா?

ஆனால், அதற்காக அவளை மட்டும் குறை கூற முடியாதே!

"அப்படிப் பார்த்தால், நீங்கள்தானே, முதலில் அந்தத் தப்பைச் செய்தது?" என்று திருப்பினாள் அவள்.

ஒத்துக் கொள்ளாமல், "தப்பா..." என்று இழுத்தவன் நிகிலன். "மல்லிகாவை, ஒருமையில் அழைத்துப் பழக்கம். அவளுடைய தோழியை அவளை மாதிரியே நினைத்துப் பேசி, நடத்தியது தப்பு என்று நீ சொல்லித்தான் தெரிகிறது" என்று அவன் கூறியபோது, அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

ஓர் உறவுக்காரப் பெண்ணைப் போல நினைத்துப் பேசினேன். நடத்தினேன் என்பவனிடம் என்ன சொல்லி வாதாடுவது?

அவன் அத்துமீறி விரட்டியது, மிரட்டியது எல்லாம் இந்த ஒரே 'மல்லிகாவைப் போல'வில் அடிபட்டுப் போகும்படி செய்துவிட்டான். இப்போது அதைப் பற்றி என்ன சொன்னாலும் உறவினளாகிய மல்லிகாவைப் போல நினைத்து, புத்தி புகட்டவே, அப்படிச் செய்தேன் என்று முடித்து விடலாம்.

வாயைத் திறக்கவே முடியாமல் பண்ணிவிட்டான்! கெட்டிக்காரன்!

இவனோடு பேசும்போதும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்! ஆனால், தவித்துத் திணறிய அந்த சில நிமிஷங்களை நினைக்கையில், அவனை சும்மா விடவும் மனம் முரண்டியது.

"என்ன யோசனை?"

ஆகா, எண்ணியதை அப்படியே சொல்ல வேண்டியதுதான் என்று மனதுக்குள் நினைத்தாலும், அதை வெளிக்காட்டாமல், "சங்கபூமிக்கு போகலாமே என்று சொல்ல நினைத்தேன்" என்று சமாளித்தாள் மகிமா.

"அப்படியா?" என்று ஐயப் பார்வை பார்த்தாலும், 'இல்லை... நீ வேறு நினைத்தாய்' என்று அவனாலும் பொய் சொல்கிறாய் என்று வெளிப்படையாக அவள் மீது குற்றம்சாட்ட முடியாதுதானே?

உறவுச்சங்கிலி அறுந்துவிடக் கூடுமே!

தன்னை மீறி அரும்பிய முறுவலுடன் "என்னை முழுமையாக



நம்புவதாகக் குறிப்பாகச் சொன்னாய் போல" என்றுவிட்டுக் காரை எடுத்தான் அவன்.

"மல்லிகாவுடைய உறவினர் என்ற பிறகு, நம்பாமல் இருக்க முடியுமா? அவனை நம்பித்தானே, இவ்வளவு தூரம் நான் வந்ததே!" என்றாள் அவள் பதிலுக்கு.

கொஞ்சம் பதில் கொடுத்துவிட்ட திருப்தி மகிமாவுக்கு. இதற்கு மேல், அவள் என்னமோ அசட்டுத்தனமாக ஆபத்தை வாவா என்று அழைத்தது போல, அவனால் பேச முடியாது. தங்குமிடம் போக்குவரத்து எல்லாம், அடிப்படையில் மல்லிகாவின் ஏற்பாடுதானே?

அத்தோடு, உன்னை ஒன்றும் முழுமையாக நம்பி விடவில்லை என்றும், சொல்லாமல் சொல்லிவிட்டாளே!

புரிந்துகொண்டு, "அதுவும் சரிதான்" என்று நகைத்தான் அவன்.

சங்கபூமியைப் பார்த்தபோது, மகிமாவுக்கு ரொம்பவே ஏமாற்றம்தான்.

மணிவாசகம் சொன்னதை வைத்து, மிகப்பெரிய ஓர் அரண்மனையையும், அதன் புதிய சொந்தக்காரர்கள் அதன் பெயர், தோற்றம் எல்லாவற்றையும் மாற்றி, சர்க்கஸ் கூடாரம் போல மாற்றி வைத்திருப்பார்கள் என்றும் அவள் எண்ணியிருந்தாள்.

ஆனால், சற்றுப் பெரிதாக இருந்த அந்த வீடு பாழடைந்து கிடந்தது. பல ஆண்டுகளாக, அந்த வீட்டில் யாரும் குடியிருந்ததன் அடையாளமே இல்லை!

வீட்டைச் சுற்றிலும், கட்டாந்தரையாகக் கிடந்திருக்கக் கூடியது. சில ஆண்டுகளாக அவ்வப்போது மழை பெய்ததாலோ, என்னவோ காடு போலப் புதர் மண்டிக் கிடந்தது. அதனிடையில், ஆங்காங்கே இடிபாடுகளுடன் வீடு!

ஆனால், பழைய காலத்தின் சாட்சிகள் போல, ஆங்காங்கே ரோஜா போன்ற சில மலர்களும் கண்ணில் பட்டன. உயர் ஜாதி மல்லிகைக் கொடி ஒன்று, ஒரு சில நட்சத்திரப் பூக்களுடன், ஒரு புதர் மீது படர்ந்து கிடந்தது. மற்றபடி, இலைகளும் பூக்களும் மேலே மேலே விழுந்து, குப்பையாகச் சேர்ந்து போயிருந்தது.

மொட்டு விரியத் தொடங்கிய ரோஜா மலர் ஒன்றைப் பறிக்க எண்ணி ஓர் எட்டு எடுத்து வைத்த மகிமா. பக்கத்துப் புதரில் ஏதோ சலசலக்கவும், சட்டெனப் பின்னடைந்தவள், கூடவே வந்து கொண்டிருந்த நிகிலன் மேல் இடித்துக் கொண்டாள்.

அவசரமாக விலகிய வேகத்தில் அவள் தடுமாற "ஈஸி. ஈஸி!" என்று அவளைத் தாங்கிப் பிடித்து, நிறுத்திவிட்டு "என்ன அவசரம்?" என்று



Uploaded by Naghu

கடிந்தான் அவன்.

சற்று முன் நீ மிரட்டியது மறக்கவில்லை என்றா சொல்லமுடியும்?

சொன்னாலும் 'மல்லிகா போல நினைத்ததாக' அந்தத் துருப்புச் சீட்டை எடுத்து விடுவான்.

அப்போது பதில் சொல்ல முடியாமல் விழிப்பதற்கு, இப்போதே வேறு பேசலாம்!

"இந்த இடம் ஏன் இப்படிப் பாழடைந்து கிடக்கிறது, மிஸ்டர் நிகிலன்?" என்று பேச்சை சங்கபூமியிடம் திருப்பினாள்.

"பார்ப்பதற்கு உடையவர் இல்லாவிட்டால், வேறு எப்படி கிடக்கும்?" என்று ஏளனமும் வெறுப்புமாகப் பதில் கேள்வி கேட்டான் நிகிலன்.

என்ன கோபம்? என்ன வெறுப்பு?

"புரியவில்லையே. அரை விலைக்கும் கால் விலைக்குமாக, எல்லாச் சொத்துக்களையும் யாரோ வாங்கியதா, மணிவாசகம் அங்கிள் சொன்னார். இதுவும் அவைகளுள் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்? ஒரு சொத்தை வாங்கினால், வாங்கியவர்கள் அதைப் பராமரிக்க வேண்டாமா? பராமரிப்பார்கள்தானே? இப்படிப் பாழடைய விடலாமா?" என்றபோது அவள் குரலிலும் எரிச்சல் இருந்தது.

ஒரு நல்ல பொருள் பாழாகிறதே என்ற எரிச்சல்தான் அவனுக்குமா?

இல்லை. அதைவிட அதிகம். மிகமிக அதிகம்!

Uploaded by Nagnu

என்னவாக இருக்கும் என்று அவள் யோசிக்கையில், நிகிலன் பேசினான் " நீ சொல்வது சரியே. கஷ்டப்பட்டு உழைத்த காசைக் கொடுத்து, முறைப்படி வாங்கிய சொத்து என்றால், அதில் ஓர் ஐந்து ரூபாய்ப் பெறுமானம் உள்ள பொருள் வீணாவதைக் கூட, மனம் தாங்காது. உனக்கே தெரிகிறதே, இது பம்மாத்து வேலை செய்து, மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டவைகளில் ஒன்று. அதிலும் இந்த வீடும், சுற்றியுள்ள நிலமும், பாட்டன் சொத்து பேரனுக்கு என்று கைவிட்டு போய்விடுமோ என்ற சந்தேகத்தில், இதற்காகக் காசு செலவு செய்ய, வாங்கியவர்களுக்கு மனமில்லை. விற்ற ராட்சசனும், அது பற்றி தெளிவுபடுத்தாமல், கைக்கு வந்த பணத்தை எடுத்துக்கொண்டு, இந்த ஊரைவிட்டே ஓடிவிட்டான். அசுரனைப் பொறுத்த வரையில், திருடனின் சொத்து போல, உரிமை, நியாயம் எதுவும் இல்லாமல் கிடைத்த பணம். சுருட்டியதே பெரிதாகத் தோன்றியிருக்கும். திருட்டுச் சொத்தை வாங்கியவர்களுக்கும், இந்த வீட்டையும் சுற்றியுள்ள பூமியையும் உரிமை பாராட்டத் தைரியம் இல்லை. மற்ற வகையில், கிடைத்த பெருத்த லாபமே போதும் என்று விட்டுவிட்டார்கள். அதிலும்



ஒன்றுமில்லாத அனாதையாகப் பெரியவர்கள் இறந்தது வேறு. அவர்களுக்கு பெரும் பாதிப்பாகிவிட்டது"

"புரியவில்லையே. அவர்கள் இறந்தால், தன் உடைமை என்று வரக் கூடியவர்கள் மறைந்தார்கள் என்றுதானே அர்த்தம்? அது எப்படிப் பாதிப்பாகும்?"

"ஒரு வகையில் அது சரிதான். ஆனால் வீட்டையும் சுற்றியுள்ள இடத்தையும் பார். இதை நல்லபடியாகப் பராமரிப்பதற்கு, ஏழெட்டு ஆட்களாவது வேண்டும். அந்தப் பணிக்கு, அவர்களுக்கு, இங்கே வேலையாட்கள் கிடைக்கவில்லை"

"அது எப்படி? பணத்தை வீசினால்..."

தோளைக் குலுக்கினான் நிகிலன். "எல்லோருமே பணத்துக்கு அதிக மதிப்புக் கொடுப்பது இல்லை, மகிமா. உண்மையான உரிமையாளர்களிடம் விசுவாசம் காரணமாக, அக்கம் பக்கத்தில் வேலைக்கு ஆள் கிடைக்காமல் போனதாக கேள்வி! கூடவே, உரிமை பற்றிய பிரச்சினையும் பெரிதாகத் தோன்றவே, இத்தோடு போகட்டும் என்று, ஓடி விட்டார்கள் போலும்!"

மீண்டும் அவன் குரலில் அதே ஏளனம்!

என்ன பெரிய ஏளனம் செய்தாகிறது? இவனும் பணத்துக்காகத்தானே, இவ்வளவு தூரம் காரை ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறான்? சங்கபூமி பற்றிய விவரத்துக்கு வேறு, தனியாகப் பணம் கேட்டானே?

திடுமென மகிமாவுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

இவ்வளவு கைப்பு, இவனுக்கு ஏன்? ஒருவேளை, உண்மையான வாரிசு, சங்கபூமியுடைய உரிமைக்காரன். இவனாகவே இருக்கலாமோ? உரிமை பறி போனதால்தான், இப்படிக் கோபப்படுகிறானோ?

சட்டெனத் திரும்பி, நிகிலனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் அவள்.



## தீக்குள் விரலை வைத்தேன் | 6

நிகிலனது முகத்தை ஆராய்ச்சிக் கண்ணோடு பார்க்கத் தொடங்கிய உடனேயே, அவன் சங்கபூமியுடைய உரிமைக்காரன் அல்ல என்று மகிமாவுக்குப் புரிந்து போயிற்று.

நிச்சயமாக, அப்படி இராது என்று நன்றாகத் தெரிந்தது.

மணிவாசகம் சொன்ன கணக்கைப் பார்த்தால், பெரியவருடைய

பேரனும், மிஞ்சி மிஞ்சி இருபது வயது கூட இராது. இன்னும் குறைவாகவே இருக்கலாம். இவன் பின் இருபதுகளில் இருப்பது, நன்கு தெரிகிறது!

அவளது வெறித்த பார்வை, அவன் கண்ணில் படாது போகுமா?. "என்ன? வைத்த கண் வாங்காமல், அப்படி என்ன பார்வை? சினிமாக் கதாநாயகன் போல இருக்கிறேன் என்றா?" என்று கேட்டான்.

"ஆனாலும் ரொம்பத்தான் தன்னடக்கம் உங்களுக்கு" என்று உதட்டைப் பிதுக்கினாள் மகிமா. "எதற்கும் 'செல்ஃப் டப்பா' அடிக்கிற இந்தக் காலத்தில் இந்தத் தன்னடக்கம், ஆ.... ச்சரியமாக இருக்கிறது!"

"நிச்சயமாகத் தன்னடக்கம்தான். ஒப்பனை இல்லாமலே, ஹீரோ போலத் தோன்றுகிறேனே! ஆனால் இன்னமும் உன் பார்வையின் விளக்கத்தை நீ சொல்லவில்லையே. ஒருவேளை, நான் சொனனது போலத்தானா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. சரியான ஏற்ற இறக்கங்களுடன், உணர்ச்சிப் பூர்வமாக விளக்கம் தருகிறீர்களே, நடிப்புத் தொழிலில் இருப்பவரோ என்று யோசித்தேன்" என்று சமாளிக்கும்போதே, கிட்டத்தட்ட அவன் கூறியதை ஒப்புகிறோம் என்று புரிய, "ஆனால் தோற்றம் அதற்கு ஒத்து வரவில்லையே என்றுதான் கொஞ்சம் குழப்பமாக இருந்தது" என்று முடித்தாள் மகிமா.

வாய்விட்டு நகைத்தான் நிகிலன். "நல்ல சமாளிப்பு! நான் யார், என்ன தொழில் செய்கிறேன் என்று தெரிய வேண்டுமானால், கேட்க வேண்டியதுதானே? எதற்காக இப்படித் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறாய்?" என்று நேரே கேட்டான்.

ஒருகணம் திணறிப் போனாள் மகிமா.

அவனது இயல்பான சிரிப்பு ஒரு பக்கம் என்றால், இந்த நிகிலன் மல்லிகாவுக்குச் சொந்தம் என்கிறான். நல்ல, விலை உயர்ந்த கார் வேறு வைத்திருக்கிறான். ஆனால் டிராவல்ஸ் நிறுவனத் தேவைக்காக, டாக்சியாக ஓட்டிக் கொண்டும் வருகிறானே, இவனது தொழில் என்னவாக இருக்கக் கூடும் என்று, இங்கு வரும் வழியில், அவள் யோசித்ததும் உண்மையே.

எனவே, உண்மையைச் சொன்னாள் "நீங்கள் என்ன தொழில் செய்தாலும், அதைப் பற்றி எனக்கு என்ன சார், வந்தது? நான் நினைத்ததே, வேறு. சங்கபூமி பிரச்சினை குறித்து, இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்களே, உண்மை வாரிசு நீங்களோ என்று ஒரு அசட்டுச் சந்தேகம். ஆனால், தப்பான சந்தேகம் என்று, உடனே கண்டுகொண்டேன்?" என்றாள் அவள்.



"எப்படி?"

"மணிவாசகம் அங்கிள் சொன்ன கணக்குப்படி, அந்த வாரிசு இருந்தால் அவனுக்கு அதிக பட்சமாக இருபதுக்கு உள்ளேதான் இருக்கக் கூடும். அதனால்தான் சந்தேகம் உடனே தெளிந்தும் போயிற்று! ஆனால்..."

"ஓர் அனியாயத்தைக் கண்டு ஆத்திரப்பட உறவுமுறைகள் தேவையில்லை. மனிதத்தன்மை இருந்தாலே போதும். சரி, அவ்வளவுதானே? இனிப் போகலாமா?"

"போகலாம். ஆனால்... சங்கபூமி பற்றி உங்களுக்கு இவ்வளவு தெரிகிறதே! இதன் இப்போதைய உரிமையாளர்கள் பற்றியும் ஏதேனும் தெரியுமா? தெரிந்தால் அவர்களைப் பற்றியும் சொல்லுங்கள். மணிவாசகம் அங்கிளிடம் சொன்னால் சந்தோஷப்படுவார். அதற்கும் தனியாகப் பணம் வேண்டுமானாலும் தருகிறேன்" என்றாள் மகிமா.

"என்னது? பணமா?!" என்று சற்று திகைத்த நிகிலனின் முகம் உடனே தெளிய, அவன் மறுபடியும் சிரித்தான், "பரவாயில்லை. உனக்கு ஒரு தரம் கார் ஓட்டினாலே, நிறைய சம்பாதித்து விடலாம் போல" என்று மீண்டும் நகைத்தான்.

அவன் பணம் கேட்டது, சும்மா ஒரு பேச்சுக்கு என்று இப்போது தோன்றியது.

ஆனால், அவன் நிஜமாகவே கேட்டிருந்தாலும் அவன் சிரித்துப் பேசுவது மனதிற்கு இதமாக இருக்க, அதைக் கலைக்க மனமின்றி, பணம் பற்றிப் பேசாமல், மகிமா சும்மா இருந்தாள்.

ஆனால் நிகிலனுக்கு அந்த எண்ணம் இல்லை போலும்.

"சங்கபூமி விவரங்கள் உனக்கு எந்த அளவு முக்கியம் என்று அறியவே உன்னிடம் பணம் கேட்டேன். ஆன்ால், இப்போது சொல்லு. உனக்கு இந்த விவரங்கள் எதற்காக?" என்று கேட்டு முடித்தபோது, அவன் குரலில் சிரிப்பு, அடியோடு காணாமல் போயிருந்தது.

"திருமண வீட்டில் நான் விசாரித்ததைக் கேட்டதாகச் சொன்னீர்களே..." என்றவளுக்கு, அந்தப் பெரியவர், திரும்பிப் பார்த்துப் பார்த்துப் பேசியது நினைவு வந்தது.

எதற்காக கேட்கிறாய், என்ன ஏது என்று அவளையே விசாரித்ததும்.

இவன்தான் கேட்கச் சொல்லியிருக்கிறான். ஆனால், இப்போது அது பற்றிக் குறுக்கு விசாரணை செய்தால், நல்ல மனநிலை கெட்டுவிடும். அதை விட உண்மையையே சார்வது நல்லது.

தான் தேடி வந்த கதையை மாற்றமின்றிச் சொன்னாள்.

"யாரோ ஒரு மணிவாசகத்துக்காக இவ்வளவு மெனக்கெடுகிறாயா?



Uploaded by Naghu

அதுவும், அவர் முதியவர் இல்லத்தில் இருக்கும் பெரியவர்! மெய்யாகவே, வேறு உட்கரணங்கள் எதுவுமே இல்லையா?" என்று அவ்வளவாக நம்பாத குரலில் கேட்டான் நிகிலன்.

புரியாமல் கேட்டாள் அவள் "வேறு என்ன காரணம் இருக்கக் கூடும் என்று நினைக்கிறீர்கள்?"

தோளைக் குலுக்கினான் அவன். "உரிமைக்காரர்கள் யாரும் இல்லை என்றால், இந்த இடத்தை வளைத்துப் போடலாம் என்று, யாரவாது 'ரியல் எஸ்டேட்'காரர்களின் ஆளாக வந்தாயோ, என்னவோ? அழகான இளம்பெண் கேட்டால், ஏமாந்து போய் எல்லோரும், எல்லாம் சொல்லி விடுவார்கள் என்று அப்படி யாரேனும் அனுப்பினார்களா?... அல்லது..." என்றவனின் குரல் சட்டெனக் கடுத்தது. "என் கடவுளே, கடவுளே என்று பெரியவரை ஏமாற்றிக் கையெழுத்து வாங்கினானே, அந்த அசுரனேகூட, இப்போது நிலத்து விலைகள் எக்கச் சக்கமாக ஏறி இருக்கிறதே, இதை மட்டும் விடுவானேன் என்று விசாரிக்க, உன்னை அனுப்பியிருக்கலாமே! இந்த மாதிரி மட்ட ரகமான திட்டங்கள், முழுக்க முழுக்க அவனுக்குத்தானே அத்துப்படி?"

இதமான மனநிலை கெட்டே விட்டது.

அந்த அசுரன் கெட்டவனா, மட்டமானவனாக இருக்கலாம். ஆனால் அவனது திட்டத்துக்குத் துணை போகிறவள் என்று அவளையும் அல்லவா, கேவலமாகப் பேசிவிட்டான்!

இது மட்டுமா? சற்று முன், என்ன மாதிரி மிரட்டினான்! அது கூட, இவள் எந்த அளவுக்கு வளைந்து கொடுப்பாள் என்று அறிவதற்காகவே இருக்குமோ? என்ன திமிர்!

அதைக் கூட அவன் சொன்ன காரணத்தை ஏற்று, இவனோடு சாதாரணமாக அவள் பேசியதே பெரிய மடத்தனம்! அதுதான் இப்படி பேசும் துணிச்சலை இவனுக்குக் கொடுத்திருக்கிறது! போகட்டும். நல்ல பாடம் அவனுக்கு!

நிமிர்ந்து, "ரொம்பவும்"கஷ்டப்பட்டுத்தான் யோசிக்கிறீர்கள், மிஸ்டர் நிகிலன். ஆனால், என்ன செய்வது? உங்கள் உன்னதக் கண்டு பிடிப்புகளைப் பார்க்கும்போது, யோசிப்பது, உங்கள் சக்திக்கு மீறிய விஷயம் என்று தெரிகிறது. எனவே, உங்கள் ஆராய்ச்சியை இத்தோடு நிறுத்திக்கொண்டு, திரும்பிப் போகலாம். இதற்கு மேல், மணிவாசகம் சாருக்கு ஏதேனும் தேவை என்றால், அவரே வந்து கேட்டுக் கொள்வார்" என்று அவனை துச்சமாகத் தூக்கி எறிந்து பேசிவிட்டு, காரை நோக்கி நடந்தாள் மகிமா.

நிகிலனும், அவளை நிறுத்தவில்லை. புருவம் சுளித்து ஏதோ



Uploaded by Naghu

யோசித்தவாறு, மௌனமாக அவளைப் பின் தொடர்ந்தான்.

திரும்பிச் செல்லும்போதும், இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. வெளிப்புறமாகத் தலையைத் திருப்பி வைத்திருந்தவள், மறந்தும், உட்புறம் பார்வையைத் திருப்பினாளில்லை.

ஹோட்டலை அடைந்ததும் "வண்டிக்கான பில்லை என் அறைக்கு அனுப்பச் சொல்லுங்கள்"என்று மொட்டையாக மொழிந்துவிட்டு, வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

உன் மீது எனக்கு அடங்காத ஆத்திரம் என்பதை, வேறு விதமாக யாராலும் காட்ட முடியாது!

ஹோட்டல் அறையில் வந்து விழுந்தால், மற்ற தோழிகள் அனைவரும், உல்லாசமாக சுற்றிச் சென்றிருந்தனர். அவர்கள் சென்ற இடங்களை எண்ணிப் பார்க்கையில் இரவு தொடங்குமுன் யாருமே திரும்பி வருவார்கள் என்று தோன்றவில்லை.

தனிமை, வேண்டாத நினைவுகளை தூண்டி விட்டு, ரொம்பவும் வெறுப்பூட்டியது.

இது போன்ற எண்ணங்களே வேண்டாம் என்று, எழுந்து சென்று, அந்த வெண்ணிலா ஹோட்டல் வளாகத்திலேயே இருந்த சிறு பூங்காவினுள் சென்று அமர்ந்தாள். சிறுவர் பூங்கா போல, ஊஞ்சல், சறுக்கு மரம் இவை போன்ற விளையாட்டு வசதிகள் இருந்தன. ஹோட்டலில் தங்கியிருந்தவர்களுடைய பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தன. பதிநாலு, பதினைந்து வயதுச் சிறுமி ஒருத்தி, அந்தப் பிள்ளைகளுக்கு விளையாட்டில் உதவி செய்ததோடு, அவர்களோடு கூடச் சேர்ந்து, தானும் ஆடிக் கொண்டிருந்தாள்.

ஆனால், அவர்களது சிரிப்பும், விளையாட்டும் மகிமாவை அமைதிப்படுத்த முடியாது தோற்றன.

ஆனாலும், அந்த நிகிலன் அவளை இவ்வளவு மட்டமாக எடை போட்டிருக்கக் கூடாது என்று, அதிலேயே மனம் நின்றது.

இத்தனைக்கும், அவன் அவ்வளவு மோசமாக நடந்துவிட்டு!

அவள் மட்டும் அது பற்றிப் புகார் கொடுத்திருந்தால், அப்புறம் அந்த ட்ராவல் நிறுவனத்துக்கு, அவன் என்றேனும் கார் ஓட்ட முடியுமா? ஹோட்டலுக்குள் காலை வைத்தாலே, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விட மாட்டார்களா? அப்போது தெரியும், அவன் செய்த தப்பின் தீவிரம்.

ஆனால், அவனுக்குள் ஏதோ கனன்றுகொண்டே இருப்பதால்தான், அவன் இப்படிப் பேசுவதும், நடப்பதும். மற்றபடி அவன் நல்லவனே.

அதுவும் இயல்பாகச் சிரிக்கும்போது, நமக்குள் எவ்வளவு இதமாக இருக்கிறது!

அவள் எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது, ஹோட்டல் நிர்வாகி, அந்தப் பக்கமாக மேற்பார்வையிட்டவாறே நடந்து வந்தவர், அந்தப் பெரிய சிறுமியைப் பார்த்ததும் "என்னம்மா, சாரைப் பார்க்க வந்தாயா?" என்று கனிவாகக் கேட்டார்.

"இல்லை அங்கிள். கொஞ்ச நேரம் இங்கே விளையாடி விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று அரிசிப் பல் தெரியச் சிரித்தாள் அவள்.

வயதுக்கேற்ற வெள்ளைச் சிரிப்பு! ரசித்துக் கொண்டிருக்கும் போதே, மகிமாவுக்கு வேறெதோ நினைவு வந்து, பார்வை கூர்மை கூடியது.

நிர்வாகியின் முகத்தில், கனிவோடு கவலையும் தெரிந்தது. கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு "நேரமாகிவிட்டதே, நிலாம்மா! அம்மாவுக்குத் தெரிந்தால், திட்டப் போகிறார்கள். சீக்கிரமாக வீட்டுக்கு ஓடு செல்லம்!" என்று அவளை எச்சரித்து அனுப்பி வைத்தார்.

ஒரு பெருமூச்சுடன் திரும்பியவர், ஒருபுறமாக மரத்தடியில் உட்கார்ந்திருந்த மகிமாவைப் பார்த்ததும், மறுபடியும் நின்று பேச்சுக் கொடுத்தார்.

ஹோட்டலைப் பற்றிய அவளது அபிப்பிராயம் என்ன, சென்னை ஹோட்டல்களுக்கு ஒப்பாக 'வெண்ணிலா' இருக்கிறதா, சர்வீசில் ஏதாவது குறை இருந்ததா என்று இப்படிக் கேள்விகள்.

Uploaded by Naghu

வயதில் அவரை விட எவ்வளவோ சின்னப் பெண். தன்னை மதித்து இந்தக் கேள்விகள் எல்லாம் கேட்கிறாரே என்று இருந்தது, மகிமாவுக்கு. கொஞ்சம் பெருமையும் கூட!

நல்லவிதமாகவே பதில் சொல்லிக்கொண்டு வந்தவள், அன்றையப் பயணம் பற்றிய பேச்சு வந்ததும் மௌனமானாள்.

அதைப் பற்றி, நன்றாக இருந்தது என்று எப்படிச் சொல்வது? அப்படி ஒரு முழுப் பொய்யை அவளால் சொல்ல முடியாது! மற்றதற்கெல்லாம் அவன் ஏதேதோ விளக்கம் கொடுத்தாலும், கடைசியாக அவளை, அப்படி மோசமாக, அவன் பேசியிருக்கக் கூடாது! எப்படியும், அது தப்புதான்!

பதிலுக்காகச் சில வினாடிகள் பொறுத்திருந்துவிட்டு, "கார், காரோட்டி, போன இடம் எதுவுமே அவ்வளவாகச் சரியில்லை என்று தெரிகிறது. இதுபோல வெளி வண்டிகளை எடுப்பதில், எப்போதும் பிரச்சினைதான். எதற்கும், முதலாளியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போம்மா. இனிமேல் இன்னும் கொஞ்சம்



எச்சரிக்கையோடு இருப்பார்" என்று, முன்புறமாக ஓர் அறையைக் கைகாட்டினார் நிர்வாகி.

அத்தோடு போய்விடாமல், "வாயேன்மா, ஆஃபீஸ் பையனிடம் சொல்லிவிட்டுப் போகிறேன். இல்லாவிட்டால், உன்னை கடைசி ஆளாக்கி வெகு நேரம் உட்கார வைத்துவிடுவான்" என்று கூடவே கூட்டிப்போய், எம்டி அறை வெளிப் பகுதியில் அவளை விட்டுவிட்டுப் போனார்.

மகிமா சற்றுத் திணறினாள்.

இப்போது இந்தக் காரோட்டியை என்ன செய்வது?

அவனைப் பற்றி புகார் கொடுத்தே ஆக வேண்டும் என்று, அவள் இதுவரை நினைக்கவில்லை.

ஆனால் அது பற்றி முதலாளியிடம் பேசும்படி இங்கே கூட்டி வந்து விட்டுப் போன பிறகு, சும்மா இருக்கவும் முடியாது.

எண்ணம் நல்லதே என்றாலும், கொஞ்சம் அடக்கம் தேவை என்று அன்பாகச் சொல்லித் திருத்தச் சொல்லலாம்.

ஆனால் அவனது கடைசிப் பேச்சு...

யாரோ ஒருவன். அவனுக்கு என்னென்ன அனுபவங்கள் நேர்ந்தனவோ? அந்தப் பாதிப்பில், இப்படிப் பேசிவிட்டான் என்று, அதைப் பற்றிச் சொல்லாமல் விட்டுவிடலாமா?

நிகிலனைப் பற்றி ஒரு முடிவுக்கு வர முடியாமல் மகிமா யோசித்துக் கொண்டிருந்தபோதே, அந்த அறையின் கதவைத் தள்ளிக்கொண்டு, அவனே வந்தான்.

உள்ளே மகிமாவைப் பார்த்ததும் "என்ன? மேடம் என்னைப் பற்றி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய வந்தீர்கள் போல?" என்று புருவம் உயர்த்திக் கேட்டான்.

கவலைப்படுகிறானோ? வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், ஒரு வருமானம் போய்விடுமோ என்று, உள்ளூர கவலை இருக்கத்தானே செய்யும்?

அப்படி அவன் வருந்துவதும், அவளுக்கு ஏனோ பிடிக்கவில்லை?

அவன் யாரோ, எவரோ? மீண்டும், அவனை அவள் சந்திப்பது கூட அதிசயம்தான். அவன் வாழ்வில் அவளால் ஒரு கரும்புள்ளி விழுவானேன்? விழுந்து விடுமோ என்று அவனும் வீணே கவலைப்படுவானேன் என்று எண்ணினாள்.

எனவே "புகார் என்று இல்லை. ஆனால், சற்று அடக்கமாக நிலைமைக்கு ஏற்றவாறு நடக்க, அன்பாகவே கற்றுக் கொடுங்கள், என்று சொல்ல எண்ணினேன்" என்று அமைதியான குரலில்

உரைத்தாள்.

ஆனால், ஏன் சொன்னோம் என்று உடனே வருத்தம் நேர்ந்தது.

ஏனெனில் அவனது பேச்சுக்கு அவன் விளக்கம் சொன்ன விதம் அப்படி!

அவனைப் பற்றி, மகிமா குற்றம் குறை கூறி விடுவாளோ என்ற கவலை அவனுக்கு சிறிதும் இருக்கவில்லை என்பதோடு, அவளைப் பற்றியும் அவனுக்கு மதிப்பு, மண்ணாங்கட்டி எதுவும் கிடையாது என்றும், அவனது பதில் தெளிவாகக் காட்டியது.

"நிலைமைக்கு ஏற்றபடி நடப்பதா? அப்படியானால், என் இடத்தில் இந்த வெண்ணிலாவின் முதலாளி இருந்திருந்தால், உன்னைக் கட்டிப் பிடித்து, மேலேயும் போகவும் தடையில்லை என்கிறாயா, ம்?" என்று கிண்டலாகக் கேட்டான் நிகிலன்.

கொதித்துப் போய் "செருப்புப் பிய்ந்துவிடும்!" என்று கடுங்குரலில் எச்சரித்தாள் மகிமா. "பிறருக்குப் புத்தி சொல்கிற வேலை வேண்டாம். உங்கள் வேலையை மட்டும் பாருங்கள் என்று சொல்ல வந்தால், என்ன மாதிரி கோணல் பார்வை பார்க்கிறீர்கள்? வந்ததுமே, நீங்கள் பேசிய, நடந்துகொண்ட விதம் எல்லாவற்றையும் இந்த ஹோட்டல் முதலாளியிடம் சொல்லி, உங்களுக்கும் அவருக்கும் உள்ள தொழில் தொடர்பையே முறித்திருக்க வேண்டும்!" என்றாள் சீற்றத்தோடு.

"ஐய்யோ பயமாயிருக்கிறதே" என்றான் அவன் கேலிக் குரலில்.

"இன்னமும் என்னால் அதைச் செய்ய முடியும், தெரியுமா?" என்று மிரட்டினாள் அவள்.

கை கால்கள் நடுங்குவது போல் பாவனை செய்து "இவ்வளவு பயம் போதும்? இன்னும் கொஞ்சம் அதிகமாக நடுங்கினால்தான் திருப்தியாகுமா?" என்று மேலும் கிண்டல் செய்தான் நிகிலன்.

இவனைப் பற்றி நிச்சயமாக புகார் செய்தே ஆக வேண்டும் என்று அவள் மனதுள் உறுதி செய்தபோது, கதவை தட்டி அனுமதி பெற்றுக்கொண்டு, ஹோட்டல் நிர்வாகி உள்ளே வந்தார்.

மகிமாவைப் பார்த்ததும் "சொல்லிவிட்டாயாம்மா?" என்று புன்னகை செய்தவர், நிகிலனிடம் "சார்" என்றழைத்து ஏதோ பேசலானார்.

சார்!

நிர்வாகி கதவைத் தட்டியதும், உள்ளே வருமாறு அனுமதி கொடுத்தது, நிகிலன் என்பது, புதிதாக, அவளது கருத்தில் பட்டது.

ஹோட்டலுக்காக ஏதோ புதிய 'போர்' போடுவது பற்றி, நிகிலனிடம் பேசி, அவனது முடிவைக் கேட்டுவிட்டுப் போனார் அவர்.

முதலில் அவன் ஒருமையில் பேசியபோது நிகிலனின் உடல்



விறைத்ததற்கும், நிர்வாகி, முதலிலேயே அவனை மரியாதைப் பன்மையில் குறிப்பிட்டதற்கும் இப்போது வேறு விளக்கம் தெரிந்தது.

அவன் சட்டென அவளை ஒருமையில் விளித்துப் பேசியதும்கூட, இப்படி ஒரு பெரிய நிறுவனத்தின் முதலாளியாக இருந்து, பொறுப்பேற்று நடத்துவதன் விளைவுதான் என்று, மகிமாவுக்கு இப்போது தோன்றியது.

'மல்லிகா போல நினைத்தது' எல்லாம் சுத்தக் கதை!

நிர்வாகி சென்றுவிட, அகன்று நீண்ட மேஜை மீது இலகுவாக சாய்ந்தபடி, அவன் விசித்திரமாக நோக்குவது கண்ணில்பட்டது.

"நீ... நீங்கள் நீங்களா முதலாளி?" என்று சிறு தடுமாற்றத்துடன் கேட்டாள்.

இது தெரியாமல் என்னவெல்லாம் சொல்லி மிரட்டினாள்! அவன் கண்ணுக்கு விசித்திரப் பிராணியாகத்தான் தெரிவாள். அதில் வியப்பே இல்லை!

"நூறு மதிப்பெண்கள்!" என்றான் அவன் தெளிவாக, அத்தோடு நிறுத்தாமல், "ஏதோ நிலைமைக்கு ஏற்றபடி என்றாயே! இப்போது முதலாளி நிலைமையில் நெருங்கலாம்தானே?" என்று கண் சிமிட்டிக் கேட்டான்.

திகைப்பு, வியப்பு எல்லாம் மறைய, மகிமா நிமிர்ந்தாள். "ஆனால், செருப்பு பிய்ந்து விடும் என்றும் சொன்னேனே, நினைவில்லை? செருப்படி வாங்கத் தயாரானால் உங்கள் விருப்பம்" என்றாள் அமர்த்தலாக.

"ஆமாம்மாம். நீங்கள் செருப்பைக் கழற்றி அடிக்கிறவரை, எங்கள் கைகள் பூபறித்துக் கொண்டிருக்குமாக்கும்? அதை யோசியாமலே, செருப்படி, செருப்படி என்று அதையே சொல்லி மிரட்டுவாயா?"

அவனது இலகுவான குரலில், அவளது இறுக்கம் தானாகத் தளர்ந்தது.

ஓர் இருக்கையைக் காட்டி அவளை உட்காரச் சொல்லிவிட்டு, மேஜையின் பின்னே தன் இடத்திற்குச் சென்று அமர்ந்து, அவன் சொன்னான்.

"பார் மகிமா, பெண்களுக்கு நல்ல பாதுகாப்பான இடம் என்று, தோழிகளான உங்களுக்கெல்லாம் என் ஹோட்டலில் மல்லிகா தங்குமிடம் ஏற்பாடு செய்தாள். எல்லோரும் பாதுகாப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலா மையங்களுக்குப் போனால், நீ மட்டும் வேறுபட்டு நிற்கிறாய். என் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எதிலும் தவறு நேர்ந்துவிடக்கூடாது என்கிற அக்கறைதான் எனக்கு. நீயும், இனி இப்படி



Uploaded by Naghu

அசட்டுத் துணிச்சல் காட்ட மாட்டாய் என்று நம்பலாமா?" என்று கேட்டான்.

முன்பு 'மல்லிகா போல' என்றதைப்போல, இப்போதும் எல்லாவற்றையும் பூசி மெழுகிவிட்டான்.

அதை அப்படியே ஏற்க மனமின்றி, "பெண்களிடம் உங்களுக்கு ரொம்ப அக்கறை போல!" என்றாள் அவள் சற்று நம்பாத குரலில்.

ஆனால் "உன்னிடம் என்றும் வைத்துக் கொள்ளலாமே!" என்று அவளை மறுபடியும் திகைக்க வைத்தான் நிகிலன்.

உடனேயே தெளிந்து இல்லை, இப்படி மடக்க விடக்கூடாது என்று எண்ணியவளாக, "ஏனோ?" எனக்கென்ன தனியாகக் கொம்பு முளைத்திருக்கிறதா?" என்று கேலியாகவே மறுத்தாள் அவள்.

யோசனையோடு மேஜை மேல் இருந்த பேனாவை எடுத்து, ஸ்டான்டில் செருகினான் நிகிலன். அப்படியே, ஸ்டான்டின் அருகிருந்த போர்டில் ஓர் எண்ணை அழுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

"கொம்பு எதுவும் முளைத்திருக்கவில்லை. ஆனால், சங்கபூமி பற்றி, உனக்கு என்ன எவ்வளவு அக்கறை? அதற்காக எந்த அளவுக்கு போவாய் என சோதித்துப் பார்த்தேன்" என்றான் அவன்!

"மானத்தை இழக்கிற அளவுக்கு எதற்காகவுமே நான் இழிந்து போக மாட்டேன். உயிருக்காகக் கூட!" என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

கூறியது, அவன் மனதில் பதிவதற்கு சில விநாடி அவகாசம் கொடுத்து விட்டு "அத்தோடு சங்கபூமி பற்றி நான், ஏற்கனவே சொன்னதுதான் உண்மை. நான் தேடி வந்தது, மணிவாசகம் அங்கிளுக்காக மட்டும்தான். மற்றபடி சொல்ல வேண்டுமானால், அந்தப் பெயர் எனக்குப் பிடித்திருந்தது. அவ்வளவே" என்றாள் அவனை நேர்ப் பார்வையாய் நோக்கி.

"நம்புகிறேன்" என்றான் அவன் சுருக்கமாக.

கதவைத் தட்டிவிட்டு காஃபி ட்ரேயுடன் உள்ளே வந்த ஒரு பணியாள், தட்டிலிருந்த காஃபி கப்களை இருவர் முன்பும் வைத்துவிட்டுப் போனான்.

பணியாள் சென்றதும், காஃபியை எடுத்துக் கொள் என்பது போல சைகையால் காட்டிவிட்டு, தான் ஒரு கப்பை எடுத்துக்கொண்டு "நம்புவதாலேயே, சங்கபூமி பற்றி நான் அறிந்த சில உண்மைகளை, உனக்குச் சொல்லுகிறேன்" என்ற நிகிலன், மெதுவாகச் சொல்லத் தொடங்கினான்.





## தீக்குள் விரலை வைத்தேன் 7

சங்கபூமி பற்றி சொல்வதாக வாக்களித்தபோதும், நிகிலன் அதை உடனே தொடங்கிவிடவில்லை.

முதலில் அவளுக்குச் சங்கபூமி பற்றி என்னென்ன தெரியும் என்று விசாரித்து அறிந்த பிறகே, தனக்குத் தெரிந்ததைச் சொல்லத் தொடங்கினான்.

அந்த வகையில் மகிமாவுக்கு மறைப்பதற்கு எதுவும் இல்லை. மணிவாசகம் சொன்னது மட்டுமே, அவளுக்குத் தெரிந்த விவரங்கள்.

அவற்றை, அவள் ஒப்பித்ததும், எல்லாம் சரியே என்பது போலத் தலையசைத்துவிட்டு, அவன் தொடங்கினான்.

"உன் மணிவாசகம் அங்கிள் சொன்னது எல்லாம் சரியே! ஆனால், மகன் காதலித்த பெண்... அவர்கள் பெயர் மஞ்சரி, அவர்களை மருமகளாக ஏற்க முடியாது பெரியவர் மறுத்த காரணம். அவருக்குத் தெரியாது போலும் 'பொயட்டிக் ஜஸ்டிஸ்' என்று சொல்வார்களே, அதுபோல அந்தக் காரணத்தில், ஒரு குரூரமான நியாயமும் நடந்திருக்கிறது" என்றவன், அது என்ன என்று விவரித்தான்.

"அந்த சமயத்தில் அதாவது, உன் மணிவாசகம் அங்கிள் சதா என்றாரே, அந்த சதானந்தம் ம்... சார், மஞ்சரியை மணக்க விரும்பிய காலத்தில் மஞ்சரியுடைய பெற்றோர் ஒரு 'மெஸ்' வைத்து நடத்திக் கொண்டிருந்தார்கள். சாப்பாட்டுக் கடை. அந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பாக, ரொம்ப சின்ன அளவில் இருந்த... தாம். அதனாலேயே சாப்பாட்டுக் கடைக்காரன் மகளா, எங்கள் மருமகள் என்று மறுத்தார்களாம்.

"அந்த விவரங்களைத் தேடிக் கண்டுபிடித்து, ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கி தீ மூட்டியவன், ஒற்றை மகனுக்குத் துணை என்று, மகனோடு சேர்த்து, அவரே வளர்த்த அந்த அசுரன்தான்..."

"மணிவாசகம் அங்கிளும் இப்படி அசுரன், அசுரன் என்றுதான் அந்தக் கொடியவனை குறிப்பிட்டார். ஆனால், அவனுக்கு ஒரு பெயர் இருந்திருக்கும்தானே? அது..."

"இருந்திருக்கும். இருந்திருக்கும்!" என்று பொறுமையிழந்த குரலில் நிகிலன் குறுக்கிட்டான். "விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சலமாம் என்பார்களே, அதுபோல நல்ல கடவுள் பெயராகக் கூட அது இருக்கலாம். ஆனால், கடவுள் பெயரைக் கேவலப்படுத்தக் கூடாது



Uploaded by Naghu

என்று, அவனைக் காரணப் பெயராக இப்படிக் குறிப்பிட்டே பழகிவிட்டது. அடிமை ராஜா என்று இன்னொரு பெயர் கூடச் சொல்வார்கள். உள்ளே பெரியவருக்கு கால் பிடித்து விட்ட காலத்திலும் வெளியே பெரிய மகாராஜா மாதிரி அலட்டிக் கொள்வானாம்!" என்றவன், மறுபடியும் சங்கபூமி பெரியவர்களைப் பற்றி பேசலானான்.

"கண்ட தெருநாயின் பேச்சைக் கேட்டு, பெற்ற பிள்ளையையும், ஒரு நல்ல பெண்ணையும் அடியோடு விரட்டியடித்தார்கள் அல்லவா? உரிய பரிசை அந்த நாயே கொடுத்துவிட்டது. ஒரு துரும்பைக் கூடத் தொட முடியாமல் எழுதி வாங்கிக்கொண்டு, அணிந்திருந்த மோதிரம் வரை உருவிக் கொண்டு அவர்களையே ஒண்ட நிழல் இல்லாமல் விரட்டிவிட்டான். கடைசிக் காலத்தில் ஒன்றுமே இல்லாமல் நடுத்தெருவில் நின்றார்கள்! பானை நிறையப் பொங்குவதை விடு., உட்கார்ந்து கஞ்சி காய்ச்சிக் குடிக்கக் கூட ஒரு குடிசை கூட இல்லாமல், மரத்தடியில் நின்றார்கள். ஒரு மினி சாப்பாடு வாங்கிச் சாப்பிடக் கூட வக்கற்று பட்டினியாகக் கிடந்தார்கள்! தப்பு செய்தால் கடவுள் எப்படி அடிக்கிறார், பார்! ஆனால், உச்சந்தலையில் அந்த அடி கொடுக்காவிட்டால், அவர் எப்படிக் கடவுள் ஆவார்?" என்றான் கொதிப்புடன்.

நிகிலனை வியப்புடன் பார்த்தாள் மகிமா.

என்ன இவ்வளவு கொதிப்பும் வன்மமும்?

முன்போலவே, மீண்டும் அவளுக்குச் சந்தேகம் எழுந்தது.

அந்த சங்கபூமியின் வாரிசாக இல்லாவிட்டாலும், அதன் உரிமையாளர்களுக்கு இவன் நெருங்கிய உறவாக இருக்கக் கூடுமா?

ஆனால், அப்படி உறவாக இருந்தால்... இவன் அப்போது சிறுவனாக இருந்திருந்தாலும் இவனுடைய குடும்பத்தார், அந்தப் பெரியவர்களுக்காக ஏதாவது செய்திருப்பார்கள்! அவர்கள் பசி, பட்டினியால் வாடிச் சாக நேர்ந்திராதே!

பின்னே இந்தக் கோபத்தின் காரணம் என்னவாக இருக்கும்... என்று யோசிக்கும்போதே, அவளுக்கு விஷயம் புரிந்துபோயிற்று! அந்த சங்கபூமி பெரியவர்களுக்கும் சரியான தண்டனை என்று, அவர்கள் மீதும் கோபமாகத்தான் பேசினான்.

எல்லாவற்றுக்கும் காரணம் ஒன்றுதான்.

நாவினால் சுட்ட வடு! சாப்பாட்டுக்கடை என்று, பிழைப்புக்கான தொழிலை இழிவுபோல, இகழ்ந்து சொன்ன ஒரு சொல்!

செய்யும் தொழிலே தெய்வம் என்று இருப்பவன் போல!

மிகப் பெரிய அளவில் செய்தாலும், இந்த நிகிலனது தொழிலின்



அடிப்படையும் அதே சாப்பாடு விற்பனைதானே! அதைத் தாழ்வாகப் பேசியதால் வந்த சீற்றம்! சினம்!

ஆனாலும் இவ்வளவா?

வியப்பினால் மலர்ந்த விழிகள் அவனைக் கவர, "என்ன?" என்று வினவினான் அவன்.

"உங்கள் கோபத்தின் காரணம் கண்டுபிடித்தேன்" என்று புன்னகை செய்தாள் மகிமா.

அவன் அசைவற்றுப் பார்த்துக் கொண்டிருக்க, அவன் தன் கண்டுபிடிப்பின் விவரம் சொன்னாள்.

சொல்லி முடித்துவிட்டு, "என்ன? சரிதானே?" என்று முறுவலித்தாள்.

இந்த முறுவலிலும் நிகிலன் கலந்து கொள்ளவில்லை.

ஆனால் "நீ சொல்வது போல, இரண்டிற்கும் அடிப்படைகள் ஒன்றுதான். ஆனால், இன்றைக்கு எனக்குப் பெண் தரவோ, என் வீட்டுப் பெண்ணை மணக்கவோ, தொழிலைக் காட்டி யாரால் மறுக்க முடியும்?" என்று கர்வத்துடன் கேட்டான்.

முடியாதுதான். ஆனால்....

"அப்படியானால், உங்களுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையா?" என்ற கேள்வி காதில் விழுந்த பிறகுதான், தன் வாய் அதைக் கேட்டிருக்கிறது என்பதை மகிமா உணர்ந்தாள்.

ஓர் இளைஞனிடம், அதுவும் பணக்காரனிடம், அவள் கேட்கக் கூடிய கேள்வியா இது!

"சாரி சாரி, கேட்டிருக்கக் கூடாது. ம..மன்னித்து விடுங்கள்!" என்று உடனேயே பதறிப் போனாள் அவள்.

"ஏன்? ஒரு விவரம் வேண்டுமானால் கேட்பதில் என்ன த்வறு?"

ஏதோ ஒரு விவரம் வேண்டுமானால், கேட்டு அறிவதில் தப்பு இல்லைதான்.

ஆனால், ஓர் இளம்பெண் இந்த விவரம் கேட்டால், அதன் தன்மையே வேறு அல்லவா? இது தேவை என்பது போலக் காட்டிக் கொள்வதே, அதுவும் அவனிடமே கேட்பது, தப்பான ஊகங்களுக்கு இடமளிக்கக் கூடும் என்று, இவனுக்குத் தெரியாதோ?

ஆனால் அதை இவனிடம் விளக்குவதும் சரிவராது.

எனவே வேகமாக யோசித்து "அதில்லை நிகிலன் சார், எப்படியோ, உங்களுக்குத் திருமணம் ஆகியிருக்கும் என்பது போல ஓர் எண்ணம் எனக்கு இருந்தது. அப்படியில்லை எனவும், அது உங்கள் சொந்த வாழ்வு பற்றிய விவரம் என்பதை மறந்து, சட்டென்று கேட்டுவிட்டேன்.



Uploaded by Naghu

மன்னித்து விடுங்கள். இப்போது நாம் உங்களது தொழிலைப் பற்றியல்லவா, பேசிக் கொண்டிருந்தோம்" என்று பேச்சை வேறு திசைக்குக் கொண்டு சென்றாள்.

அத்துடன் நிறுத்திவிடாமல், தொடர்ந்து அதைப் பற்றி பேசவும் செய்தாள்.

"எத்தனை தொழில்களைப் போல, ஹோட்டல் தொழிலின் வளர்ச்சிக்கு எல்லையே கிடையாதுதான். இல்லையா சார்? எல்லாத் தெருக்களிலும் கிளைகள் திறந்து, எல்லா பெரிய ஊர்கள், எல்லா நாடுகள் என்று விரிவாக்கம் செய்துகொண்டே போகலாம். தாஜ், ஒப்ராய், கிராண்ட்... ஏன், உணவை மட்டும் அளிக்கும் சரவணபவன்... எத்தனை இல்லை?"

"அதிலும், வயிற்றுக்கு உணவளிப்பதால், இது உன்னதத் தொழிலும் கூட, பத்தே வாடிக்கையாளர்களை மட்டுமே உடையதாகச் சின்ன அளவில் இருந்தாலும், பசியைப் போக்கும் தொழில் ஆயிற்றே. இது. இதில் இளப்பத்துக்கு சற்றும் இடமே கிடையாது! என்ன நிகிலன் சார்?" என்று அந்தத் தொழில் பற்றித் தெரிந்ததையெல்லாம் அள்ளி விட்டாள் மகிமா.

"என்ன ஒரேடியாக சார் மோர் எல்லாம் அள்ளி விட்டாகிறது? ஒரேடியாகப் புளித்துப் போய்விடாமல், சற்று அளவுடனேயே நிறுத்திக் கொள்! ஆனால் என் தொழில் பற்றி நிறையவே தெரிந்து வைத்திருக்கிறாய்!" என்று ஆச்சரியப்பட்டான் நிகிலன்.

இந்த ஆச்சரியத்தின் பின்னிருந்த ஐயம் புரிய, நல்லவேளையாக அவனது திருமணம் பற்றி வேறு பேசி சமாளித்தோம் என்று எண்ணிக் கொண்டாள் மகிமா. ஆனால் நிகிலனின் இந்தக் கேள்வியின் பதில், இயல்பாகவே அவளிடம் தயாராக இருந்ததால், தயங்காமல் பதிலையும் கூறினாள்.

"வேலை பார்த்த முதியோர் இல்லத்தில் பல துறைகளைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அவர்களோடு இலகுவாக உரையாடுவதற்காகப் பல்வேறு தொழில்கள் பற்றி படித்தேன்"

"பரவாயில்லை. உனக்குச் செய்யும் தொழிலே தெய்வம் போல!"

"உங்களை விடவா?" என்று புன்னகையுடனேயே திருப்பினாள் மகிமா.

அவன் புருவம் உயர்த்தவும், "சாப்பாட்டுக் கடைக்காரன் மகளா, என் மருமகளாவது என்று இளப்பமாக சொன்னார்கள் என்று, அவ்வளவு கோபப்பட்டீர்களே!" என்று நினைவூட்டினாள்.

லேசாகத் தோளை குலுக்கினான் நிகிலன்.



பிறகு "ம்ம்ம்... அந்தப் பேச்சை விட்டுவிட்டோம்! 'என் கடவுளே' என்று கூழைக் கும்பிடு போடுகிறான் என்று அந்த அசுரன் சொன்ன படியெல்லாம் ஆடினாரே, கடைசியாகப் பெரியவர் என்ன ஆனார்? யோசித்துப் பார்த்தால் அந்தக் கர்வம் பிடித்த மனிதனுக்கு உரிய தண்டனைதான் கிடைத்தது. அது நியாயமே... அவருக்கு நல்லது கெட்டது சொல்லாமல், அவர் கூடவே தலையாட்டிய அவருடைய மனைவியும் சேர்ந்து அழிந்ததையும், ஏதோ ஒரு விதத்தில் சரிதான் என்று விட்டுவிடலாம். ஆனால் மகன்? அவரையும் அழிய விட்டாரே! ஆசைப்பட்டு அவர்... அந்த சதானந்தன் மணந்த பெண், அவர்களுக்கு பிறந்த மகள்! எப்படி வாழ வேண்டிய குடும்பம் அது! ஆனால் மகளை வளர்க்கத் தன்னந்தனியாக ஆன்ட்டி எப்படிக் கஷ்டப்படுகிறார்கள்? அவசியமா? அந்தக் குடும்பத்துக்கு அவர்கள் செய்த அநியாயம்?

"ஆனால் பார், மூட்டிக் கொடுத்தவன் தப்பிவிட்டான்! ஆனாலும் யார் கண்டது? அவனுக்கும் எங்கேனும் ஒரு மரண அடி விழாமலா இருக்கும்? இப்போது அவன் எந்த நரகத்தில், எப்படி உழலுகிறானோ? கட்டாயம் உழன்றுதானே ஆக வேண்டும்! இதுவரை இல்லாவிட்டாலும், இனியேனும் அவன் துன்புற்றே தீர வேண்டும்!" என்று முடித்தபோது, நிகிலனின் குரலில் மீண்டும் வன்மம் தெறித்தது.

மணிவாசகத்தின் விரக்தி நினைவு வர "பெரும் சூழ்ச்சி செய்து, ஆண்டுக் கணக்கில் திட்டமிட்டுச் சம்பாதித்த பணம், அசுரன் லேசில் விட்டு விடமாட்டான். இன்று அவன் கோடீசுவரனாகக் கூட வாழக் கூடும் என்று அங்கிள் மனம் வெறுத்துப் பேசுவார்" என்றாள் மகிமா.

"இல்லை. அவனுக்கு ஏற்ற தண்டனை ஏதாவது இருக்கும். ஏற்கனவே பட்டிருப்பான். அல்லது இனியேனும் படுவான். கட்டாயமாய்!" என்றான் நிகிலன் உறுதியோடு.

மகிமாவுக்கும் அப்படித்தான் தோன்றியது.

என் கடவுளே என்று கூப்பிடுவான், கைகட்டி நிற்பான்... என்று மணிவாசகம் சார் சொன்ன, அதே கதை! அவரும் அசுரன் என்றுதான் சொன்னார். அசுரன் போல அவ்வளவு மோசமான மனிதன் என்பது அவனை அறிந்த இருவரின் ஒத்த கருத்தாக இருக்கிறது!

அவன் பற்றி மணிவாசகம் சொன்னதை நம்ப முடியாது என்றானே! முழுக்க முழுக்க அப்படியேதானே நடந்திருக்கிறது!

என்னவோ, அவர் தேடிய குடும்பம் அடியோடு அழிந்து விடவில்லை. சொந்த தம்பி போல அவர் நேசித்த அந்த சதானந்தனுடைய மனைவியும், மகளும் உயிரோடு இருக்கிறார்கள் என்றால், அதுவே அவருக்கு ஆறுதலாக இருக்கும். எப்படியோ வந்த



Uploaded by Naghu

வேலை முடிந்தது!

அந்த மனைவி, மகளைப் பார்க்கவும் முடிந்தால்... என்று யோசிக்கும் போதே, மகிமாவுக்கு ஓர் உண்மை உறைத்தது.

இதுவரை நிகிலன் கூறிய அனைத்துமே, அந்த மஞ்சரி, சதானந்தனின் அருகில்... பக்கத்து அல்லது எதிர் வீட்டில் அந்தச் சமயத்தில் வசித்திருக்கக் கூடிய யார் வேண்டுமானாலும், சொல்லக் கூடியதே. அதற்கு மேல் நுணுக்கமாக, அவன் எதையும் சொல்லவில்லை.

ஏன்? தெரியாதா, அல்லது....

நிகிலன் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் போல!

அவளது கவனம் அங்கில்லை என்று உணர்ந்து "என்ன கதை போரடிக்கிறதா? யோசனை வேறெங்கோ போய்விட்டது போலத் தெரிகிறதே! என்ன செய்வது? உனக்கு ஏற்றதான ஜிலுஜிலு ஜிகினாக் கதை இங்கே நடக்கவில்லையே! உண்மை கொஞ்சம் டல்லடிக்கத்தான் செய்யும்?" என்றான்.

"அப்பாடி! குட்டுவதற்கு வாய்ப்பை தேடிக்கொண்டே இருப்பீர்களா? ஜிலுஜிலு ஜிகினா கதை தேடுகிறவள், முதியோர் இல்லத்துக்கு விரும்பி வேலைக்கு போவாளா என்று கூட, யோசிக்க மாட்டீர்களா?" என்று அவனுக்குத் தானும் ஒரு குட்டு வைத்தாள் மகிமா.

"தப்புதான்" என்று; உடனே ஒத்துக்கொண்டான் நிகிலன். "ஆனால் உன் கவனம் இங்கே இல்லை என்பது, உண்மைதானே?" என்று மடக்கவும் செய்தான்.

அவளும் மறுக்கவில்லை.

"உண்மையேதான். ஆனால், நான் யோசித்ததும், நாம் பேசியது தொடர்பாகத்தான். ஒரு தம்பி போல அன்பு வைத்திருந்த மிஸ்டர் சதானந்தனுடைய குடும்பமே முழுவதுமாக அழிந்துவிட்டதோ என்று, அங்கிள் ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். மனைவியும் மகளும் இருக்கிறார்கள் என்றால், மிகவும் மகிழ்ச்சி அடைவார். நான் அவர்களைச் சந்திக்க, உங்களால் ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று அவன் முகத்தையே பார்த்துக் கேட்டாள் அவள்.

"முடியாது" என்ற அவனது பதில் அவள் ஓரளவு எதிர்பார்த்ததுதான் என்றாலும், சற்று ஏமாற்றமாகவும் உணர்ந்தாள்.

அதை அப்படியே விடப் பிடிக்காமல் "புரியவில்லை. உங்களால் அது இயலாது என்கிறீர்களா?" என்று தெளிவாகக் கேட்டாள் அவள்.

"அப்படியில்லை. நீ அவர்களைச் சந்திப்பதை அனுமதிக்க முடியாது என்றேன்" என்று அவனும் அழுத்தம் திருத்தமாகவே பதில் உரைத்தான்.



"ஏன்?" என்றாள் அப்போதும் அவள் விடாமல்.

அவன் சிறு கோபத்துடன் நோக்கவும், "ஏனென்றால், நீங்கள் இன்னும் என்னை நம்பவில்லை அதுதானே?" என்று மேலும் விளக்கம் கேட்டாள் மகிமா.

"இதோ பார், நான் முன்பு சொன்னேனே 'ரியல் எஸ்டேட் மதிப்பு' என்று. அதற்காக, ஏற்கனவே வேறு சிலர் அவர்களுக்கு ரொம்பவும் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இந்தத் துன்பமே வேண்டாம் என்று, ஒரு தரம், விடுதலைப் பத்திரத்தில் அவர்கள் கையெழுத்திடுவதைக் கடைசி நேரத்தில், நானே தவிர்த்திருக்கிறேன். அத்... அந்தத் திருமதி சதானந்தனுக்கு. அந்தச் சொத்து தேவையில்லை என்று தோன்றலாம். ஆனால், அவர்களுடைய மகள்? பாட்டன் சொத்து. அவளுக்கு உரியதுதானே? எத்தனையோ போய்விட்டபோதும், இதையும் ஏன் விட வேண்டும்?" என்று வாதாடினான் நிகிலன்.

பொறுமையாகக் கேட்டுவிட்டு "தேவையில்லைதான்! ஆனால், நீங்கள் இன்னமும் என் கேள்விக்கு பதில் சொல்லவில்லையே! என்னை நம்பவில்லையா என்று கேட்டேனே!" என்று மறுபடியும் கேட்டாள் மகிமா.

ஒருதரம் கண் மூடித் திறந்து "இந்த சங்கபூமி தொடர்பாக நாம் சந்தித்திராவிட்டால் நம் மனதால் எவ்வளவோ நெருங்கியிருப்போம்" என்றான் அவன்.

"நீங்கள் உங்களுக்காக மட்டும் பேசுங்கள். என் மனம் பற்றி, உங்களுக்கு என்ன தெரியும்? எந்த நிலையிலும் எனக்கு நம்பிக்கை முக்கியம்?" என்று எழுந்தாள் அவள்.

அவளை முந்திக்கொண்டு சென்று வழியை மறைத்தான் அவன். "மகி ப்ளீஸ்! இந்த விஷயத்தில் நான் சூடு பட்ட பூனை. விட்டுவிடக் கூடாதா? நாம் வேறு பேசுவோம்" என்றான் கெஞ்சுதலாக.

கெஞ்சுவது அவனுக்குப் பழக்கம் இல்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

'மகி' என்று அவன் அழைத்தது வேறு அவளை உலுக்கிவிட, மகிமா அசைவற்று நின்றாள்.

"ப்ளீஸ் மகிமா!"

ஓரேடியாகத் திருப்பிக் கொள்ள முடியாமல் "வேறு என்ன பேசுவது?" என்று கேட்டாள் அவள்.

"நம்மைப் பற்றி பேசுவோம்!"

அவள் திகைத்தாள்.

பார்த்து ஒருநாள் முழுதாக முடியவில்லை. அதற்குள் எத்தனையோ



Uploaded by Naghu

கோபதாபங்கள்! இதில் எதைப்பற்றி அவனோடு பேசுவது?

"பு...புரியவில்லை"

"புரியும்படியே சொல்கிறேன். சொல்லப்போனால், இதிலும் நான் சூடு பட்ட பூனையே என்றாலும், இது முழுக்க முழுக்க என் விஷயம். யாருக்கும் கட்டுப்பட்டிராததால் சுதந்திரமாகச் சொல்லலாம்"

அதாவது, சங்கபூமி உரிமையாளர்கள் பற்றிப் பேசுவது இல்லை என்று யாருக்கோ, அந்த மஞ்சரிக்கும், அவளுடைய மகளுக்கும் வாக்கு கொடுத்திருப்பதாகச் சொல்கிறானா?

தொடர்ந்த நிகிலனின் பேச்சில், அவளுக்குச் சங்கபூமி மறந்து போயிற்று!

ஏன்? பேசவே மறந்து போயிற்று எனலாம்?



## தீக்குள் விரலை வைத்தேன் 8

**கோ**வைக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததில் இருந்து, சங்கபூமி ஜபத்திலேயே இருந்ததால், மகிமா வேறு எதையும் கவனிக்கவில்லை.

அதிலும், மூத்த தலைமுறைக்குத்தான் அந்த விவரம் தெரியும் என்று எண்ணியிருந்ததால், அப்படிப்பட்ட முதியவர்களிடம்தான், அவளது கருத்தும் நிலைத்திருந்தது. அவர்களில் யார் யாரிடம் கேட்கலாம் என்று அதே யோசனை!

Uploaded by Naghu

ஆனால், திருமணத்தின்போது, பெரும்பான்மை விருந்தாளிகள் தங்குவதற்கும், அவர்களது போக்குவரத்துக்கும், நிகிலனது 'வெண்ணிலா' நட்சத்திர ஹோட்டலும், அவனது 'ட்ராவல்சு'மே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மல்லிகாவுடைய தந்தை உறவு என்பதோடு ஊரில் பெரிய மனிதரும் கூட, எனவே, எல்லா ஏற்பாடுகளையும் நிகிலன் நேரிலேயே கவனித்தான்.

அதில் மணப்பெண்ணுடைய தோழிகளுக்கு ரயில் நிலையத்திலிருந்து ஹோட்டலுக்குச் செல்ல வாகனங்கள் ஏற்பாடு செய்யும்போதே, நிகிலனின் மனதில் மகிமா பற்றி ஒரு சலனம் ஏற்பட்டுவிட்டது.

ஆனால், அவளோ நிமிர்ந்து அவனைப் பார்க்கக் கூட இல்லை.

மற்றவர்களைப் போல, அவனது கவனத்தை கவர, அவள் முயற்சிக்காதது, முதலில் அவளிடம் மதிப்பை ஏற்படுத்தினாலும், அதன் காரணமாக அவளது சங்கபூமி விசாரணை, அவனை ஏமாற்றமடைய



வைத்தது.

'கொக்கு ஒன்றே மதி' என்பது போல, அவள் அதே குறியாகச் செயல்படவும், வேறு யாருக்காகவோ வேவு பார்க்கத்தான் வந்திருக்கிறாள் என்று, ரொம்ப நிச்சயமாக நினைத்தான்.

நிகிலனின் திருமணப் பேச்சு தொடங்கி, இந்த நாலைந்து ஆண்டுகளில், அவனது மனதில் சலனத்தை ஏற்படுத்திய முதல் பெண் பொய்த்துப் போன ஆத்திரத்தில் அவளை மிரட்டி, விரட்டுவதுதான் முதலில் அவனது நோக்கமாக இருந்தது.

ஆனால், அவள் நடந்துகொண்ட விதத்தில் கவடற்ற ஒரு நிமிர்வு தெரியவே, ஒருவேளை., அவள் சொன்னது உண்மையாக இருக்கலாமோ என்ற சந்தேகம் தோன்ற, அவளைச் சங்கபூமிக்கே கூட்டிச் சென்றான்.

அப்போதும் அவளை முழுதாக நம்பினான் என்று சொல்ல முடியாது. ஆனால், இப்போது தொடர்ந்து அவளிடம் பேசப் பேச, அவன் மனம் மாறிவிட்டது.

எதிர்காலத்தில் அவர்களுக்கிடையே ஒரு நல்ல உறவு மலரக் கூடும் என்ற நம்பிக்கையும் வலுத்துவிட்டது!

நிகிலன் பேசப் பேச, மகிமாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. எதுவும் புரியாத திகைப்பு!

இவன், இவ்வளவு சொல்கிறான். அவள் எதையும் கண்டு கொள்ளவில்லையே... என்ற வியப்பு! திருமண மண்டபத்தில் அந்தப் பெரியவர் விசாரித்ததுப் பற்றிக் கூட, இன்றுதானே அவளுக்குச் சந்தேகம் வந்தது!

இத்தனைக்கும், அவள் ஒன்றும், மனித இயல்பு பற்றி எதுவும் தெரியாதவளும் அல்ல.

அவள் ஒரு பணக்காரப் பெண். அதிலும் ஒரே வாரிசு என்பதால், அவளிடம் நிறையப் பேர் வழிந்திருக்கிறார்கள். அந்த வழிசலைத் தவிர்ப்பதற்காகவே, இளைஞர்கள் பக்கம் திரும்பாமல் விலகிப் போவாள், அவள்.

இப்போது கோவையில் நிகிலனைக் கவனியாததன் காரணம் கூட, அதுவாகவே இருக்கலாம்.

பெரிய மனிதனான என் மகள் எனும்போது, எல்லாப் பயல்களும் ஜொள்ளு விடத்தான் செய்வார்கள் என்று பராசரன் பெருமை பேசுவதை, இந்தக் காதில் வாங்கி, அந்தக் காதால் விடுவாளே தவிர, எந்தப் பாதிப்பும் மகிமாவுக்கு வந்தது கிடையாது.

வழிசல்காரர்களை ஒதுக்கி, விலக்கிவிட்டுத் தன் போக்கில் போய்க்கொண்டே இருப்பாள். தொடர்ந்து தொல்லை செய்தால்,

முகத்துக்கு நேராகவே மறுத்துச் சொல்லியும் விடுவாள்.

ஆனால்... இது போலச் செய்வது அறியாத திகைப்பு, அவளுக்கு. இதுவரை நேர்ந்தது கிடையாது!

அத்தோடு, அவன் மனம் எப்படி என்றாலும், அவளைப் பொறுத்தவரை அன்றுதான் பார்த்த ஒருவனிடம் அதுவும் பழகிய நேரத்தின் பெரும் பகுதியைக் கோப தாபங்களில் செலவிட்டவனிடம் அவள் மயங்கிவிட வாய்ப்பே கிடையாது.

தான் நடந்துகொண்ட விதத்துக்காக, அவன் என்னதான் சமாதானங்கள் சொன்னாலும்...

அவளது இறுக்கத்தைக் கவனித்துவிட்டு "நான் ஒன்றும், இப்போது எனக்குச் சாதகமான பதிலை சொல்லு என்று கேட்கவில்லை, மகிமா. நீ நாளைக்குக் கிளம்புவதாக ஏற்பாடு செய்திருக்கிறதில்லையா? அதுவரை, இன்றைய வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, இருவரும் சாதாரணமாகப் பழகுவோம். பிறகு பார்ப்போம். இப்போது... வாயேன். இந்த ஹோட்டலைச் சுற்றிக் காட்டுகிறேன்" என்று அழைத்தான் அவன்.

மறுப்பதற்குக் காரணம் இல்லை என்று, மகிமாவுக்குத் தோன்றியது.

அவளுடன் வந்த தோழிகள் எல்லோரும் வெளியே சென்றிருந்தனர். மொட்டு மொட்டென்று தனியே உட்கார்ந்திருப்பதற்கு, இந்த ஹோட்டலைச் சுற்றிப் பார்க்கலாமே, பிற்பாடு, அவளுடைய தந்தை ஹோட்டல் தொழில் தொடங்கினால், இந்த அனுபவம் பயன்படவும் கூடும்!

அவரும் புதிது புதிதாக முயற்சி செய்து கொண்டே இருப்பவர்தான். லாபத்துக்கு மட்டும் உத்திரவாதம் இருக்க வேண்டும்! அவ்வளவே!

ஹோட்டலின் வண்ணப் பூச்சுகள், எடுத்துக் காட்டும் விதமாக அங்கங்கே தொடங்கிய அழகான சட்டமிடப்பட்ட உயர் வகைச் சித்திரங்கள். கண்ணோடு கருத்தையும் கவர்ந்த பிரம்மாண்டமான 'ஷாண்டலியர்'கள் ஒவ்வோர் அறையும் அலங்கரிக்கப்பட்டிருந்த விதம்... எல்லாமே மகிமாவுக்கு மிகவும் பிடித்தன.

தற்பெருமை தொனிக்காத விதமாக, நிகிலன் எடுத்துச்சொன்ன விதம், அவளுக்கு இன்னமும் அதிகமாகப் பிடித்தது!

என்னதான் முயன்றாலும், தந்தை இதை என்ன மாதிரிப் பெருமையடித்துக் காதைத் துளைத்திருப்பார் என்று அவ்வப்போது ஒத்துப் பாராமல் அவளால் இருக்க முடியவில்லை.

நல்லவேளையாக எடுத்துக் காட்ட அவனுக்கும், பார்த்து மகிழ அவளுக்கும் நிறைய இருந்ததால், தகப்பனாரின் தன்மை குறித்து வருந்த, அவளுக்கு அதிக அவகாசம் கிடைக்கவில்லை!



சிறார்களுக்காக அமைக்கப்பட்டிருந்த விளையாட்டுப் பகுதி, அவனுக்குப் பிடித்தமான இடம் போலும். டிராகன் வடிவில் அமைக்கப்பட்டிருந்த சறுக்கு மரம், ஜங்கிள் ஜிம், ஊஞ்சல், சீசா, சின்ன மெரிகோரவுண்ட்... எல்லாமே நன்றாகப் பராமரிக்கப்பட்டு, கண்ணை கவரும் வண்ணங்களில் பளபளவென்று இருந்தன.

சற்று முன் சின்ன சிறார்களுக்கு உதவி செய்த பள்ளிச் சிறுமியின் நினைவு வர, மகிமா, நிகிலனின் பக்கம் திரும்பினாள்.

"உங்களிடம் ஓர் ஆலோசனை சொன்னால், தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே?"

"கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்!" என்று முறுவலித்தான் அவன் "ஆனால், தப்பாக ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்?" என்று கேட்டான்.

"இல்லை... அப்பாவுக்கு, அவரது வேலையில் குறுக்கிட்டால் பிடிக்காது..." என்று இழுத்தாள் அவள்.

நாளெல்லாம் யோசித்துச் செய்கிறவன் என்ன, முட்டாளா, என்பார். நானே யோசித்துச் செயல்பட்டுத்தான் இவ்வளவு சம்பாதித்து வைத்திருக்கிறேன். இதற்கு மேலும், உங்கள் யாருடைய ஆலோசனையும், எனக்கு அவசியம் இல்லை என்று அலட்சியப்படுத்துவார்.

அதையெல்லாம் நினைத்து மகிமா தயங்கியபோது "என்னைப் பொறுத்தவரையில் இது போன்ற, உன் ஆக்கப்பூர்வமான குறுக்கீடுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன் மகி! எப்படியும் ஒரு மூளைக்கு இரண்டு மூளைகள் வேலை செய்தால், விளைவு சிறப்பாகத்தானே அமையும்? சொல்லும்மா!" என்று ஊக்கினான் நிகிலன்.

'மகி'யாமே! சிறு தடுமாற்றத்தைச் சமாளித்துக்கொண்டு, அவள் சொன்னாள்.

"அ...அது வந்து... உங்கள் சிறுவர் விளையாட்டுப் பகுதியில், எல்லாம் நன்றாக இருக்கிறது. ஆனால், பிள்ளைகள் விளையாடும்போது, கண்காணிப்புக்கு ஆள் இருப்பது, நல்லதல்லவா? விழுந்தால் தூக்கி விடவும், தவறாக விளையாடி அடிபட்டு விடாமல் காப்பதற்கும், விளையாடும் போது உதவி செய்வதற்கும் பெரியவர்கள் யாராவது இங்கே இருப்பது நல்லதல்லவா?"

"ஆனால், பிள்ளைகள் பெற்றோரின் பொறுப்பு இல்லையா? ஊரை விட்டு வெளியூர் செல்லும்போது, இன்னும் அதிக கவனம் இருக்க வேண்டாம்?" என்று பதில் கேள்வி கேட்டான் நிகிலன்.



Uploaded by Naghu

"இருந்தாலும், ஏதோ பிழை நேர்ந்தால், உங்கள் நிறுவனத்துக்குத்தானே கெட்ட பெயர் நிகிலன்?" என்று வினவினாள் மகிமா.

அவன் பேசாமல் பார்த்துக்கொண்டு நிற்க, அவள் தொடர்ந்தாள். 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்' என்பது போல, ஒரு தொழிலில் வளர்ச்சி என்பதே வாடிக்கையாளர்களின் நம்பிக்கையின் வளர்ச்சியைப் பொறுத்தது. பெண்கள், இங்கே பாதுகாப்பாகத் தங்கலாம் என்பது போன்ற ஒரு நல்ல நம்பிக்கையை இதிலும் வளர்க்கலாமே... சாரி பிடிக்காவிட்டால் விட்டுவிடுங்கள்" என்றாள் மகிமா.

"பிடிக்கவில்லையா? இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு!" என்று உற்சாகத்துடன் கூறினான் நிகிலன்.

அவள் ஐயத்துடன் நோக்கவும் "சத்தியம் மகிமா. ஒரு காரணம், இது உடனே கடை பிடிக்கப்பட வேண்டிய ஒரு நல்ல கருத்து, என்பது அடுத்தது... உன்னிடம் பாதிப்பு இருக்கிறது, என்பது! பார்த்தாயா? தொழில் வளர்ச்சி, வாடிக்கையாளர் நம்பிக்கை என்று எனக்காக யோசிக்கத் தொடங்கி விட்டாய்தானே?" என்று வெண்பற்கள் தெரிய புன்னகை செய்தான் அவன்.

சந்தோஷப் புன்னகை!

பதிலாக மலரத் தொடங்கிய முறுவலை அடக்கிக்கொண்டு, "அதெல்லாமில்லை. நல்லது என்று மனதில் பட்டால், யாரிடமும் சொல்லத்தான் செய்வேன்" என்றாள் அவள்.

Uploaded by Naghu

"மெய்யாகவா?" என்று புருவங்களை உச்சி மேட்டுக்கே கொண்டு சென்று அவன் பார்த்த பார்வையில் சிவந்த முகத்தைத் திருப்பிக் கொண்டு "ஆமாம், அப்படித்தான்!" என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

"ஆஹா! அப்படிங்களா மேடம்? நீங்கள் சொன்னால் ஒத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆனால், ஒரு சின்ன சந்தேகம். சற்று முன் இங்கே நின்றுதானே, தலைமை நிர்வாகியிடம் பேசிக் கொண்டிருந்தீர்கள்? அதுவும், ஹோட்டலின் குறை நிறைகள் பற்றியே, ஆனால் அப்போது எதுவும் தோன்றவே இல்லையே! ஹோட்டல் என்னது என்று தெரிந்ததும், என்ன மாதிரி ஐடியா தோன்றுகிறது. வெள்ளத்தனைய மலர் நீட்டமாம்! வாடிக்கையாளர் நம்பிக்கை வளர வேண்டுமாம்! அப்படியானால்தான், தொழில் இன்னமும் வளருமாம்! அடேங்கப்பா! அடேங்கப்பா!"

உற்சாக அருவியாய் அவன் கொட்ட, அவள் பிரமித்து நின்றாள்.!

இதுபோல, அவள் எண்ணிப் பார்க்கவில்லையே! ஆனால், அவன்



சொல்வதும் சரி போலத்தானே, தெரிகிறது! சற்று முன் நிர்வாகியோடு பேசிக் கொண்டிருந்தபோது தோன்றாத இந்தக் கருத்து, இப்போது எப்படித் தோன்றியது? அவராகக் கேட்டபோதும், அவளது சிந்தனை இப்படியெல்லாம் ஓடவே இல்லையே! எல்லாம் நன்றாக இருக்கிறது என்று சும்மா தலையாட்டினாளே!

ஹோட்டல் நிகிலனுடையது என்ற பிறகுதானே, அதன் நன்மை நாடி யோசிக்கவே தோன்றியிருக்கிறது. அவனது தொழில் சிறக்க வேண்டும் என்ற அக்கறையால் தோன்றிய யோசனை! இது, தோன்றிய நேரத்தைப் பார்க்கையில், இவன் சொல்வது சரியேதானா? இந்தக் கருத்தை ஏற்று, அவன் இன்னமும் வளர வேண்டும் என்கிற வேகம்.!

பார்வையை அவளிடமிருந்து பிரித்து உயரே நோக்கிவிட்டு, "இது என்ன... சாதாரண குல்மோஹர் மரம். போதி மரம் கூடக் கிடையாது. ஆனால், இதன் அடியில் யாருக்கோ ஞானம் பிறந்துவிட்ட மாதிரித் தெரிகிறது!" என்று கிண்டலடித்தான் நிகிலன்.

நிஜம்தானா? நிஜம்தானா?

வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி பறப்பது போன்ற உணர்வு அவளுக்கு. அன்று வரை, அவள் அறிந்திராதது! அமைதிப்படுத்திக் கொள்ள பெருமுயற்சி செய்ய வேண்டியிருந்தது.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு "பாருங்கள் நிகிலன், தயவு பண்ணி என்னை அவசரப்படுத்தாதீர்கள். நான் யோசிக்க வேண்டும். ரொம்ப அதுவரை வேண்டாம். இந்த மாதிரி நான் எண்ணிப் பார்த்ததே இல்லை என்பதால்... ப்ளீஸ், நிகிலன். இப்போதைக்கு இந்தப் பேச்சு வேண்டாம்!"

தன்னையறியாமலே, அவன் கேலியாகக் குறிப்பிட்ட 'சார், மோர்'களை விட்டுவிட்டதை, அவள் உணரவே இல்லை.

ஆனால், கவனத்துடன் பேச்சைக் கேட்டவனுக்கோ, உற்சாகம் குமிழியிட்டது! உல்லாசமும்!

கண்கள் பளபளத்தபோதும், அவளது வேண்டுகோளுக்காக அடக்கி "உன் விருப்பம் மகி!" என்றான் கனிவான குரலில். "நீ நன்கு யோசித்து, ஒரு முடிவுக்கு வாம்மா. அந்த முடிவு என்னவாக இருக்கும் என்பதில் எனக்கு நிச்சயம் இருக்கிறது. ஆனால், நீயாக முடிவெடுக்கும் வரையில், என் தரப்பில் எதுவும் நடக்காது! ஆனால், இடையில் அவ்வப்போது சந்திப்பதில்... ஊகூம், அப்படி கண்ணை விரிக்காதே, கண்மணி நான் குறிப்பிடுவது, ரொம்பவும் சைவமான சந்திப்புதான்மா., அதில் ஒன்றும் தவறிராது. சும்மா, ஒரு பார்வை! சொல்லும்மா, அடுத்து எப்போது பார்ப்பது" என்று தாபமாகக் கேட்டான்.

இளகி "அது... அனேகமாக, மணிவாசகம் அங்கிள் உடனே கிளம்பி

வருவார் என்று, நினைக்கிறேன். அவர் வரும்போது, அவரோடு வருகிறேன்" என்றாள் அவள்.

"எதிர்பார்த்துக் காத்திருப்பேன்!" என்றான் அவன்.

மணிவாசகத்தின் பெயர், அவனுக்கு எதையோ நினைவுபடுத்தியது போலும்! "பார் மகி, மஞ்சரி, நிலா பற்றி, நான் உன்னிடம் சொல்லாமல் இருப்பதன் காரணம், உன்னை நம்பாதது அல்ல. அது; அ... அவர்களது சொந்த விஷயம். தங்களை, யார் யார் அறியலாம். அறியக் கூடாது என்று தீர்மானிப்பதும், அவர்களது உரிமை! இதை நீ புரிந்து கொள்ள வேண்டும்!" என்றான்.

ஒப்புதலாகத் தலையாட்டினாள் அவள். "ஆனால், மணிவாசகம் அங்கிள்? அவரைச் சந்திப்பார்களா? என்று தெரியவில்லையே! அங்கிருந்து கிளம்பி வந்து, அங்கிள் ஏமாந்து விடக்கூடாதே!" என்று கவலையும் பட்டாள்.

"அப்படி நடக்காது என்று நினைக்கிறேன். கணவரிடம் உண்மையான அன்பு உள்ளவர்கள் பற்றி, ஆன்ட்டிக்கும் தெரியும். நன்றாகத்தான் நடத்துவார்கள்!" என்றான் நிகிலன்.

அன்பும், மதிப்புமாக நன்கு பேசிப் பழகுகிற குடும்பம் என்று, மகிமாவுக்கு புரிந்தது. ஆனால் 'புரிந்துகொள்' என்று அவன் சொன்ன பிறகு, அது பற்றித் துருவ மனமின்றி சும்மா இருந்தாள்.

மறுநாள் அவன் கிளம்ப வேண்டும் என்பது, இருவர் மனதிலும் சுமையாய் அழுத்த, பிரிந்து போக மனமின்றி, ஏதேதோ காரணத்தைத் தேடிப் பிடித்து இருவரும் பேசியபடி இருந்தார்கள்.

'வெண்ணிலா' ஹோட்டலின் மாலைச் சிற்றுண்டி நன்றாக இருக்கிறதா என்று சுவை பார்த்துச் சொல்லும்படி, நிகிலன் அவளை அழைத்துக்கொண்டு, சிற்றுண்டி சாப்பிடச் சென்றான்.

அந்த ஊரின் சிறப்புகள் பற்றி அறிய, நிகிலனிடம்தான் கேட்டாக வேண்டியிருந்தது, மகிமாவுக்கு.

பட்டுக் கத்தரித்தாற்போலப் பேசிப் பிரிய முடியாதில்லையா? வேறு சிலதும் பேசினார்கள்.

ரயில் நிலையத்தில் மகிமா, அவனை நிமிர்ந்து பாராதது பற்றிப் பேச்சு வந்தது.

"பொதுவாக ஹோட்டல், ட்ராவல்ஸ், மில்களின் பங்கு என்று பணத்தோடு என்னைச் சேர்த்துப் பேச்சு வந்துவிட்டதா? பெண்கள் சுற்றி சுற்றி வந்துதான் பழக்கம். நீ கொஞ்சமும் கண்டு கொள்ளாதது, தன்மானத்துக்கு பெரிய அடி மாதிரி ஆகிவிட்டது!" என்றான் நிகிலன்.

"அதென்ன அப்படி அலட்சியம்? சொல்லலாமில்லையா?"



Uploaded by Naghu

"பதில் உங்கள் பேச்சிலேயே இருக்கிறது" என்றாள் மகிமா "உங்கள் மாதிரிதான் எனக்கும். அப்பாவின் பணத்துக்காக, என்னையும் சுற்றி சுற்றி வந்தார்கள். இயல்பாகப் பார்த்தாலே போதும். அதற்கே என்னென்னவோ அர்த்தங்கள் கற்பித்து விடுவார்கள். அப்படி இல்லை என்றால், மண்டைக்குள் ஏறவே, ஏறாது! பெண்கள் அப்படித்தான் மாற்றி பேசுவார்கள் என்று, யாரோ உளறியதை மேற்கோள் காட்டுவார்கள்! பெண்களுக்கு முரட்டுத்தனம் பிடிக்கும் என்று எதிலோ ஒரு கிறுக்கன் பார்த்தானாம். அப்போதுதான் நான் கராத்தே படித்த புதிது. வந்த ஆத்திரத்தில் அவனைப் புரட்டிப் புரட்டி அடித்து விட்டேன். ஏன்டா என்றால், கண்ணால் அழைத்தேனாம்! எதற்கு வம்பு என்று முடிந்த அளவு பார்வையைக் கூட தவிர்த்து விடுவது!" என்று அவள் சொல்ல "ஓஹோஹோ!" என்று சிரித்தான் அவன்.

லேசாக முறுவலித்துவிட்டு "அப்பாவுக்கு ஏதோ ராசி. அவரது 'பரன் குரூப்' என்ன தொழில் தொடங்கினாலும் ஜெயித்துவிடும். இப்போது கூட..." என்று தொடங்கியவளை, உதட்டின் மேல் விரல் வைத்து தடுத்தான் நிகிலன்.

"வேண்டாம் மகி. உன் தந்தை, எந்தத் தொழிலில் எப்படி கொடி கட்டிப் பறந்தாலும், பறக்கட்டும். அது பற்றி எனக்கு ஒன்றுமில்லை. அவர் பற்றி எதுவும் தெரியும் முன்பாகவே, உனக்கு என் மனம் பற்றி சொல்லிவிட்டேன். அது, அப்படியே இருக்கட்டும். என் மனைவிக்குத் தேவையான எதையுமே, என்னால் கொடுக்க முடியும். என் வருமானம், என்னோடு, என் மனைவிக்குமே போதும்!" என்று அவன் கூறியபோது, மகிமாவின் மனம், அவனது காலடியில் அப்படியே சுருண்டு விழுந்துவிட்டது!



## தீக்குள் விரலை வைத்தேன் 9

மறுநாள் கிளம்புவதற்கு வெகுவாக முன்னாலேயே, சரியாக சொல்வதானால், அன்று காலையில் பொழுது விடியுமுன்னரே, மகிமாவுக்கு தன் மனம் பற்றி முழுமையான தெளிவு வந்துவிட்டது.

நிகிலனின் பேச்சு வன்மையில் அவன் விருப்பம் போல நாமும் எண்ணுகிறோமோ என்று அவளுக்கு இருந்த சிறு சந்தேகம் கூட, அன்றிரவு தனிமையில் இருந்து யோசிக்கத் தொடங்கியதுமே, அடியோடு மறைந்து போயிற்று!

அவளுக்கும் பாதிப்பு இருப்பதாக அவன் சொன்னது உண்மையே.

ஆனால், அதற்கு நிருபணம் அவன் குறிப்பிட்ட காரணம் மட்டும் இல்லை.

அதற்கு முன்பே, அவள் மனம் அவனிடம் சாயத் தொடங்கிவிட்டது என்பதை, யோசிக்கத் தொடங்கிய உடனேயே, மகிமா புரிந்து கொண்டாள்.

மற்றபடி, சங்கபூமிக்குச் செல்லுமுன், அவளை மிரட்டி, அலைய குலையத் தவிக்க வைத்தானே, அதைப் பற்றிப் புகார் சொல்ல வேண்டாம் என்று, அவள் எப்படி எண்ணக் கூடும்? அதுவும், என்ன மாதிரி மிரட்டல்! சற்று நேரம் என்ன மாதிரி கலங்கிப் போனாள்!

அதற்குப் பழி வாங்குவதை விட்டுவிட்டு, பாவம், அவனுக்கு வருமானம் போதுமே, பிழைப்புக் கெடுமே என்று, அவனிடம் பரிவு அல்லவா, அவளுக்குத் தோன்றியது!

என்ன கஷ்டப்பட்டு, இந்த மாதிரி ஆகிவிட்டானோ என்று, இரக்கம் வேறு! தனக்குத் கெடுதல் செய்ய முயன்றவன் என்ற எண்ணம், எங்கே நிலைத்தது?

புகார் சொல்லும்படி நிர்வாகி, முதலாளி அறைக்குக் கூட்டிப்போய் விட்டபோதுகூட, அன்பாகச் சொல்லி திருத்துமாறு கூறத்தானே நினைத்தாள்?

இதெல்லாம், அவனால் மனம் பாதிக்கப்பட்டு விட்டதன் அறிகுறியாக மட்டும்தானே, இருக்க முடியும்?

அவனுக்கும் அவளை மிகவும் பிடித்திருந்தது!

நல்லவேளையாக நிகிலனிடம் பணமும் நிறைய இருப்பதால், அவளுடைய தந்தையும், தலையாட்டி விடுவார்! எனவே, அவளது வீட்டில் பிரச்சினையே இராது.

நிகிலன் பேசுவதைப் பார்த்தால், அவன் வீட்டில் அவனது விருப்பம்தான் முடிவு என்பது நிச்சயமாகத் தெரிகிறது.

எந்த விதமானப் பிரச்சினையும் இல்லாமல் அழகாக நிறைவேறப் போகும் தன் காதலை நினைத்து மகிழ்ந்தவாறே, மகிமா சந்தோஷமாக உறங்கிப் போனாள்.

தோழிகள் அனைவரும், கிளம்புமுன் 'ஷாப்பிங்' என்று, மகிமாவையும் இழுத்துப் போனதால், அன்று நிகிலனோடு தனியே பேச, மகிமாவுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கிடைத்திருந்தாலும், பெற்றோருடன் பேசுமுன், நிகிலனிடம் தன் மனதை முழுதாகத் தெரிவிக்க, மகிமா விரும்பவில்லை.

பெற்றோருடன் பேசிவிட்டு, பணிபுரியும் இடத்தில் விடுப்புக் கேட்டு, தனக்குப் பதிலாக, ஆள் நியமிக்க ஏற்பாடு செய்து, இதனூடே



பராசரன், நிகிலனைச் சந்தித்துப் பேசி, நிகிலனுடைய வீட்டார் அவளைப் பார்த்து... நாள், நட்சத்திரம் கணித்து... அப்பாடியோவ்! திருமணம் என்றால் நிறையத்தான் வேலை இருக்கிறது.

ரயில் பயணம் முழுவதையும் சந்தோஷமான கனவுகளில் கழித்துவிட்டு வீடு வந்து பார்த்தால், ஏதோ முக்கியமான ஒப்பந்தம் காரணமாக பராசரன் காலையிலேயே கிளம்பிப் போயிருந்தார்!

"சென்ற வேலை முடியாமல், திரும்ப மாட்டார். அப்பா திரும்பி வர வெகு நேரம் ஆகக் கூடும்" என்றாள் தனலட்சுமி.

அன்னையிடம் முதலில் கூறி, அப்பாவிடம் தெரிவிக்கச் சொல்லலாமா என்று சற்று நேரம் யோசித்துவிட்டு அந்த யோசனை வேண்டாம் என்று கைவிட்டாள் மகிமா.

பொதுவாக க்ணவர் சொல்லுவதை, அப்படியே செய்கிறவள் தனலட்சுமி. சில சமயம், பராசரனின் மன நிலை அறியாமல், வாங்கிக் கட்டுவதும் உண்டு.

இந்த விஷயம் அப்படி ஆகக் கூடாது என்பது, மகிமாவுக்கு.

அவளது இனிய காதல் கதை, எப்போதும் எண்ணி எண்ணி மகிழ்வதாக இருக்க வேண்டும். ஒரு சிறு முகச் சிணுக்கம் கூட அதில் இருக்கக் கூடாது!

வேலை முடிந்து வந்து, பெற்றோரிடம் சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து, பணிக்குக் கிளம்பிச் சென்றாள் அவள்.

உடனடி வேலைகளை முடித்துக்கொண்டு, மணிவாசகத்தைத் தேடிச் சென்றாள்.

சங்கபூமி விவரங்களைக் கேட்டதும், அவர் ரொம்பவே மகிழ்ந்து போனார்.

"சதாவுடைய மனைவியும் மகளும் உயிரோடு இருக்கிறார்கள்! அடியோடு அழிந்து போய்விடவில்லை! இதுவே எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது, தெரியுமா?" என்று உணர்ச்சி வசப்பட்டு கூறி கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

யோசனையோடு பார்த்து "ஆனால், அவர்கள் அவ்வளவாக நல்ல நிலையில் இல்லையோ என்று எனக்கு சந்தேகம், அங்கிள்" என்றாள் மகிமா.

"நன்றாக இருக்க வாய்ப்பில்லைதான்! மருத்துவத்துக்குப் பணமில்லாமல் சதா உயிரை இழந்தான் என்றால், வேறு எப்படி இருக்க முடியும்? ஆனால் நிமிர்ந்து விடுவார்கள். முப்பது வருஷம் வாழ்ந்தவர்களும் இல்லை. முப்பது வருஷம் தாழ்ந்தவர்களும் இல்லை என்பார்கள். இன்றைய தாழ்வைப் போக்க உழைத்தே, உயரே வந்து



Uploaded by Naghu

விடுவார்கள்" என்றார் மணிவாசகம்.

அப்படித்தான் நடக்கும் என்று எண்ணினாள் மகிமாவும்.

உதாரணத்துக்கு அவளுடைய தந்தை இல்லையா?

தாழ்ந்த நிலையில் இருந்து, உழைத்து உழைத்து உயரே வந்து விடவில்லையா?

பிறவிப் பணக்காரன் போல அவர் போடும் வேஷத்தை விட, உழைப்பால் உயர்ந்த பணக்காரர் என்கிற உண்மை எவ்வளவோ மேல் என்று அவருக்குப் புரிந்தால், எவ்வளவோ நன்றாக இருக்கும்!

மாலையில் மகிமா வீட்டை அடைந்தபோது, அவளுடைய தந்தையும் வேலை முடிந்து, திரும்பி வந்திருந்தார். சாப்பாட்டு மேஜையில், அவருக்குப் பிடித்தமான சிற்றுண்டியும் காஃபியும்!

மகளைக் கண்டதும் "அட கண்ணு! என் செல்லம், வந்து விட்டாயா?" என்று உற்சாகத்துடன் கூவினார்.

"வாவாவா! அம்மா நல்ல முந்திரிப் பருப்பு கார சாரமாய் வறுத்து வைத்திருக்கிறாள். காரட், பீட்ரூட் அல்வா வேறு! சேர்ந்து ஒரு வெட்டு வெட்டலாம். வா, கையைக் கழுவிக்கொண்டு வந்து உட்காரு! இன்றைக்கு நான் ஜெயித்த கதையை வேறு சொல்ல வேண்டியிருக்கிறது!" என்று மகளை அழைத்தார் பராசரன்.

அவளும்தான், நல்ல விஷயம் சொல்ல வேண்டும்!

ஆனால், அதை அமுக்கும் கசப்புமாகச் சொல்லப் பிடிக்காமல் "நீங்கள் மெல்ல சாப்பிட்டுக்கொண்டே இருங்கள் அப்பா. இதோ, வேகமாக உடம்பு கழுவிக்கொண்டு வந்துவிடுகிறேன். நீங்கள் ஜெயித்த கதையை சீக்கிரமே வந்து கேட்கிறேன்" என்று வேகமாகத் தன் அறைக்குச் சென்றாள் பெண்.

தந்தையின் வெற்றி ஒரு சந்தோஷம் என்றால், அந்த வெற்றியில், அவர் நல்ல மனநிலையில் இருப்பது, அவளுக்கு மேலும் மகிழ்ச்சியைத் தந்தது.

அவளது சேதியும், அந்த மகிழ்ச்சியோடு, மகிழ்ச்சியாக சேர்ந்துவிடும்!

மின்னல் வேகத்தில் அவள் தயாராகி வந்தாலும், அதுவரை காத்திருக்க முடியாமல் "என்ன அருமையான விஷயம் சொல்லப் போகிறேன். அதை, இருந்து கேளாமல் குளிக்கப் போகிறாள் பார். பரவாயில்லை. நீ கேளு. அவளுக்கு இன்னொரு தரம் சொல்லிக் கொள்கிறேன்" என்று பராசரன், தன் விறுவிறுப்பான வெற்றிக் கதையை மனைவியிடம் சொல்லத் தொடங்கி விட்டார் போலும்.

உணவு அறையை நெருங்கும்போதே, அவரது குரல் ஏற்ற



இறக்கங்களுடன் தெளிவாகக் கேட்கலாயிற்று.

தந்தையின் வெற்றிகளுக்கு, அவரது குரல் ஒரு முக்கிய ஆயுதம் என்று மகிமா எண்ணுவதுண்டு.

உணர்ச்சிபூர்வமான குரலும், பொருத்தமான வார்த்தைகளை அவர் கூறும் விதமும்!

அப்போதும், வெற்றிப் பெருமிதத்தைத் தெளிவாகக் காட்டியவாறு, காட்சியைக் கண் முன்னே நடக்கச் செய்து கொண்டிருந்தார்.

".... பயல் என்ன, இப்படிக் கல் மாதிரி இளகவே மாட்டேன் என்கிறானே என்று, ஒரு கணம் நானே மலைத்துப் போனேன், தனம். அவன் விறைத்துக் கொண்டு நின்ற விதத்தைப் பார்த்து, போச்சு.. வருஷ லாபம் ஒரு கோடி வெறும் கனவுதான் இந்த ஒப்பந்தம் நமக்குக் கிடைக்கப் போவது இல்லை என்றே எண்ணிவிட்டேன்...." என்று தந்தை கூறியதைக் கேட்டு, அந்த நேரத்து அவரது வருத்தத்தைத் தனதாக உணர்ந்தபடியே, அறை வாயிலை அடைந்தாள் மகிமா.

பராசரன் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார் "...ஆனால் நான் விடுவேன்? என் கடைசி ஆயுதத்தை எடுத்தேன். மகாராஜா, மந்திரி எல்லாம் கொஞ்சமும் உபயோகப்படாது என்று என்றைக்கோ ஒதுக்கி விட்டேன் என்று, உனக்குத் தெரியும்தானே? வழக்கம் போல, மரியாதையாக கையைக் கட்டி நின்று, 'என் கடவுளே' என்றேனா, மனிதன் அப்படியே மசிந்து, குழைந்து, இழுத்த இழுப்புக்கு வந்து விட்டான்..."

கதவு நிலையைத் தாண்டி உள்ளே காலடி எடுத்து வைத்துக் கொண்டிருந்த மகிமாவின் அசைவுகள் அனைத்தும், தானாக நின்று போயின. மூச்சு கூட!

சில கணங்கள், அவளுக்கு எதுவுமே புரியாத நிலை!

என் கடவுளே, என் கடவுளே என்ற வார்த்தைகள் தவிர!

'என் கடவுளே என்பான்., கையை கட்டி நிற்பான்...' என்று ஒருவருக்கு இருவர் சொன்னார்கள்! அப்படியானால்... மேலே யோசிக்க, மகிமாவுக்கு பயமாக இருந்தது. திகில்!

இருக்காது. பாசமுள்ள தந்தை. கேட்டதை வாங்கிக் கொடுத்து, விரும்பிய படிப்பு படிக்க வைத்து, அன்பாக வளர்த்தவர்!

தொழிலில் கொஞ்சம் அப்படி இப்படித்தான் என்றாலும், அவர் அந்த அசுரனாக இருக்க முடியாது!

ஆனால்... 'என் கடவுளே' என்று...

அதற்குள் அறை வாயிலில் மகளைக் கண்டுவிட்ட பராசரன், உற்சாகத்துடன் அவளை உள்ளே வரச்சொன்னார்.



Uploaded by Naghu

"வாடாக் கண்ணு. நீ வர நேரம் ஆகுமோ என்று அம்மாவுக்குச் சொல்லத் தொடங்கிவிட்டேன். பரவாயில்லை. இப்போது உட்கார். உட்கார்ந்து, சாப்பிட்டுக் கொண்டே கேள். இன்னொரு தரம் தொடங்கி, முதலிலிருந்து முழுமையாகச் சொல்கிறேன்" என்றுவிட்டு, மனைவியிடம் திரும்பி "நீயும் இன்னொரு தரம் கேள்" என்று மறுபடியும் கதையைத் தொடங்கலானார்.

"காலையிலேயே கிளம்பிக் கடற்கரைக்குப் போனேனா, அங்கே விடிகிற நேரத்திலேயே அந்த கேதாரி குரூப் சேர்மன் கருணாகரன் நடக்கத் தொடங்கி விடுவாராம். கூடவே போய்...."

நெஞ்சுக்குள் தீப்பற்றி எறிந்து கொண்டிருந்தது. இந்தக் கதையெல்லாம் யார் கேட்பது?

"இப்போது நீங்கள் எ...என்னப்பா சொன்னீர்கள்?" என்று தவிப்புடன் கேட்டாள் பெண்.

ஆச்சரியமாகப் பார்த்தார், பராசரன் "அதைத் தானேம்மா, சொல்லிக் கொண்டு இருக்கிறேன். கடற்கரை மணலில் கால் புதையக் கஷ்டப்பட்டு அவரோடு..."

"அதில்லையப்பா. நான் வரும்போது"

"அதைத்தானேடா சொல்லிக்கொண்டு இருக்கிறேன். இடையிலிருந்து கேட்டால் நடந்ததில் ஏதெது முக்கியம் என்று, உனக்கு புரியாது, பார். அதனால் முதலில் இருந்தே கேள். இது நமக்கு, ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் லாபம் தரப் போகிற விஷயம். அதை, ஒரு வாரமாக, எப்படித் திட்டமிட்டுச் செயல்படுத்தினேன் என்று, உன் அம்மாவை விடவும் நீ நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நாளைக்கு, உனக்கு வரப்போகிற ஐநூறு கோடிச் சொத்தைப் பாதுகாத்துப் பெருக்க வேண்டியவள் நீதானே. அதனால், கவனமாக கேளு. நம் ரேட்டுக்குக் கருணாகரன் ஒத்துக் கொள்ள வைக்க வேண்டுமானால், அவரது மனதைத் தொட்டாக வேண்டும். அதனால் கால் வலித்தாலும் பரவாயில்லை என்று பீச் மணலில் அவரோடு சேர்ந்து..." என்று மறுபடியும் பராசரன் முதல் அடியைப் பிடித்தார்.

நெருப்பின் மீது நிற்பது போல, அப்போது மகள் அனுபவித்துக் கொண்டிருந்த கலக்கம் பற்றி, அவருக்கு என்ன தெரியும்?

நூற்றுக்கு ஒரு வாய்ப்பாகவேனும், அவள் காதில் விழுந்தது தப்பாக இருக்கக் கூடாதா, தந்தை கொடியவர் அல்ல என்று ஆகிவிடாதா என்ற தவிப்புடன், அவள் மீண்டும் கேட்டாள்.

"இதெல்லாம், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்ப்பா! நான் வரும்போது நீங்கள்..."



Uploaded by Naghu

"என்ன அப்புறம்?" என்று உறுமினார் தகப்பனார்.

அவருக்கு கோபம் வந்துவிட்டது!

ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் லாபம் தரக்கூடிய ஒப்பந்தத்தை எவ்வளவு கஷ்டப்பட்டுப் பிடித்தார் என்பதை, அணுவளவும் விட்டுவிடாமல், மனைவி மகளிடம் கூறிப் பெருமைப்படலாம் என்று பார்த்தால், அதை ஆசையாகக் கேட்க, இந்த முட்டாள் பெண்ணுக்கு அறிவில்லையே!

இத்தனைக்கும், இந்தப் பாடத்தைப் படிக்க வேண்டியவளே அவள்தான்!

அவர் பெருக்கி வைத்திருக்கும் ஐநூறு கோடியை பெயருக்கேற்றபடி ஆயிரமாக, பத்தாயிரமாக, அதையும் பல மடங்காகப் பெருக்கி, உலகப் பணக்காரர்களின் வரிசையில் இடம் பிடிப்பதற்கு அடிப்படை இதுதானே? இதைப் பொறுமையாகக் கேட்கத் தெரியவில்லை என்றால், அவரது விருப்பம் எப்படி நடக்கும்?

கணவனின் கோபத்தை மாற்றும் முயற்சியாக, "மகிக்கு நல்ல பசியிருக்கும். வாம்மா, கொஞ்சம் கேரட் அல்வா சாப்பிடு. என்னப்பா, உங்களுக்கும் கொஞ்சம் வைக்கட்டுமா?" என்று தனலட்சுமி கேட்டாள்.

மறுத்தால், அது பற்றிய விவாதத்தில் வேறு நேரம் வீணாகுமே என்று, சும்மா இருந்தாள் மகிமா.

இனிப்பை வேண்டாம் என்று சொல்லி, பராசரனுக்குப் பழக்கமில்லை. அதிலும் தொண்டையில் வழுக்கிக்கொண்டு உள்ளே போகும் அல்வா!

"போடு" என்று மனைவியிடம் சொல்லிவிட்டு மகளிடம் திரும்பினார்.

சற்று தணிந்து "பார் மகி. நம் சொத்து மதிப்பு ஐநூறு கோடி! தனி ஆளாய், அவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறேன். அத்தனைக்கும் வாரிசு நீதான். இது குறையாமல் காப்பதோடு, பெருக்கவும் வேணும் என்றால், ரொம்பக் கெட்டிக்காரத்தனம் வேண்டும். பொறுமை விடா முயற்சி எல்லாம் வேண்டும். நீ கெட்டிக்காரிதான். சரியான துறையில் இல்லை என்றாலும், உன் முயற்சியிலும், குறை சொல்ல முடியாது நினைத்ததை சாதிக்கிறவள். இல்லையென்றால், இந்த வேலையில் சேர்ந்திருக்கவே முடியாதே! ஆனால் பொறுமை? ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, பொறுமையாகக் கேளாமல், அதென்ன குறுக்கே, குறுக்கே பேசுவது?" என்று அமைதி போலக் காட்டி, ஒரு குட்டும் வைத்து, அறிவுரையும் சொன்னார்.

தந்தையின் முசுட்டுத்தனம், மகிமா அறிந்ததே! அவர் விரும்பாத

எதையும் அவர் வாயிலிருந்து வரவழைக்கவே முடியாது! காத்திருந்து தான் தீர வேண்டும்!

உள்ளூர எரிந்த தீயை மறைத்து "அதில்லைப்பா. நான் உள்ளே வரும்போது என்னவோ, ராஜா, மந்திரி என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள்! க...கடவுளே என்று கூடக் கூப்பிட்டு... அதுதான், ஓர் ஆவல் வந்து விட்டது!" என்று மகிமாவும் மெதுவாகப் பேசி, அப்போதும் ஒரு முயற்சி செய்து பார்த்தாள்.

ஆனால் சற்று இளகியபோதும், கண்டிப்பான குரலிலேயே "எல்லாம் சொல்லுவேன், கண்ணு. அதது வரவேண்டிய இடத்தில் தானாக வரும். நீ குறுக்கே புகுந்து குட்டை குழப்பாமல், அமைதியாகக் கேள்" என்று அதட்டலாகக் கூறிவிட்டு, பராசரன் மறுபடியும் கதையைத் தொடர்ந்தார்.

வேறு வழியின்றி தட்டில் இருந்ததை அளைந்தவாறே, தந்தையின் பேச்சை கவனத்துடன் கேட்பது போல பாவனை செய்தாள் மகிமா.

மனம் போராடியது.

இருக்குமா? இருக்காது.

சும்மாத் தந்தைக்குமே, இப்படி ஓர் ஐடியா தோன்றியிருக்கக் கூடும். ஒரே எண்ணம், இரண்டு பேருக்குத் தோன்றாதா, என்ன?

ஒரு தோற்றத்துக்காக வாயில் வைத்ததை விழுங்கும் முயற்சியில் தண்ணீரை எடுத்தவளுக்கு வேறு தோன்றியது.

அன்றைக்கு 'சங்கபூமி' பெயரைக் கேட்டதும், இருவருக்கும் புரையேறவில்லை? பிறகும், அந்தப் பேச்சை என்ன மாதிரி தவிர்த்தார்கள்.

அன்று மனதில் தோன்றிய காரணங்கள், இப்போது வெறும் சப்பைக்கட்டுக்களாகத் தோன்றின.

அப்படியானால்... ஐயோ...

தவிப்புடன் பெற்றவரை கூர்ந்து கவனித்தாள். பேசும் பாணியில் இருக்கும் அலட்டல்... அது, தானாகச் சம்பாதித்து முன்னுக்கு வந்தவர்களிடம் இருக்கும்தானே?

ஆனால் தானாக எப்படிச் சம்பாதித்தார்? நம்பிய இரு முதியவர்களின் மரணத்திலா? மனச்சாட்சி உறுத்துமே! அந்த உறுத்தலோடு இப்படிப் பேச முடியுமா? இப்படி...

"....திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். மனிதன் காதே கேளாத மாதிரி ரொம்ப விறைப்பாகவே இருந்தான். அவன் சொன்ன தொகைக்கு குறைந்தால், நிறுவனத்துக்கு லாபம் ரொம்ப குறைந்து போகுமாம். என்னமோ, நிறுவனத்து லாபம் முழுவதும், இவன் பைக்குள் போகிற மாதிரி, அலட்டினான். என்ன லாபம் வந்தாலும், பங்குதாரர்களுக்குப்



Uploaded by Nagu

பிரித்துக் கொடுப்பதிலேயே எல்லாம் போய்விடும். ஏதோ கொடுப்பதை வங்கிக்கொண்டு கையெழுத்துப் போட்டால், அவனுக்கும் பத்துப் பதினைந்து பெரிய ரூபாய் வரவு. நமக்கும் லாபம் யோசித்து, ஏதாவது கேட்பான் என்று பார்த்தால், மடச் சாம்பிராணிக்கு, அந்த எண்ணமே இல்லை...." என்று பராசரன் சொல்லிக் கொண்டிருந்தார்.

சொந்த நிறுவனத்துக்கு எதிராகச் செயல்பட, உரிமையாளர்களில் ஒருவருக்கு லஞ்சம்! கட்டிடத்துக்குள்ளேயே கறையான் புற்றை வளர்க்கிறார், பெரிய தப்பல்லவா? உறுத்தலையே காணோமே!

அப்படியானால்? இவரேதானா?

மகளின் கண்களில் என்ன கண்டாரோ "கருணாகரனை எதனால் மடச்சாம்பிராணி என்றேன், சொல்லு" என்று கேட்டார்.

கவனிக்கிறாளா என்று சந்தேகம் தெளிகிறாராம்.

நல்லவேளை, இப்போது கேட்டார் என்று எண்ணியபடி "நிறுவனத்துக்காகச் சொந்த வருமானம் பல லட்சங்களை இழப்பதால்" என்றாள் மகிமா.

உற்சாகமாகிவிட்டது பராசரனுக்கு.

"சரி....யாகச் சொன்னாய்! " என்று மகளை மெச்சியவர் மனைவியிடம் திரும்பி "போடுடீ இன்னொரு கரண்டி அல்வா! அட நிறையத்தான் வையேன்? எதற்கு இந்தக் கஞ்சப் பிசுநாரித்தனம்? உன் அப்பன் வீட்டில் இருந்து கொணர்ந்ததா? நான் சம்பாதித்ததுதானே?"

லேசாக முகம் இறுகியது தவிர, எந்த வித மாற்றமும் இன்றி, தாயார் அல்வாவை எடுத்து வைப்பதைப் பார்த்த மகளுக்கு, மனம் இன்னமும் துடித்தது.

தந்தை கொஞ்சம் அலட்டல்காரர் என்பது தவிர, இது போன்ற குட்டல், குறுக்கல்களை, அவள் அவ்வளவாகக் கண்டு கொண்டது இல்லையே!

மேலே மேலே தரம் குறைந்து கொண்டே போகிறாரே! அப்படியானால், இவரேதானா? கடவுளே! 'என் கடவுளே' என்பான்... ஐயோ...

உள்ளத்தின் தவிப்பை முகத்தில் காட்டாதிருக்க, மகிமா கடும்பாடு பட வேண்டியிருந்தது.

ஸ்பூன் நிறைய அல்வாவை எடுத்து, வாயில் அடைத்து விழுங்கிவிட்டு, பராசரன் சுயப் பிரதாபத்தைத் தொடங்கினார்.

"பேச்சை எங்கேடீ விட்டேன்... ஆங், நினைவு வந்து விட்டது. கஷ்டப்பட்டு, யோசித்து, ஜெயித்தவன் அல்லவா? அதுதான். எனக்கு உடனே நினைவு வந்துவிட்டது! கிட்டத்தட்ட தொண்ணூறு சதம், இந்த

ஒப்பந்தம் நமக்கு கிடைக்காது என்கிற நிலை. ஆனால் பார் மகி, சரி போகிறது என்று நான் விட்டு விடவில்லை! இன்னமும் மேலாக என்ன என்று யோசித்தேன். கடைசியில், உச்சந் தலையிலேயே ஐஸ் வைத்து, அவன் மூளையை வேலையே செய்ய விடாமல் உறைய வைத்துவிட்டேன்!"

"இப்போது, இதுதான் மிக முக்கியமான கட்டம். வருஷக் கணக்காக யோசித்து, நான் கண்டுபிடித்த வெற்றி ரகசியம்! நீ கட்டாயமாக கற்றுக் கொள்ள வேண்டியது. நன்றாகக் கவனி..."

நகங்கள் உள்ளங்கையில் குத்திப் புண்ணாகும் அளவு இறுகிய கைகளை பெற்றோர் காணாதபடி, மேஜைக்கடியில் வைத்துக்கொண்டு மகிமா தந்தையை வெறித்துப் பார்த்தாள்.

விஷயம் வெளியே வரப் போகிறதா? அது விஷமேதானா?

மூச்சைப் பிடித்துக்கொண்டு மகிமா காத்திருக்க, பராசரன் தொடர்ந்தார். "எல்லா மனிதருக்குமே, தன்னைப் போல உண்டா என்று ஒரு நினைப்பு இருக்கும், மகிமா. நாம் அதற்குத் தீனி போட வேண்டும்! சரியான தீனி. உனக்கு மட்டுமல்ல, என்னைப் பொறுத்தவரையிலும் கூட, நீதான் உலகத்திலேயே சிறந்தவன் என்று காட்ட வேண்டும். முன் காலத்தில் பெரிய பெரிய ராஜாக்கள் இருந்தார்கள். ஆனால், இது மன்னர்களுக்கு மதிப்பு குறைந்துவிட்ட காலம். மந்திரிகள்தான் பலவான்கள். ஆனால், அதற்காக என் மந்திரியே என் மந்திரியே என்று அழைக்க முடியுமா? உனக்கு, நான் மந்திரியா என்று அடிக்க வருவான்! அதனால்தான், இதற்கு மேலே என்று போகவே முடியாத, கடவுளைப் பிடித்தேன். 'என் கடவுளே' என்றால், கவிழாதவர் யாருமே கிடையாது. என் முதல் ஒன்றரைக் கோடியை இப்படித்தான் சம்பாதித்தேன். பிறகு, இறங்கவே இல்லை. இன்றைக்குப் பார். ஐநூறு கோடிக்கு அதிபதி" என்றார் கர்வத்துடன்.

'அரை விலைக்கும் கால் விலைக்குமாய் அன்றைக்கே ஒன்றரை கோடிக்கு அசுரன் விற்றானாம்'

அசுரன் நல்ல பட்டம்! வைத்தியத்துக்கு பணமில்லாமல் இறந்த சதானந்தன்! சிரம நிலையில் இருக்கும் அவருடைய மனைவி, மகள்!

மகளின் பாராட்டுக்காகக் காத்திருந்தவரை ஒரு திடத்துடன் நேராகப் பார்த்தாள், மகிமா.

"சங்கபூமி உரிமையாளர்களிடமிருந்து, அவர்களது சொத்துக்களை பிடுங்கிய கதை. இதுதான்! இல்லையாப்பா?" என்று நிதானமாகக் கேட்டாள்.





# தீக்குள் விரலை வைத்தேன் 10

'கடப்பாரையை விழுங்கி ஜீரணம் செய்கிறவன்' என்று, எந்தத் தப்பையும் துணிந்து செய்துவிட்டு, கலங்காமல் இருந்து அதைச் சமாளிக்கிறவர்களைச் சொல்லுவார்கள்.

பராசரன் அந்த மாதிரி மனிதர் என்பதை, அன்று மகிமா அறிய நேர்ந்தது.

மகளின் குற்றச்சாட்டை, அவர் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை. 'அவுட் ஆஃப் ப்ளூ' என்பார்கள். அதுபோல, எந்த வித எச்சரிக்கையும் இல்லாமல், வானத்திலிருந்து இடி போல வந்து விழுந்தது.

ஆனாலும் எந்த விதப் பரபரப்பும் இன்றி, அவளது மனநிலையைப் படிப்பவர் போன்று, அவளைக் கூர்ந்து பார்த்தபடி, அவர் அசையாமலேயே இருந்தது, அவளுக்கு ஆச்சரியமே.

ஆனாலும், தனலட்சுமியைக் கடவுள் அவ்வளவு கடினமான பொருளால் செய்யவில்லை போலும்!

கணவர் குத்துமுன், அவருக்கு இன்னும் கொஞ்சம் அல்வாவை வைப்பதற்காகக் கரண்டியை எடுத்திருந்தவள், அதிர்ச்சியில் துள்ளி குதித்ததோடு, கரண்டியையும் கீழே போட்டுவிட்டாள்.

"அச்சச்சோ என்னம்மா நீங்கள்!" என்றாள் மகிமா. "பாத்திரங்கள் விற்கிற விலையில், இப்படி கரண்டியைப் போட்டு உடைத்தீர்கள் என்றால், அப்பாவுக்கு ஆத்திரம் வராதா? உழைத்து வேர்வை சிந்தி, நேர்வழியில் சம்பாதித்த ஐநூறு கோடியில், ஐம்பது ரூபாய் குறைந்துபோகுமே! அந்த நஷ்டத்தை கணக்கிட்டு, அப்பாவுக்குத் தூக்கம் கெட்டுப் போய்விடாது?" என்றபடி குனிந்து, கரண்டியை எடுத்துக் கொடுத்தாள்.

"அப்பாடி! நல்லவேளையாக உடையவில்லை!"

அவளது சீண்டலுக்குப் பலன் இருந்தது.

"என்னடீ நக்கலா?" என்று சீறினார் பராசரன். "இந்தப் பணத்தை நான் எப்படிச் சம்பாதித்தேனோ, என்பது இருக்கட்டும். ஆனால், இந்த அப்பன் சம்பாத்தியத்தில்தான் நீ உண்டு, உடுத்து, வளர்ந்ததும், படித்ததும்! அது முதலில் நினைவிருக்கட்டும்?" என்றார் அதட்டலாக.

"மறக்குமாப்பா?" என்றாள் மகள் வேதனையோடு "ஒரு குடும்பத்தை நாசமாக்கி சம்பாதித்த பணத்தில், நீங்கள் சொன்ன மாதிரி உண்டு, உடுத்து வளர்ந்த வேதனை. உயிர் உள்ளவரை,

Uploaded by Naghu

போகுமாப்பா?"

"உளறாதே! கை நிறைய பணத்தை எடுத்துப் போ. நாலு துணி, நாலு நகை வாங்கிகொண்டு வா! எல்லாம் மறந்து விடும். எவ்வளவு வேண்டும்? சொல்லு" என்று பைக்குள் இருந்த பர்சை எடுத்தார் பராசரன்.

"மறக்காதுப்பா?" என்றாள் மகள் உறுதியோடு. "அங்கே யாரும் உங்களை மனிதராகக் கூட, மதிக்கவில்லை தெரியுமா? உங்களை 'அசுரன்' என்கிறார்கள் அப்பா! அதுதான் பொருத்தமாம்! பெயர் தேவையே இல்லையாம்! அப்போது உண்மை தெரியாது. யாரோ கொடியவன் என்று, சும்மாக் கேட்டுக் கொண்டு வந்தேன். ஆனால் இப்போது மனதிற்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது, தெரியுமா? வேண்டாம்ப்பா! இந்தப் பணம் நமக்கு வேண்டாம். அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுங்களப்பா ப்ளீஸ்!" என்று கெஞ்சலாகக் கேட்டாள் மகள்.

"அடி செருப்பாலே!" என்பது பராசரனின் பதிலாக இருந்தது!

"முட்டாள் முட்டாள்! நான் என்னமோ, உன்னைப் பற்றி பெரிதாக, என்னென்னவோ நினைத்தேனே! யாரோட போதனைடி, இது! நீ இப்படி அறிவு சூன்யம் கிடையாதே! நீ இப்படிப் பேச வேண்டுமானால், யாரோ, சாவி பலமாகக் கொடுத்திருக்கிறார்கள். யாரடீ அது?"

ஆத்திரத்துடன் 'டீ' போட்டு பேசும் தந்தையை வருத்தத்துடன் பார்த்தாள் மகள்.

இந்தப் பேச்சும் கருத்தும் அவளது முடிவோடு ஒத்து வரவில்லையே!

ஆனால் அதற்குப் பயந்து கொண்டு எடுத்த முடிவிலிருந்து மாற முடியாது, கூடாது!

"நல்லதை. நல்லது என்று சொல்ல, யாரும் எனக்கு சாவி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்பா!" என்று தெளிவாகப் பதில் சொன்னாள், மகிமா "தயவு செய்து; நீங்களும் இந்தப் பக்கம் வந்துவிடுங்கள், அப்பா! என் படிப்புக்கு நல்ல சம்பளம் கிடைக்கும் அப்பா! அதை வைத்து நாம் செழிப்பாகவே வாழ முடியும்! இரண்டு பெரியவர்களின் மரணக் கறை படிந்த, இந்தச் சொத்து நமக்கு வேண்டாம்ப்பா! அவர்களுடைய மகனதையும் சேர்த்து மூன்று உயிர்கள்! உண்மை வாரிசுகள் இருக்கிறார்கள், அப்பா! மகனுடைய மனைவி கஷ்டப்பட்டு மகளை வளர்க்கிறார்களாம். அவர்களுக்குச் சேர வேண்டியது நமக்கு வேண்டாம்ப்பா! கொடுத்து விடலாம். ப்ளீஸ் நான் சொல்வதை கேளுங்கள், அப்பா!" என்று கெஞ்சினாள் மகள்.



யோசனையோடு, மகளைப் .பார்த்தார் பராசரன். இவளைப் பய்ங்கரமாக மூளைச்சலவை செய்ய வேண்டியிருக்கிறதே!

ஆனாலும், அவருடைய வாரிசு அல்லவா? நம்பிக்கையோடு தொடங்கினார்.

"பார் மகி, அடுத்தவருக்கு உதவி செய்வதாக, அவ்வப்போது கொஞ்சம் கிறுக்குத்தனம் செய்தாலும், நீ மூளை உள்ளவள் என்று எனக்குத் தெரியும்! ஆனால் உன்னிடம் யாரோ, ஏனோ, தப்புத்தப்பாக சொல்லியிருக்கிறார்கள்! அந்தப் பெரியவர்கள் வயதாகி, முதுமையில் சாப்பாடு இறங்காமல் செத்தார்கள்மா! மகன், பெற்றவர்களுக்கு எதிராக காதல் கல்யாணம் செய்ததோடு, சொத்துக்காக வந்து, அவர்களோடு சண்டை போட்டான். மனம் வெறுத்து, முகத்தில் விழிக்காதே என்று அவர்கள், அவனை விரட்டியதில், ஊரை விட்டு, மருத்துவ வசதியே இல்லாத எங்கேயோ போய் உயிரை விட்டிருக்கிறான். இதெல்லாம் என் குற்றமாக எப்படிடா ஆகும்? பிள்ளை மாதிரிப் பார்த்துக் கொண்டேன் என்று, சொத்தை எனக்கு கொடுத்தார்கள்! ஆனால், அது பொறுக்காத எந்த நாயோ வயிற்றெரிச்சலில் உன்னிடம் வத்தி வைத்தால், அதை நம்பி என்னிடம் வந்து பேசுகிறாயே, செல்லம்! நான் உன் அப்பாம்மா! உன்னை உயிராக எண்ணிப் பிரியமாக வளர்த்த தகப்பன். நான், உன் அன்பான தந்தை, அது போலெல்லாம் செய்வேனா என்று யோசிக்காமல், என்ன பேச்சு பேசி விட்டாய்?" என்று கரகரத்த குரலில் கேட்டார்.

குரலில் உரிய ஏற்ற இறக்கங்களுடன், கூடிய உணர்ச்சிகரமான பேச்சு! பாசத்தை கிளப்பிவிட்டு, மூளையை மழுங்கடிக்க முயற்சிக்கிறார். அதாவது, நியாயம், இரக்கம் போன்ற நல்ல எதற்கும் மனதைத் திறப்பதாகவே இல்லை! கொஞ்சம் கூட!

நிராசையுடன் தந்தையைப் பார்த்தாள் பெண்.

இவரைத் திருத்துவது மிகவும் கடினம்! அனேகமாக முடியாது!

ஆனால் மடக்கிப் பார்க்கலாம்.

"சாரிப்பா!" என்று பெற்றவருக்கு இதமாக, முதலில் அவரிடம் மன்னிப்புக் கேட்டாள் மகள் "யாரோ சொன்னதை வைத்து, உங்களை நான் தவறாக எண்ணியது, எவ்வளவு பெரிய தப்பு! அதற்காகத் தயவு பண்ணி என்னை மன்னித்து விடுங்கள்"

தனலட்சுமியின் முகம் மலர "போகிறது, விடும்மா!" பெருந்தன்மையோடு கூறினார் பராசரன்.

"இல்லைப்பா! 'அசுரன்' அது, இது என்றார்கள்! என் தந்தை, அப்படிப்பட்ட கொடியவராக இருக்க மாட்டார் என்று, நான் ஏன் நினைக்கவில்லை?தப்புதானேப்பா?"



Uploaded by Naghu

பராசரன் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க, "அதுதான் விடு என்று அப்பா சொன்னாரே, இனிமேல், அதை நினைக்கக் கூட இல்லாமல், அடியோடு மறந்துவிடு" என்றாள் அன்னை.

ஆனால் மகிமா எப்படி விடுவாள்?

"அதெப்படி விடுவது, அம்மா? முதலில் மகனது துணை இருந்து விடக்கூடாது என்பதற்காக, அவரது காதலைச் சாக்கு வைத்து கண்டபடி மூட்டிக் கொடுத்து, அப்பா அவரைப் பெற்றோர்களிடமிருந்து முழுதாக வெட்டிவிட்டாராம். அப்புறமாகத் திருட்டு வேலை செய்து சொத்துக்களின் உரிமை கைக்கு வந்ததும், வயதான பெரியவர்களை கட்டிய துணியோடு வீட்டை விட்டு துரத்தியதாகவும், அவர்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூட வழியில்லாமல், பட்டினி கிடந்து உயிரிழந்ததாகவும், என்னமாகக் கதை சொல்கிறார்கள், தெரியுமா? கல்லும் கரைந்துவிடும் என்பார்களே, அதுபோல இருந்ததும்மா. நீங்கள் மட்டும் அதை கேட்டிருந்தால் விக்கி விக்கி அழுதிருப்பீர்கள்!" என்று விரிவாக எடுத்துரைத்தாள்.

பெற்றவருக்கு மட்டும்தான், உணர்ச்சிகரமாகப் பேசத் தெரியுமா? தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாய வேண்டாமா?

கணவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு, உணவு மேஜை மேல் இருந்த பொருட்களை தனலட்சுமி ஒதுக்கலானாள்.

"சரிசரி, போதும். புதைத்த இடத்தில், புல் என்ன, பெரிய மரமே கப்பும் கிளையும் விழுதுமாக வளர்ந்திருக்கக் கூடிய காலம் ஆகிவிட்டது! எப்போதோ நடந்து முடிந்தது. அதை நினைத்து, இப்போது அழுவானேன்?" என்று பேச்சை முடிக்கப் பராசரனும் முயன்றார்.

ஆனால் "இன்னும் முடியவில்லை, அப்பா" என்றாள் மகள் தெள்ளத் தெளிவாக "இறந்தது, பெரியவர்கள்தான். அவர்களுடைய வாரிசாக, அவர்களே அறிந்திராத ஒரு பேத்தி இருக்கிறாள். பேத்தியைப் பெற்ற மருமகளும் இருக்கிறாள். உரிமைக்காரர்கள் அவர்கள்தானே? கொடுத்து விடுங்கள் அப்பா!" என்றாள்.

"அதெப்படிக் கொடுப்பேன்?" என்று கேட்டார் பராசரன். "நான் அவர்களை ஏமாற்றி எடுத்துக் கொள்ளவில்லையே! பெரியவர், அவரே எனக்குத் தந்தது! கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக அதை காப்பாற்றி வந்தது மட்டுமில்லாமல், உழைத்துப் பல மடங்காகப் பெருக்கியும் இருக்கிறேன். கடும் உழைப்பு! இதை, எப்படி அவர்களுக்குக் கொடுப்பேன்? முடியாதும்மா" என்றார் அமைதியாகவே.

மகளும் விடுவதாக இல்லை.

"அதெப்படிப்பா? நீங்கள் ஏமாற்றி அடையவில்லை என்றே



வைத்துக் கொள்வோம். கீழே கிடந்து எடுத்த பொருள் என்றாலும், உடையவர் யார் என்று அறிந்து, தெரிந்து கொடுத்துவிட வேண்டாமா? பதிமூன்று ஆண்டுகள் கழித்து வந்த பாண்டவர்களிடம் அவர்களது சொத்தைத் துரியோதனன் ஒப்படைக்காததால்தானே, மகாபாரத யுத்தமே நடந்தது? அதை விடுங்கள். மனிதாபிமான நிலையில் பாருங்கள். அந்த சங்கபூமிக் கோடீசுவருடைய மருமகளும், பேத்தியும் இப்போது சிரம நிலையில் இருக்கிறார்கள், அப்பா. முன்பானால், அவர்கள் இருந்ததே, உங்களுக்குத் தெரியாது. கடவுள் மாதிரி வளர்த்த பெரியவர் பிரியமாகக் கொடுத்தார் என்று வாங்கிக் கொண்டீர்கள். இப்போது, அவருடைய வாரிசே கஷ்டப்படுகிறது எனும்போது, சொத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவதுதானே, நியாயம்?" என்று கேட்டாள்.

"சொத்தே..." என்று பராசரன் தொடங்குகையில் குறுக்கிட்டு "அந்தச் சொத்தே இப்போது கையில் இல்லையே., எல்லாம் அப்போதே வந்த வந்த விலைக்கு விற்றாயிற்றே என்று, சாதாரணப்பட்டவர்களுக்குத் தோன்றும். ஆனால் நீங்கள் அப்படியாப்பா? சொத்தை விற்று வந்த பணத்தை முதலீடு செய்து சம்பாதித்த அத்தனையையும் அவர்களுக்கே கொடுத்து விடுவீர்கள். அதாவது அவர்களுக்குச் சுமார் ஐநூறு கோடி பெறுமானமுள்ள சொத்துகள் கிடைக்கும் அப்படித்தானேப்பா?" என்று தேன் குரலில் கேட்டாள் மகிமா.

Uploaded by Naghu

நாற்காலியைத் திருப்பிப் போட்டு, மகளை நேரே பார்த்து அமர்ந்தார் பராசரன்.

"அங்கே சுற்றி, இங்கே சுற்றி, நீ இதற்குத்தான் வருவாய் என்று எனக்குத் தெரியும். எப்படி வருகிறாய் என்று பார்த்தேன். பரவாயில்லை. இதில் நீ என் மகள்தான்" என்றார் மெச்சுதலாக.

"அப்பா, அப்படியானால்..." என்று லேசாக நம்பிக்கை துளிர்க்கத் தந்தையைப் பார்த்தாள் மகிமா.

முழுவதையும் தந்தை கொடுப்பார், என்று மகிமா ஒருபோதும் எதிர்பார்க்கவில்லைதான். ஆனால் கொஞ்சம் பத்தில் ஒரு பங்கு என்றாலும், ஐம்பது கோடி கிடைக்குமே!

அதுவே முழு நியாயம் என்று நிகிலன் ஒப்ப மாட்டான். ஆனாலும்... தனக்காக, தன் பெருமைக்காகத் தவிர, ஐந்து ரூபாய் கூடச் செலவளிக்கப் பிடிக்காத தந்தையை, இதற்குச் சம்மதிக்க வைக்க முடியுமானால், அதுவே பெரிய சாதனைதான்.

ஆனால், தன் குணத்தை பராசரன் அப்போது காட்டினார்!

பழையே பேச்சையே தொடர்ந்து "ஆனால், இதில் மட்டும்தான் என் மகள், மற்றபடி, என் ரத்தத்தின் வாடை கூட, உன்னிடம் அடிக்கக் காணோம்! சே!" என்று சலிப்புடன் கூறினார்.

நம்பிக்கை இல்லாதபோதும் "அவர்கள் பாவம்ப்பா" என்று மகிமா கெஞ்சிப் பார்த்தாள்.

மறுப்பாக தலையை ஒரே உருட்டாக உருட்டிவிட்டார் பராசரன்.

அது மட்டுமல்ல. அந்தப் பேச்சையே முடிக்க விரும்பியவராக "யாரோ, உனக்கு எல்லாக் கதையையும் சொல்லியிருக்கிறார்கள் என்று புரிகிறது. நடந்ததை விட மோசமாகச் சொல்ல இயலாது என்பதால், அப்படியே ஒத்துக் கொள்ளுகிறேன். எல்லாமே உண்மைதான். இதே 'கடவுளே' வசனத்தைக் கொண்டுதான் என்னை வளர்த்த அய்யாவை வீழ்த்தினேன். அவரிடமிருந்து, அவர் பெற்ற பிள்ளை சதானந்தனையும் பிரித்து விரட்டினேன். கடைசியில் பெரியவர்களையுமே, உடுத்த துணி தவிர ஒன்றுமில்லாமல் தெருவுக்கு விரட்டினேன். வந்த விலைக்கு, அத்தனை சொத்தையும் விற்று எடுத்துக்கொண்டு, இங்கே வந்து, தொழில் தொடங்கி இவ்வளவுக்கு உயர்ந்தேன். எல்லோரும், அண்ணாந்து பார்க்கிற உயரம்!

"இதில் எதுவுமே வெறுமனே சொடக்குப் போடுகிற மாதிரி, எளிதாக கிடைத்தது இல்லை! என் மூளை! என் உழைப்பு! பெரியவரின் சொத்தைச் சுருட்டக் கூட கடுமையாகத் திட்டம் போட வேண்டியிருந்தது. செயல்படுத்துவதற்கு, ரொம்பவே உழைக்க வேண்டியிருந்தது.

"வினாடி கூட அயராமல், சமயம் பார்த்திருந்து, சகட்டு மேனிக்கு பொய் சொல்லி, அதையும் பொருத்தமாகச் சொல்லி... பிடிவாதமாகச் செய்துதான், ஜெயித்தேன்.

"அப்படி ஜெயித்ததை, அடுத்தவருக்கு, நான் விட்டுக் கொடுப்பேன் என்று, எப்படி நினைத்தாய்? இந்த ஐநூறு கோடிப் பணம் இல்லை என்று ஆனால், அப்புறம் என்னை எவன் மதிப்பான் என்று யோசித்தாயா? மதிப்பு, மரியாதை, கௌரவம்... எல்லாம் அத்தோடு போய்விடுமே! அது... அந்த நிலைமையை, என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. எனவே, அந்தப் பேச்சை விட்டுவிடு. அவர்களைப் பற்றி நினைக்கக்கூட எனக்குப் பிடிக்கவில்லை!"

"அதனால், அந்தப் பேச்சை மட்டுமல்ல. அந்த சங்கபூமி பற்றிய அனைத்தையும் மனதிலிருந்து தூக்கி எறிந்துவிடு! பழைய மாதிரி, நிம்மதியாக இரு. இதற்கு மேல், நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை" என்று முடித்து எழுந்தார், பராசரன்.



"அப்பா, ப்ளீஸ்ப்பா! இவ்வளவு வைத்திருக்கிறீர்களே! அவர்களுடையதை, இவ்வளவு காலம் அனுபவித்திருக்கிறீர்கள்...."

ஆத்திரத்துடன் திரும்பினார் பராசரன் "என்னடீ 'அவர்களுடையது?' எப்படி உழைத்துப் பெருக்கியிருக்கிறேன்! வெறும் ஒன்றரைக் கோடியில் இருந்து..."

இப்போது மகள் குறுக்கிட்டாள்.

"அந்த ஒன்றரைக் கோடி யாருடையது, அப்பா? எங்கிருந்து வந்தது? அதை விடவும், எப்படி வந்தது?" என்று அசையாத பார்வையுடன் கேட்டாள்..

உடல் விறைத்து, கண்களை இடுக்கி, மகளை வெறுப்பும் கோபமுமாக பராசரன் பார்த்தார். அவளை அடிக்கப் போகிறார் என்றே தோன்றியது.

அதே எண்ணத்தில், மகளைப் பாதுகாக்கக் கருதி, தனலட்சுமியும் ஓர் எட்டு முன்னே எடுத்து வைத்தாள்.



## தீக்குள் விரலை வைத்தேன் 11

மகிமா கேட்ட கேள்விக்கு பராசரன், அவளை அடிக்கப் போகிறார் என்று தனலட்சுமி நிச்சயமாக நினைத்தாள்.

அப்படி எண்ணித்தான், அப்படி அடிக்க முற்பட்டால், இடையில் புகுந்து தடுக்கும் அளவுக்கு, மகளை நெருங்கி நின்றாள்.

ஆனால் பராசரன் கை நீட்டவில்லை.

அவரது வெற்றி, செல்வம் எல்லாம் பேச்சில் வந்ததுதானே? இப்போதும், அதிலேயே நம்பிக்கை வைத்து, "அதுவும் என் உழைப்பில், என் மூளையின் உழைப்பில் அடைந்த, என்னதுதான். நீ என்ன சொன்னாலும் எப்படிப் பேசினாலும், இதில் ஒரு துரும்பைக் கூட, யாருக்கும், முக்கியமாக அந்த குடும்பத்துக்குக் கொடுக்கவே மாட்டேன். இது உறுதி" என்றார்.

"ஊசி முனை நிலம் கூட கொடுக்க மாட்டேன் என்ற துரியோதனன் கதை தெரிந்தும், பாவமூட்டை ஏற்றிக் கொள்கிறீர்கள், அப்பா. ஆனால் இந்தப் பாவச் சொத்தில் ஒரு பிடி சோறு கூட, இனி நான் உண்ண மாட்டேன். இந்தவீட்டை விட்டே வெளியேறி போய், அவர்களுக்கு என்னாலான உதவியைச் செய்வேன்" என்றாள் மகள்.

"ஐயோ, வேண்டாம் மகி!" என்று பதறிய மனைவியைப் பிடித்து, மகளிடமிருந்து விலக்கி நிறுத்தினார் பராசரன்.



Uploaded by Naghu

"உதவி? நீ செய்யப் போகிறாயா? இங்கே நீ என்ன சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தாய்? மூவாயிரமா, மூவாயிரத்து ஐநூறா? சென்னைக்கு வெளியே இது கிடைப்பதே கஷ்டம். இந்தத் தொகையை வைத்து, நீ உன் செலவைப் பார்ப்பதோடு, அந்தப் பனாதைகளுக்கு உதவி வேறு செய்யப் போகிறாயாக்கும்! அவர்கள் தலையில் ஏறி உட்கார்ந்து, உபத்திரவமாக இல்லாதிருந்தால், போதாதா? இப்போது சொல்கிறேன், குறித்து வைத்துக்கொள். உன்னால் வேறு செலவா என்று, இரண்டே நாட்களில் உன்னை விரட்டியடித்து விடுவார்கள்! தாராளமாகப் போய், நன்றாக வாங்கிக் கட்டிக்கொள்ளு!" என்றார் எகத்தாளமாக.

"ஐயா, வேண்டாங்க. வயதுப் பெண்! வீட்டை விட்டுப் போனால், கேவலமாகப் பேசுவார்களே!" என்று தனலட்சுமி தவித்தாள்.

"ஏய் என்னடி கேவலம்? எத்தனையோ பெண்கள், வீட்டை விட்டு ஊரை விட்டுப் போய் வேலை பார்க்கலை? அதுபோல நாங்கள் தடுத்தும், வேலை பார்க்க ஆசைப்பட்டுப்போனாள் என்று சொல்லிக்கொள்ள வேண்டியதுதான். இப்போது சொல்லவில்லை? மற்றபடி, மானம் கெட்ட வேலை எதுவும் உன் மகள் செய்ய மாட்டாள். போனால் போகட்டும். வெளியே போய்ச் செலவுக்கு இல்லாமல் கஷ்டப்பட்டால்தான், ஏசி, கார், பசித்த நேரம் இப்படி மேஜையில் சாப்பாடு என்று என் வீட்டு சுகம், உன் மகளுக்குத் தெரியும். இந்த அசட்டுப் பேச்சும் நிற்கும்! தாக்குப் பிடிக்க முடியாமல், சீக்கிரமே தானாகத் திரும்பி வருவாள். அனாவசியமாகக் கவலைப்படாதே!" என்றார் பராசரன் அலட்சியமாக.

"ஆனால், செலவுக்குப் பற்றாமல், கஷ்டப்படுவாள் என்கிறீர்களே!" என்று கலங்கினாள் தாய்.

"படட்டுமே! கொஞ்ச நாள் படட்டும். வெய்யிலில் காய்ந்தால்தான், நிழலின் அருமை தெரியும்? அதனாலே நன்றாகவே படட்டும்."

"எனக்கு என்னமோ இவள் பேசியதெல்லாம், தானாகச் சொல்வது போலத் தெரியவில்லை! ஏதோ ஒரு கழுதை, என் சொத்துக்காக, இவளுக்கு சாவி கொடுத்து அனுப்பியிருக்கிறது என்று தோன்றுகிறது. ஆகா! நான் செய்த மிக அருமையான, நல்ல வேலை பணம், நகை எல்லாவற்றையும் என் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது!

"பார்த்துக் கொண்டே இரு! பைசாப் பெயராது என்று தெரிந்ததும், துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று அந்தக் கழுதை ஓடப் போகிறது. சுவரில் அடித்த பந்தாக 'ஓ' என்று அழுதுகொண்டு உன் மகள் திரும்பி வந்து, என் காலில் விழப் போகிறாள்.

"வேண்டுமானால், தோல்விகரமாகத் திரும்பி வரப் போகிற



மகளுக்கு ஆறுதலாக, அன்றைக்கும் காரட் அல்வா செய்து, வரவேற்பு கொடு!" என்று ஏளனக் குரலில் இளப்பாக உரைத்துவிட்டு, அழுத்தமான காலடிகளுடன் அங்கிருந்து அகன்றார் பராசரன்.

சேவை மனப்பான்மையோடு, குறைந்த ஊதியத்துக்கு வேலை செய்தால், அவளது தகுதியே, அவ்வளவுதான் என்பதா?

அவள் கற்றிருக்கும் மனித வள மேம்பாட்டுக்கு எவ்வளவு மதிப்பு என்று, ஒன்றும் தெரியாமலே இவ்வளவு சம்பாதித்து, சேர்த்து வைத்திருக்கிறாரே! இப்போதே, அவளுக்கு ஐந்து இலக்கத்தில் ஓரளவு நல்ல தொகைக்கே, எத்தனை வாய்ப்புகள் தயாராக இருக்கின்றன என்று தெரிந்தால்... தந்தை நம்பக் கூட மாட்டாரோ?

ஆனாலும், என்ன திண்ணக்கம்!

இவரது பணத்துக்காக, ஏதோ கழுதை சாவி கொடுத்திருக்கிறதாமே!

'உன் தந்தையின் பணத்தைப் பற்றித் தெரியுமுன்பாகவே, என் மனம் தெரிவித்துவிட்டேன். அது அப்படியே இருக்கட்டும்' என்ற நிகிலன், இப்போது உலக மகா உத்தமனாகத் தெரிந்தான்.

உடனே சென்று, அவனைப் பார்க்க வேண்டும் போல, மகிமாவின் மனது துடித்தது.

இப்படிப்பட்ட பெற்றவரை விட்டு விலகிவிட்டதை அறியும்போது, எப்படி மெச்சிக் கொள்வான்!

விசும்பும் குரல் ஒலி கேட்டுத் தாயாரிடம் திரும்பினாள்.

பொதுவாக கணவரின் ஜெராக்சாகச் செயல்படுகிறவளே தவிர, மகளிடம் கூட, தனலட்சுமி பெரிதாக அன்பைக் காட்டி கொள்ளுகிறவள் அல்ல.

ஆனால் இன்று 'கஷ்டப்படுவாள் என்கிறீர்களே' என்று கலங்கியது, மகிமாவுக்குத் தாயின் வேறு வடிவத்தை, மகிமாவுக்குக் காட்டியது. இப்போது, கண்ணீர் வடிக்கிறாளே!

பரிவு பெருக "அழாதீர்கள் அம்மா" என்று தாயின் கண்ணீரை துடைத்துவிட்டாள் பெண்.

துடைத்த கையை இறுகப் பற்றி, "வேண்டாம்மா, வீட்டை விட்டுப் போகாதே. பணம் பெரிது என்றாலும்கூட, அப்பாவுக்கு உன்னையும் பிடிக்கும். மன்னிப்புக் கேட்டுக்கொண்டால், சரிதான் என்று விட்டுவிடுவார். சங்கபூமிக்காரர்கள் பேச்சு மட்டும் வேண்டாம். என்ன கண்ணு?" என்று கெஞ்சுதலாகக் கேட்டாள் தனலட்சுமி.

"ஏன் அம்மா?"

"அது... அது அப்பாவுக்குப் பிடிக்காது" என்று, தரையைப் பார்த்தபடி, தனலட்சுமி சுருக்கமாகப் பதிலுரைத்தாள்.



Uploaded by Naghu

"அம்மா, கணவன் செய்கிற நல்லதற்குத் துணை போகலாம். பாவத்திலும் பங்கெடுப்பது தப்பு, அம்மா. கணக்குப் பார்த்தால், அப்பா கூடச் சேர்ந்து, நீங்களும் சில ஆண்டுகள், இந்தத் தப்பை செய்திருப்பீர்கள் போலத் தோன்றுகிறது! இப்போது அதற்கும் சேர்ந்தல்லவா, நான் பரிகாரம் பண்ண வேண்டும்! அப்பாவைத் திருத்த, நீங்கள் முயற்சி பண்ணவே இல்லையே" என்று வருத்தப்பட்டாள் மகள்.

"அந்த மாதிரி ஏதாவது செய்திருந்தால், அப்பா என்னைக் கொன்று போட்டிருப்பார். எனக்கு கோபம் இருந்ததால்...."சட்டென நிறுத்திவிட்டு விழித்தாள் தனலட்சுமி.

"உங்களுக்கு கோபமா? ஏனம்மா? எதற்காக கோபம்?" என்று விடாமல் தொணதொணத்து மகிமா விவரம் அறிந்து கொண்டாள்.

தனலட்சுமியை, முதலில் மணம் பேசியிருந்தது, சதானந்தனுக்கே. சதானந்தன் காதல் என்று காரணம் காட்டி மறுக்கவும், நொடித்துப் போன தன் நண்பனுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்காக 'இவனும் என் பிள்ளை மாதிரிதான்' என்று பராசரனைக் கைகாட்டியிருக்கிறார், சங்கபூமிப் பெரியவர்.

தனலட்சுமியை மணக்க பராசரனும் மறுக்கவில்லை.

ஆனால், திருமணத்துக்கு வந்த உறவினர்கள் பலர் 'முதலாளி பையனுக்கு என்று சொல்லி, வேலைக்காரனுக்கு மணமுடித்தார்கள்' என்று பேசினார்கள்.

தனலட்சுமிக்கும் அந்த கோபம் இருந்ததால், பராசரனுக்குத் துணை நின்றாளே தவிர, கணவனை தடுக்கவில்லை. பராசரனோ, ஏற்கனவே சொத்துக்களை அடையும் முயற்சியில் இருந்தவர். அதையே, இன்னும் வேகத்துடன் தொடர்ந்தார்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காயாக, அவருக்கு இப்போது இரட்டை லாபம்.

பெரியவருக்கு என்ன தியாகம் செய்யவும் தயார் போலக் காட்டி, அவர் மனதில் முழுமையாக இடம் பிடிப்பது ஒன்று, அடுத்தது, பெற்றவரின் வாக்கை விட, எவனோ ஒருத்தியை பெரிதாக எண்ணும் மகன் என்று, சதானந்தனை, அவரிடமிருந்து தூர விலக்குவது.

பெரியவர்களை ஓட்டாண்டியாகத் தெருவுக்கு விரட்டியபோது மட்டும், அவர்களுக்கு பரிந்து, ஏதோ ஒரு வார்த்தை சொல்லத்தான் செய்தாள். ஆனால் "ஏன்? சொந்த மாமியார், மாமனாராக மனதில் வரித்திருந்தாயா? வேண்டுமானால், கூடவே போய்ப் பணிவிடை செய்யேன்". என்று பராசரன் வக்கிரப் பார்வை பார்க்கவும், நடுங்கிவிட்டாள். எதற்கு வம்பு என்று, அந்த பேச்சையே அதன் பிறகு, அவள் எடுத்தது இல்லை.

"சொல்லு, மகி. அந்த மாதிரி அப்பா கேட்டபிறகு, நான் இதில் வாயைத் திறக்க முடியுமா? அதேபோல, அப்பாவும் ஒரேடியாகக் குறை கூற முடியாதும்மா. எனக்குப் பரிவதாக எண்ணி, அந்த சொந்தக்காரர்கள் பேசிய பேச்சில்தான், அப்பாவும் இப்படித் தப்பு பண்ணியிருப்பார்!" என்று கணவனையும் நியாயப்படுத்த முயன்றாள், அந்தப் பெண்மணி.

ஆனால் மறுப்பாகத் தலையசைத்தாள் மகள் "இல்லையம்மா. அப்பாவுக்குச் சும்மாவே பேராசைதான். உங்கள் திருமணத்துக்கு முன்பிருந்தே, சொத்துக்களை அடையும் முயற்சியில் அப்பா ஈடுபட்டிருந்ததாக, நீங்களே சொல்லவில்லை? பிறகும், அந்த சதானந்தன் சாரை அடியோடு பிரித்து விரட்டி விட்டிருக்கிறார். அவர் விரும்பிய பெண்ணைச் 'சாப்பாட்டுக்கடைக்காரன் மகள்...' என்று ஏதோ தகுதியற்றவள் போல பேசி.... அது உங்களுக்கும் தெரியும்தானே? இப்படி அநியாயமாகச் சம்பாதித்த பணத்தில், நான் சுகமாக வளர்ந்து படித்த அதே சமயத்தில் உரிமைக்கார குடும்பம், அங்கே வறுமையில் சிக்கி சீரழிந்திருக்கிறது! என்ன அநியாயம்!.

"இல்லையம்மா. இதற்கு நான் ஈடுகட்டியே ஆக வேண்டும். போன உயிரை திரும்பிக் கொண்டு வரமுடியாதுதான். ஆனால், அந்த உயிர், தன் குடும்பத்துக்குச் செய்திருக்கக் கூடிய பணிகளை, ஏற்று செய்யலாமில்லையா? இனி, அது என் பொறுப்பு. சொத்துபத்து, என்னால் முடியாது போகலாம். ஆனால், அந்தக் குடும்பத்தின் நிலையை உயர்த்தி, பெரியவருடைய பேத்தியை உரிய விதத்தில் வளர்ப்பேன். அப்பா செய்த பாவத்துக்கு வேறு பரிகாரமே கிடையாதும்மா. அதனால், என்னைத் தடுக்க முயற்சி செய்யாதீர்கள்!" என்று பெட்டியை எடுத்து, தன் உடைகளுள் மிகவும் சாதாரணமானவற்றை எடுத்து, மகிமா அடுக்கத் தொடங்கினாள்.

"ஆனால், உன் வருமானம், உனக்கே போதாது என்று அப்பா சொன்னாரே..." என்று மெல்லிய குரலில் கவலைப்பட்ட தாயைப் பார்த்து, லேசாக முறுவலித்தாள் பெண்.

"அப்படி இல்லையம்மா. என் படிப்புக்கு பெரிய வேலையெல்லாம் கிடைக்கும். நான்தான், நமக்கு பணம் தேவையில்லை என்று இங்கே இந்த வேலையைச் செய்தேன். அதனால், எனக்காகக் கவலைப்பட வேண்டாம், என்ன?" என்று பெட்டியை மூடினாள்.

"அப்பாவிடம் நான் என்ன மாதிரித் துணிகளை எடுத்துச் செல்கிறேன் என்று சொல்லுங்கள். இன்னும் என் படிப்பு தொடர்பான சான்றிதழ்கள், என் ஊதியத்தை மட்டுமே போட்டு வந்த பாங்க் பாஸ்புக்/





Uploaded by Naghu

இதெல்லாம் மட்டும்தான் கொண்டு போகிறேன் என்பதையும், என்றேனும், அப்பாவுக்குப் பணத்தை விட பாசம் பெரிதாகத் தோன்றினால்...."

"தோன்றாது" என்றாள் தாய் சுருக்கமாக, உறுதியாகவும்.

"போகட்டும். ஆனால், அந்தச் சொத்துக்கள் அப்பாவிடம் இருக்கும்வரை, நான் இங்கே திரும்பி வரமாட்டேன். அது நிச்சயம்" என்று பெட்டியை எடுத்துக்கொண்டு மகிமா கிளம்பினாள்.

பின்னோடு வந்து "ஆனால், உன் வாழ்வு என்ன ஆகும், தங்கம்?" என்று தனலட்சுமி கலங்க, மகிமா ஒரு கணம் தயங்கினாள்.

நிகிலனைப் பற்றித் தாயிடம் சொல்லலாமா, கூடாதா?

நிகிலனின் அன்பில் அவளுக்கு நிறைய நம்பிக்கை இருந்தது.

ஆனால் இருவரின் இணைந்த எதிர்காலம் பற்றி, கோவையிலிருந்து வரும்போது அவள் எண்ணியதற்கும், இன்றைய நிலைக்கும், பெரும் வேறுபாடு இருந்தது.

இன்று அவளுக்குப் புதிய பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

தாயும் பெண்ணுமாக இரண்டே பேர்தான் என்றாலும், ஒரு குடும்பத்தின் பொறுப்பை ஏற்க, அவள் முடிவு செய்திருந்தாள். ஆணோ, பெண்ணோ, ஒருவரின் கல்விப் பொறுப்பு ஏற்பது, இன்றைக்குப் பெரிய விஷயம்.

இதையெல்லாம் அவன் எப்படி ஏற்பானோ?

அதை விடவும் 'அசுரன்' என்று அவன் வெறுப்புடன் குறிப்பிட்ட அந்த கொடியவனுடைய மகளே, மகிமா என்று அறியும்போது, அவளையும் வெறுத்து ஒதுக்கி விடுவானோ என்பதுதான் அவளுக்குப் பெரிய கவலையாக இருந்தது.

சும்மாவே, சங்கபூமி விஷயத்தில் நிகிலனுக்கு 'இம்'மென்றால் சந்தேகம் வந்துவிடும்!

ஆனால் இப்போது அதே சந்தேகம், அவனுக்கு இரு மடங்காக வரக்கூடும்.

அப்படியே வந்தாலும், அவள்தான் தந்தையையே எதிர்த்து பிரிந்து வந்திருக்கிறாளே, அதைச் சொல்லி அவனிடம் வாதாடிப் புரிய வைத்துவிடலாம் என்ற நம்பிக்கையும் மகிமாவுக்கு நிறையவே இருந்தது.

எனினும் அந்தப் புரிதல் நடக்குமுன், அவசரப்பட்டுத் தாயிடம் எதையும் சொல்ல அவளுக்கு விருப்பமில்லை.

இருக்கட்டும். மிஞ்சி, மிஞ்சி இன்னும் ஒருசில தினங்கள், அதன்பிறகு அன்னையிடம் உறுதியாகவே சொல்லிக் கொள்ளலாம்.



பெற்றவளை நோக்கி 'பளிச்' சென்று ஒரு புன்னகையை உதிர்த்து "அதுதான் தங்கம் என்று அழைத்து விட்டீர்களே, தாய் சொல், தவறுமா? தங்கத்தின் எதிர்காலம் பிரகாசமாகத்தானே இருக்க முடியும்?" என்று, வேடிக்கை போல உரைத்து, தனலட்சுமியின் முகத்தையும் ஒருவாறு மலர வைத்துவிட்டுக் கிளம்பினாள் பெண்.

ரயிலில் ஏறி அமர்ந்ததில் இருந்து, மகிமாவுக்கு ஒரே நிகிலன் சிந்தனைதான்.

அவனது தோற்றம், பேச்சு, சிரிப்பு...

பிரியா விடை பெற்றுப் பிரிந்து சென்றவள், இப்படி ஒரே நாளில் திரும்பி வந்து நிற்பதைப் பார்க்கும்போது, நிகிலனுக்கு எப்படி இருக்கும்

வாய் வார்த்தையாக அவள் எதுவும் சொல்லவில்லை என்றாலும், அவளது மனநிலை, அவன் அறிந்ததே.

அவனும், அவளுடைய தந்தை பற்றி அறியாமலே, அவளை மணக்க விரும்பியவன், இப்போது தந்தைக்காக மட்டுமாய், அவளை வெறுப்பானா?

அவள், அவன் முதல் பார்வையிலேயே விரும்பிய மகிமாதானே?

நிச்சயமாக வெறுக்க மாட்டான் என்று பெருமையோடு எண்ணி, அதன்பிறகு ஒரு வழியாகச் சற்று கண்ணயர்ந்தாள் மகிமா.

ஆனால், அவளது எண்ணமும், எதிர்பார்ப்பும் தவறு என்று, மறுநாளே நிரூபித்தான் நிகிலன்.

எதிர்பாராமல் மகிமாவைப் பார்த்ததும், முதலில் உற்சாகத்தோடு அவளைத் தூக்கி தட்டாமாலை சுற்றினான்தான்.

"என்ன? மேடத்துக்கு பிரிந்து இருக்க முடியவில்லையாக்கும்?" என்று உல்லாசப் பார்வை பார்த்து, அவளை சிவக்கடிக்கவும் செய்தான்.

ஆனாலும் "அதில்லை..." என்று தொடங்கி, அவள் நடந்ததைச் சொல்லவும், நிகிலன் ஆளே மாறிவிட்டான்.

'என் கடவுளே' மந்திரத்தைப் பயன்படுத்தியதாகத் தந்தை கூறியதைக் சொன்ன பிறகு, அவனிடமிருந்து சத்தமே இல்லாது போயிற்று.

சொத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு, அவள் வாதாடியதை அவள் தெரிவித்தபோது, அவன் வெறுமனே, 'ஊம்' என்று கூடக் கேட்கவில்லை.

கோத்தவாறு மேஜை மேல் வைத்திருந்த கை விரல்களையே பார்த்தவாறு, அசையாமல் உட்கார்ந்திருந்தான் அவன்.

அவள் கூறுவதைத்தான் தீவிரமாகக் கவனிக்கிறான் என்று கருதி, மகிமா மேலே மேலே நடந்த அனைத்தையும் சொல்லிக்கொண்டே



Uploaded by Nadhu

போனாள்.

ஆனால், அவள் முழுதும் கூறி முடித்த பிறகும், அவன் கல் மாதிரி உட்கார்ந்திருக்கவும், அவள் மனதில் ஒரு துணுக்கம் உண்டாயிற்று.

சிறு மௌனத்தின் பின் "நிகிலன்?" என்று கேள்வியாய் அவள் அழைக்கவும், அவனது பார்வை மெல்ல உயர்ந்தது.

"என்ன சொன்னாய்?"

புரியாமல் "நடந்தது எல்லாம் சொன்னேன்... எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன், நிகில்ன்" என்றாள் அவள்.

"அதைத்தான் கேட்டேன், நிகிலன் என்றாயே, அதை! கண்ட அடிமை பரம்பரைக்கு எல்லாம் என்னைப் பெயர் சொல்லி கூப்பிட உரிமை கிடையாது" என்றான் அவன், உதாசீனமான குரலில். கடுமையாக.

திகைத்து விழித்த மகிமாவுக்கு, அப்போதும் எதுவும் புரிபடவில்லை.

அவள்தான் எல்லாவற்றையும் தந்தையிடம் வாதாடி வீட்டை விட்டு வெளியேறி வந்தது உட்பட, முழுக் கதையையும் சொல்லிவிட்டாளே! அப்புறம் அவளிடம் என்ன கோபம்?

அதுவும், அடிமை பரம்பரை என்று, அது என்ன வார்த்தை? அதிலும், இவன் என்ன பெரிய மகாராஜா அவளை அடிமை என்பதற்கு?

பெரிய பெரிய ராஜாக்களே, போன இடம் தெரியவில்லை!

அதிலும், அவள் ஐநூறு கோடிப் பெறுமானமுள்ள சொத்துக்களை, நியாயம் கருதி, உதறிவிட்டு வந்திருப்பவள்! அதைப் பாராட்டுவதற்குப் பதில், அவளையே மட்டம் தட்டுகிறானே!

சினம் துளிர்க்க, "என்ன உளறுகிறீர்கள்?" என்றாள் அவளும், கோபமாகவே.

"ஆமாம்மா! மனிதனைக் கடவுளே என்று காலில் விழுகிற பரம்பரைக்கு, எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களின் பேச்சு உளறலாகத்தான் தெரியும்!" என்றான் அவன் பதிலுக்கு.

"மறுபடியும் என்ன உ..." என்று தொடங்கியவள், வார்த்தைகளை அடக்கினாள்.

பதிலுக்குப் பதில் பேசி, ஒருவரை ஒருவர் நோகடிப்பதால், யாருக்கு என்ன பயன்?

புருவம் சுருக்கி, ஒரு கணம் யோசித்துவிட்டு "அதாவது நீங்கள் என்னை நம்பவில்லை, அதுதானே?" என்று கேட்டாள்.

"பரவாயில்லை, கண்டுபிடித்துவிட்டாய். ஆனால், அசுரன் மகளுக்கு, இதெல்லாம் கற்றுக் கொடுக்கவா வேண்டும்?"

வேண்டுமென்று, அவளை நோகடிப்பதற்காகவே பேசுகிறான்



என்று புரிந்தபோதும், வலிக்கத்தான் செய்தது. அதுவும், அவன் அன்று இனிக்க இனிக்கப் பேசிய பேச்சுக்கு பிறகு ரொம்பவும் வலித்தது.

இடைப்பட்ட ஒரு நாளில், வாழ்நாள் முழுவதற்கும் கற்பனை செய்துவிட்டாள் அல்லவா? எதுவும் இல்லை என்று ஆனது, மிகவும் வேதனையாக இருந்தது.

ஆனால், அவள் இந்தக் காதலுக்காக வீட்டை விட்டு வெளியே வரவில்லை! பரிகாரம் செய்வதற்காக, பெற்றவர் செய்த பிழைக்குப் பிராயாச்சித்தம் செய்வதற்காக, இங்கே வந்தவள். வந்த வேலையை நல்லபடியாகப் பார்த்தால் போதும்!

நிமிர்ந்து "உண்மைதான். எனக்குக் கற்றுக் கொடுக்க, உங்களிடம் எதுவும் இல்லைதான். ஆனாலும், உங்களிடம் எனக்கு, ஒரு சிறு தேவை இருக்கிறது. ஒரு சிறு விவரம் சதானந்தன் சாருடைய மனைவி, மகளின் முகவரி வேண்டும். அதைத் தந்தீர்கள் என்றால், மேலே ஒரு வினாடி கூட அதிகமாகத் தங்கி உங்களைக் கஷ்டப்படுத்தாமல் உடனே போய்விடுவேன்" என்றாள் அவள் எடுப்பாக.

"நினைத்தேன். இதற்காகத்தான் வந்திருப்பாய் என்று, அப்போதே ஊகித்தேன். போன தடவை, முயன்றது எதுவும் பலிக்கவில்லை என்று, இந்த முறை, இப்படிக் கதை சொல்லும்படி, அசுரன் அனுப்பி வைத்தானாக்கும்! ஆனால், இங்கே இருப்பவர்கள் இளிச்சவாயர்கள் அல்ல என்பது, உன் அசுரக் குடும்பத்துக்குத் தெரியாமல் போய்விட்டதே! கவனி, நீ என்ன சொன்னாலும், எப்படி கேட்டாலும் ஆண்ட்டியின் முகவரி உனக்குக் கிடைக்காது. அதனால் மேலே தொல்லை செய்யாமல், இடத்தை காலி பண்ணு. போ!" என்று அவளை விரட்டினான் நிகிலன்.

என்ன இது, அசட்டுப் பிடிவாதம்?

சங்கபூமியுடைய வாரிசுகள் எங்கே இருக்கிறார்கள் என்று, நிகிலனுக்கு மட்டும்தான் தெரியும். அவள் உதவி செய்யத்தான் வந்திருக்கிறாள் என்று தெரியாமல், அவன் அந்த விவரம் சொல்ல மறுக்கிறான்.

இப்போது, அவர்களுக்கு அவள் உதவி செய்வது எப்படி?

செய்வதறியாது, திகைத்தாள் மகிமா.



Uploaded by Naghu

மகிமா சொன்ன எதையும் நிகிலன் ஒத்துக்கொள்ள மறுத்தான்.

தந்தையோடான அவளது மோதலை, அவன் சற்றும் நம்புவதாக இல்லை.

போன தடவை, யாருக்கோ விசாரிப்பது போல நடித்து விசாரித்தாள். அதில் பலனில்லை என்றானதும், இந்தத் தடவை இப்படி ஓர் உக்தியைக் கையாளுகிறாள்.

எல்லாவற்றுக்கும், இயக்கம், அவளுடைய தந்தையான அசுரன்தான். சங்கபூமியின் இன்றைய 'ரியல் எஸ்டேட்' மதிப்பைப் பார்த்ததும், அதை விட மனம் இல்லாமல், சதானந்தனுடைய மனைவியின் கையெழுத்தைப் பெறுவதற்காக, இந்த நாடகம் நடத்துகிறாள், என்றான்.

அவனுக்கும் தெரிந்தவளான தோழி மல்லிகா மூலமாகவே ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்திருப்பதையும், அவன் ஏற்கவில்லை. சொத்து பற்றிய விடுதலைப் பத்திரத்தில் அந்த மஞ்சரியின் கையெழுத்தைப் பெற்றதுமே, இந்தப் பொய் வேலையை விட்டுவிட்டு, மகிமா போய்விடுவாளாம்! அவனுக்கு நிச்சயமாகத் தெரியுமாம்!

இப்படிப் பேசுகிறவனிடம் எதைச் சொல்லி எப்படி அணுகுவது?

யோசித்துவிட்டு, மகிமா சத்தியத்திடம் சரண் புகுந்தாள். அந்த வார்த்தையை; அவள் எளிதாகப் பயன்படுத்துவது கிடையாது என்றாலும், இப்போது அவளுக்கு வேறு வழி தெரியாததால், "நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம், நிகிலன். சென்னைக்கு சென்றதிலிருந்து, இங்கே உங்களிடம் பேசியது வரை, நான் சொன்ன அனைத்தும் சத்தியமே. நம்புங்கள், நிகிலன்?" என்று ஆழ்ந்த குரலில், தெளிவாகச் சொன்னாள்.

ஆனால் "உன் சத்தியத்தைக் கொண்டு குப்பைத் தொட்டியில் போடு!" என்று அப்போதும் நம்ப மறுத்தான் அவன். "கடவுளே, கடவுளே என்று காலை வாருகிற குடும்பம்... காலை வாரினால் கூடப் பரவாயில்லை. அள்ளி தந்த கையை வெட்டி, ஆளை அழிக்கிற குடும்பம் உன்னையாவது, நம்புவதாவது? ஒருபோதுமில்லை. மரியாதை கெடுமுன், இங்கிருந்து கிளம்பு" என்றான் அவன்.

எவ்வளவுதான் தணிந்து போவது?

"இப்படி பேசி, அந்த மஞ்சரி ஆண்ட்டிக்குத் தேவையான உதவி



கிடைப்பதைத் தடுக்கிறீர்கள்!" என்று, மகிமா குற்றம் சாட்டியும் பார்த்தாள்.

"ஏன்? ஆண்ட்டிக்கு உதவி தேவை என்றால், அதை நாங்கள் செய்ய மாட்டோமோ?" என்று நிகிலன் கேட்டபோது, மகிமா ஒரு கணம் மலைத்துப் போனாள்.

உண்மைதானே? இவனிடம் பணம் இருக்கிறது. அந்தக் குடும்பத்திடம் அன்பு இருக்கிறது. உதவி செய்யாமல், எப்படி இருப்பான்?

உதவி செய்யப் போவதாக மகிமா சொல்வதே அசட்டுப் பேச்சா? மஞ்சரி, நல்ல நிலையில்தான் இருக்கிறாளா?

மனம் குன்றும்போதே நினைவு வர "நீங்கள்தானே, மகளை வளர்க்க அ...அவர்கள் சிரமப்படுவதாகச் சொன்னீர்கள்? அப்படியானால்... அ.. அது பொய்யா?" என்று கேட்டாள் அவள்.

முதல் முறையாக, அவன் சற்றே முகம் கன்றினான்.

பிறகு, "பொய்யில்லை. ஆனால், ரொம்ப ரோஷம் பார்க்கிறார்கள், ஆண்ட்டி. கணவரிடமிருந்து வந்தது. உயிர் போகிற நிலையில் கூட, அடுத்தவர் உதவியை மாமா நாடவில்லை. அதேபோல, ஆண்ட்டியும் அடுத்தவர் உதவியை ஏற்பதில்லை. தன் காலிலேயே நிற்கிறார்கள். எங்களிடம் உதவியை மறுக்கிறவர்கள், உன் போன்ற அசுரக் குடும்பத்து உதவியை மட்டும் பெற்றுக் கொள்வார்களா, என்ன?" என்றான் அவன்.

இந்த 'அசுர குடும்பத்தை' அவன் விடவே மாட்டான் போலும்!

போகட்டும். அதை இப்போது நினைத்து பயன் இல்லை!

"ஏற்கிறார்களா, இல்லையா என்று அவர்கள் முடிவு செய்யட்டுமே. நீங்கள், முகவரியைத் தந்தால் போதும்!"

"பரவாயில்லை. எங்கெங்கே சுற்றினாலும், கடைசியில், உனக்குத் தேவையான விஷயத்துக்கு வந்துவிடுகிறாய்!" என்று மெச்சுகிற வார்த்தைகளில் 'காரியக்காரி' என்று இகழ்ந்தான் நிகிலன்.

தொடர்ந்து 'அதேபோல, நானும், பேச்சு போக்கில் ஏமாறுகிற ஆள் இல்லை என்பதால், அவர்களைப் பற்றிய விவரத்தை உனக்குச் சொல்லப் போவதே கிடையாது. இனி, நீ போகலாம்" என்றான்.

நீ சொன்னாலும், சொல்லாவிட்டாலும், ஏதோ ஒருவழியில் அவர்களை நான் கண்டுபிடித்தே தீருவேன் என்று மனதுள் உறுதி செய்து கொண்டவாறே, மகிமாவும் எழுந்தாள்.

அந்த மஞ்சரியை எப்படிக் கண்டுபிடிப்பது என்று யோசித்தபடியே நடந்தவளை "ஒரு நிமிஷம்" என்று நிறுத்தினான் நிகிலன்.

கேள்வியாய் நோக்கியவளை "என்னிடம் ஊதியம் பெறும் நிர்வாகி,



Uploaded by Naghu

என்னை மீறி, உனக்கு எந்த விவரமும் தர மாட்டார். அதனால், அவரிடம் கேட்டு பயன் இராது" என்றான் ஏளனமாக "அத்தோடு இன்னொன்று, விடிகாலையில் கோவைக்கு வந்ததும், நேராக இங்கேயே வந்து அறை ஏற்பாடு செய்து தங்கியிக்கிறாய் என்று ரிஜிஸ்டரில் பார்த்தேன். ஆனால், தொடர்ந்து இங்கேயே தங்கி, அடிக்கடி பார்வையில் பட்டுக்கொண்டே இருப்பது நல்லதில்லை. ஊரில் எத்தனையோ நல்ல ஹோட்டல்கள் இருக்கின்றன. அதனால், சீக்கிரம் வேறு இடம் பார்த்துக் கொண்டு போய்விடு" என்று, முன்னிருந்த ஃபைலைப் பார்த்தபடியே விட்டேற்றியாக உரைத்தான்.

பேசாமல் திரும்பி நடந்தாள் மகிமா.

நிகிலனின் பேச்சு, நடப்பில் ஒரு விதமான வேடிக்கையான முரண்பாடு இருந்தது. அவளது மனதில்பட்டது.

அவன் அவளது முகத்தையே பார்த்திருந்ததால்தான், எப்படியேனும் மஞ்சரியைக் கண்டுபிடிப்பதில் மகிமாவுக்கு இருந்த உறுதியை, நிகிலன் ஊகித்திருக்க முடியும். அதே நிகிலன், அவள் திரும்பிப் பார்த்ததும், ஃபைல் மேல் பார்வையை வைத்து, அவளோடு பேசுகிறான்.

இப்படிப் பாராதபோது பார்ப்பதாகவும், பார்க்கும்போது வேறெங்கோ பார்ப்பதாகவும் சொல்லும் சங்ககாலப் பாடல், அதே பொருளில் அமைந்த திரையிசைப் பாடல் எல்லாம், மகிமாவுக்கு நினைவு வந்தன.

வேதனை என்னவென்றால், பாடல்களில் சொன்னது, காதலினால் நடப்பது, நிகிலனின் செயல், வெறுப்பில் விளைந்தது.

சாதாரணமாக ஒரு மனிதருக்கு - மணிவாசகத்துக்கு உதவி செய்வதாகத் தொடங்கியது. குளவிக் கூட்டைத் தொட்டுவிட்டது போல, அவளை அல்லவா துன்பம் துரத்தி அடிக்கிறது!

ஒரு பெருமூச்சுடன் அதைப் பற்றிய யோசனை, வருத்தம் இரண்டையும் ஒதுக்கி, மேலே செய்ய வேண்டியது பற்றி மகிமா யோசித்தாள்.

நிகிலன் சொன்னது சரியே. இன்றைய நிலையில், ஹோட்டல் நிர்வாகி அவளிடம் எதையும் சொல்ல மாட்டார்தான். நிகிலனை மீறி விவரத்தைச் சொல்லும்படி அவரிம் கேட்பதும் நியாயமில்லை!

ஆனாலும், அவரைப் பற்றிய பேச்சு, அவளுக்கு இன்னொன்றை நினைவுறுத்தியது!

'சாரைப் பார்க்க வந்தாயா, செல்லம்' என்ற அவரது கேள்வியில் இருந்த கனிவு.

'அம்மா கோபித்துக் கொள்ளப்போகிறார்கள்' என்று எச்சரித்தது.

அதாவது, மகள் இங்கே வந்து, செலவில்லாமல் சற்று நேரம்



விளையாடுவதே பிடிக்காதவள், அந்த நிலாவுடைய தாய்!

பிறர் உதவியை ஏற்க விரும்பாத, ரோஷக்கார மஞ்சரியே, அந்தத் தாயாக இருக்கலாமே!

வெறும் ஊகம்தான். ஆனால், உண்மையாகவும் இருக்கக்கூடும்!

நூறு சதவீதமாக உறுதியாகச் சொல்ல முடியாதபோதும், பெரும்பாலும் அந்த நிலாதான், மஞ்சரி சதானந்தனுடைய மகளாக இருப்பாள் என்று, மகிமாவுக்கு தோன்றலாயிற்று.

இருளில் வெட்டிய இன்னொரு மின்னலாக, அந்த நிலாவின் சிரிப்பு, அவளுக்கு நினைவு வந்தது.

முதலில் பார்த்தபோதே, அந்த சிரிப்பில் ஏதோ என்று எண்ணினாளே! அந்த 'ஏதோ' நிகிலனின் இயல்பான சிரிப்பின் சாயல்!

ஒன்று அந்த சிறுமி நிலா, நிகிலனை ஹீரோவாக எண்ணுவதால், தன்னையறியாமல் அவனைப் பின்பற்றிச் சிரிக்கப் பழகியிருக்கலாம்.

அல்லது இருவரும் ஏதோ வழியில் ரத்த உறவினராக இருந்து, அந்தச் சிரிப்பு, நிலாவுக்கு தானாகவும் அமைந்திக்கலாம்!

மறுபடியும் எல்லாமே ஊகங்கள்தான்.

ஆனால், சரி பார்த்து, உண்மை அறிந்து கொள்ள கூடிய ஊகங்களே!

அப்படி அவள் அறிந்துகொண்டு விடக்கூடாது என்றுதான், அறையைக் காலி பண்ணி, வேறு இடத்துக்குப் போய் விடுமாறு, நிகிலன் சொல்லியிருப்பானோ?

Uploaded by Naghu

எல்லாமே சீட்டுக்கட்டு மாளிகை போல, ஒன்றுமில்லாமல் போகவும் கூடும்.

சரியோ, தவறோ, முதலில் இந்த ஊகத்தைத் தெளிவுபடுத்திக்கொண்டு, அதன் பிறகுதான், இங்கிருந்து செல்ல வேண்டும் என்று, மகிமா முடிவு செய்தாள்.

ஒரு ஹோட்டலில் 'ரூம்' எடுத்துவிட்டால், கட்டிய பணம் முடிகிற வரை, அறையை காலி செய்வது, அவளது உரிமைதானே?

அந்த முயற்சியை முடித்த பிறகு, காலி பண்ணிக் கொள்ளலாம்!

அன்றைய நேரத்தை நினைவுபடுத்தி, சரியாக அதே சமயத்தில் சிறுவர் விளையாட்டுப் பகுதிக்குச் சென்று, அன்று போலவே, மரத்தடியில், ஆனால் சற்று மறைவாக, மகிமா அமர்ந்தாள். ஹோட்டலில் இருந்து பார்த்தால் சட்டெனத் தெரியாத விதமாக.

தினமுமே, பள்ளி முடிந்ததும், இங்கே வந்து சற்று நேரம் விளையாடுவது, நிலாவுக்கு வழக்கம் போலும்.

சற்று நேரத்திலேயே, நிலா அன்றும் வந்தாள்.

எப்படி இவளை அழைத்துப் பேசுவது என்று, மகிமா குழம்பிக்

கொண்டிருந்தபோது, அன்றைய தினத்தில், முதல் முதலாக அவளுக்கு சாதகமாக ஒன்று நடந்தது.

அன்று நிறையக் குழந்தைகள், ஊஞ்சலாட விரும்பின, அடாவடிச் சின்னது ஒன்று, ஊஞ்சலை விட மறுக்கவே அந்த நிலா, பிடிவாதமாக அவனை இறக்கி விட்டுவிட்டு, அடுத்து வந்த குழந்தையை, ஊஞ்சலில் ஏற்றினாள். ஆனால் முதல் குழந்தை கரம் வைத்து, கைப்பிடி மண்ணை எடுத்து, நிலாவின் முகத்தில் வீசி விட்டது.

'ஐயோ' என்று, கண்களை பொத்திக்கொண்டு அங்கேயே அமர்ந்துவிட்டாள் சிறுமி.

இன்னும் பெரியவளாக மகிமா ஓடிவரக் கண்டதும், வம்புக்கார குழந்தை சிட்டாகப் பறந்துவிட்டது.

நிலாவின் அருகில் போய், அவளது கண்களில் ஊதி, மண்ணை அகற்றி, மகிமா உதவி செய்தாள்.

தண்ணீர் கொண்டுவந்து, முகத்தையும் துடைத்துவிட, இயல்புக்குத் திரும்பிய நிலா, "தாங்க்ஸ் அக்கா" என்று முறுவலித்தாள், அழகான முறுவல்!

வாய்ப்பை விடாமல், "உன் பெயர் என்னம்மா?" என்று மகிமா பேச்சுக் கொடுத்தாள்.

நிலா என்ற பதிலை அவள் எதிர்பார்த்திருக்க "என் பெயர் வெண்ணிலா" என்று அவளைப் பிரமிக்க வைத்தாள் சிறுமி.

வெண்ணிலாவை நிலா என்று அழைப்பது இயல்புதானே.

ஆனால் 'ஹோட்டல் வெண்ணிலா' 'வெண்ணிலா டிராவல்ஸ்...' நிறுவனங்களுக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு இருக்கக் கூடும்?

தொடர்பு உண்டா? அல்லது தற்செயலான பெயர் ஒற்றுமையா? யாரிடம் கேட்பது?

முன்போலவே வயதைக் கொண்டு, இவள் நிகிலனுடைய மகளாக இருக்க முடியாது என்று, மகிமா நிச்சயித்தாள். இவளுக்கும், அவனுக்கும் இடையே சுமார் பன்னிரண்டு... அதிக பட்சமாக என்றாலும், நிச்சயமாகப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இடைவெளி இருக்காது.

பின்னே நிகிலனுக்கு இவள் என்ன உறவாக இருக்கக்கூடும்? தொழிலுக்கு, அவளது பெயரை வைக்கும் அளவுக்கு!

அந்த யோசனையில் சில கணங்களைக் கழித்த பிறகே, இது, தேவையற்ற யோசனை என்பது, மகிமாவுக்கு புரிந்தது.

அவளுக்குத் தேவை, நிலாவுக்கு மஞ்சரி என்ன உறவாகக் கூடும் என்ற விவரமே, அதைவிட்டு, நிகிலனைப் பற்றி, இப்போது என்ன யோசனை?



மஞ்சரிக்கு இந்த நிலா என்ன உறவு? அது, அவள் தேடி வந்த உறவு என்றால், அடுத்துச் செய்ய, எத்தனை இருக்கிறது!

அதுபற்றி கவலைப்படாமல், இந்த நிகிலன் பற்றி நினைப்பதே மூடத்தனம்!

மனதை ஒரு கட்டுக்குள் நிறுத்தி, மகிமா யோசித்து பேசினாள் "உன்னைப் போலவே, உன் பெயரும் அழகாக இருக்கிறது. உன் அம்மா பெயரும் இது போல அழகாக இருக்குமா? அவர்கள் பெயர் என்னம்மா?" என்று பரபரப்பைக் கட்டுப்படுத்திக்கொண்டு விசாரித்தாள்.

அந்த பதின்களின் வயதுக்கே உரிய சந்தேகத்துடன் "நான் அழகா, அக்கா?" என்று வெண்ணிலா ஆவலும் கவலையுமாக வினவினாள்.

மனசாட்சிக்குத் துரோகம் பண்ணாமலே "ரொம்ப!" என்று, மகிமாவால் சந்தோஷமாகச் சொல்ல முடிந்தது. "அதுதான் சொன்னேனே, பெயரைப் போலவே என்று!"

திருப்தி புன்னகையோடு, சின்னவள் பேசினாள் "முன்னெல்லாம் என் பெயர் எனக்குப் பிடிக்கவே பிடிக்காதுக்கா. நிலவு மாதிரி, நீயும் பெரிசாகி சின்னதாய் ஆவாயா? மாதத்தில் ஒருநாள் காணமல் போவாயா என்றெல்லாம் வகுப்பிலே கேலி செய்வார்களா? இந்தப் பெயரை வைத்தார்களோ என்ற எரிச்சலாக இருக்கும். ஒருநாள் நிக்கி அண்ணன்தான், இரவிலே இருட்டு நேரத்திலேயும் வெளிச்சம் கொடுக்கிற நிலவு மாதிரி, எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கிறவள் என்று, அம்மாவும் அப்பாவும், எனக்கு இந்தப் பெயரை வைத்ததாக சொன்னார். அப்புறம்தான், எனக்கு இந்தப் பெயர் பிடித்தது அக்கா!"

நிக்கி அண்ணன் என்றால், நிகிலனாகவே இருக்கலாம். ஆனால் மஞ்சரியுடைய மகள், அவனுடைய தங்கையாக எப்படி இருக்க முடியும்? அவனது தொழில்களின் பெயரும் இது என்றால்... என்று அவனிடம் ஓடிய மனதை, மறுபடியும் அடக்கி, தேடி வந்த விவரத்தை மகிமா மீண்டும் கேட்டாள் "அம்மா பெயர் சொல்லவில்லையே! வெண்ணிலா?"

முதலில் இதை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

"அம்மா பேரும் அழகானதுதான். அதற்கு அர்த்தம் கூட பூங்கொத்து. முத்து என்றெல்லாம் இருக்கிறது. அது என்ன தெரியுமா? ம்..." என்று தொடங்கிய சின்னவளின் பார்வை, மகிமாவின் பின்புறம் உயர்ந்து நோக்க, அவளது முகமும் மலர்ந்தது "நிக்கியண்ணா!" என்று குதூகலத்துடன் கூவினாள்.

கடவுளே... என்று சோர்ந்தது, மகிமாவின் மனம்.

சரியான இந்த நேரத்தில்தான், இவன் வர வேண்டுமா?



Uploaded by Naghu

அவளது நடமாட்டம் பற்றி, நிகிலன் கவனம் வைத்திருப்பான் என்பது, மகிமா எதிர்பார்த்ததுதான். ஆனால், இவ்வளவு சீக்கிரமாக வந்துவிடுவான் என்று, அவள் நினைக்கவில்லை.

மாணவ, மாணவியர் கடத்தல் பற்றிய செய்திகள் வெளிவரும் இந்த நேரத்தில், வெண்ணிலாவை அச்சுறுத்தி விடக்கூடாது, என்று அவளிடம் இயல்பாகப் பேச்சு கொடுத்தது, தப்பாகிவிட்டது. ஆனால் அவள் அப்படி நேரடியாக விவரம் கேட்டிருந்தால், வெண்ணிலாவே, சொல்லியிருப்பாளோ, என்னவோ?

இப்போது இவன் என்ன தகராறு செய்யப் போகிறானோ?

அவள் மெல்லத் திரும்புகையில், "என்னம்மா, அன்னியர்களோடு பேசக் கூடாது என்று, பள்ளியில் சொல்லியிருப்பதாகச் சொன்னாயே, இப்போது வீட்டுக் கதையெல்லாம் அளந்துகொண்டு நிற்கிறாயே!" என்று மகிமாவைத் திரும்பியும் பாராமல், சின்னவளிடம் சென்றான் நிகிலன்.

"போண்ணா, நான் ஒன்றும் அன்னியரிடம் பேசவில்லை. இந்த அக்கா உன் ஹோட்டலில் தங்கி இருக்கிறார்கள். அன்றைக்கு அங்கிள் கூட, அக்காவோடு பேசினதைப் பார்த்தேனே. பிறகு கெட்ட, வேற்றாளாக எப்படி இருக்க முடியும்.?" என்று கேட்ட சிறுமியை தட்டிக் கொடுக்க வேண்டும்போல இருந்தது, மகிமாவுக்கு.

"என்ன சொன்னாலும் சில பேருக்கு, நல்லவர்கள், கெட்டவர்களை கண்டுபிடிக்கவே தெரிவதில்லை, நிலாம்மா" என்றான், பொதுவாகச் சொல்வது போல.

அவன் சும்மா இருப்பான் என்று, அவள் நினைக்க முடியாதுதானே?

"தலைமுறை தலைமுறையாக, நல்லவர்கள் போல நடித்து, குடியை கெடுக்கிறவர்கள் உண்டு, நிலா. அதனால், நம் ஹோட்டலில் தங்குவதையோ, ஓரிருமுறை நம்மில் யாரேனும் அவர்களோடு பேசுவதையோ வைத்து, யாரையும் நம்ப கூடாது. என்னடா? சரி நேரமாகிவிட்டது. கிளம்பு அம்மா கவலைப்படுவார்கள்!" என்று நிலாவை அங்கிருந்து அனுப்பி வைத்தான்.

அவளோடு கூடச் சென்றுவிடக்கூடாது என்று, மகிமாவை வழி மறித்து நிற்கவும் செய்தான்.

காதெட்டாத தூரத்துக்கு வெண்ணிலா சென்றதும், "மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டியது இல்லை. நீ இந்தக் குடும்பத்தை எப்படியாவது, மோப்பம் பிடித்துவிடுவாய் என்று, எனக்கு நிச்சயம்தான். ரைட். நாள் கணக்கில், இதுவேறு இழுத்துக்கொண்டே போவதற்கு நானே சொல்கிறேன்" என்று அங்கே கிடந்த சிமெண்ட் பெஞ்ச் ஒன்றை



Uploaded by Naghu

காட்டி, உட்காருமாறு சைகை செய்தான்.

தலைமுறை மீன்குஞ்சு! வருத்தமாக இருந்தாலும், காட்டிக் கொள்ளாமல் அமர்ந்தாள் அவள்.

ஓர் ஓரமாகத் தானும் அமர்ந்து கொண்டு சொல்லலானான்.

"எனக்கும் அந்தக் குடும்பத்துக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது என்பதை ஊகித்திருப்பாய். என் சொந்த அத்தைதான் மஞ்சரி சதானந்தன். உன் தந்தை மூட்டிக் கொடுத்த 'சாப்பாட்டுக் கடைக்காரன் பெண்' அப்போது எங்கள் வீட்டில் பணம் இல்லை என்றாலும், என் அப்பாவுக்கு பிறகு, இரண்டு பிள்ளைகளை இழந்து, கடைசியாக பிறந்த அத்தையிடம், வீட்டில் எல்லோருக்குமே பாசம் அதிகம். சக்தியை மீறியே, அவளது ஆசைகளை நிறைவேற்றுவார்கள். அப்பாவுக்கும் அத்தைக்கும் பதினைந்து வயது வித்தியாசம். எனக்கும் வெண்ணிலாவுக்கும் போல.

"தந்தையை எதிர்த்து வந்த மாமா, அத்தையைத் திருமணம் செய்து, இருவருமாக வெளியூர் சென்று விட்டனர். அதுவே மாமாவின் ரோஷமாகத்தான் இருந்திருக்க வேண்டும். வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கப் பிடிக்காமல், ஏதோ வேலை கிடைத்தது என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

"இங்கே சாப்பாட்டுக் கடையை ஹோட்டலாக வளர்த்துக் கொண்டிருந்த நேரம். எங்களுக்கும் ரோஷம் இருந்தது. தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா.... படிப்பு நேரம் தவிரப் பத்து வயதிலிருந்து நானும் கூட, ஓய்வற்று உழைத்தோம்.

"இங்கே வளர, வளர அங்கே தேய்ந்திருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் கழித்து, வெண்ணிலா பிறப்பதற்காக, அத்தை வந்தபோது, இருவருமே எலும்பும் தோலும்தான். மாமா தேறவில்லை.

"அத்தை பட்ட வேதனை! எனக்கு ஒரு நாளும் மறவாது! அத்தை வேதனைப்படக் கூடாது என்று, தனக்கு ஒன்றுமில்லாதது போல, மாமா நடித்ததும்தான்!

"மாமாவின் முடிவு எல்லோரும் அறிந்ததுதான். ஆனால், வெண்ணிலாவை அழைத்துக்கொண்டு, அத்தை தனியாக வாழ கிளம்பியது, தாத்தா பாட்டியை உடைத்துவிட்டது.

"அடுத்தவரிடம் உதவிக்கு போய் நில்லாமல், வாழ வேண்டும் என்று, மாமா, அத்தையிடம் சொன்னாராம். வேதவாக்காய், அதை இன்றுவரை பிடித்துக்கொண்டு வாழ்கிறார்கள்.

"அன்பான உறவினர்கள், எங்கள் உதவியையே வேண்டாம் என்று விலக்குகிறவர்கள், அவர்களை அழித்த அசுரன் மகள், உன் உதவியை

ஏற்பார்களா?

"இனியேனும் சொல்வதை ஏற்று, இங்கிருந்து கிளம்புகிறாயா? இந்த ஊரிலிருந்தே கிளம்பச் சொன்னேன்!" என்று முடித்தான் நிகிலன்.

அவனை நேராகப் பார்த்தாள் மகிமா.

"ஒரே ஒருதரம், நான் சொல்வது உண்மையாக இருக்கக்கூடும் என்று உங்களால் எண்ணிப் பார்க்க முடியாதா?" என்று அவள் கேட்டு முடிக்குமுன், "முடியாது" என்று பதில் சீறிக்கொண்டு வந்தது.

"என் அத்தையின் துன்பத்தைப் பக்கத்தில் இருந்து பார்த்தவன், மாமா மட்டுமல்ல, என் தாத்தா, பாட்டி உயிருக்கும் எமனாக வந்தவன், அவன் மகளை நம்புவதா? ஒருக்காலுமில்லை!"

சிப்பிக்குள் முத்து, சேற்றில் செந்தாமரை என்று எத்தனையோ சொல்லலாம். ஆனால் சொல்வதால் பயன் இராது என்று தெரியும்போது, வார்த்தைகளையோ, நேரத்தையோ, அதில் வீணக்குவானேன்?

எனவே "என் கணக்குப்படி, உங்கள் அத்தைக்குக் கிட்டத்தட்ட நாற்பது வயது ஆகியிருக்க வேண்டும். தான் யாருடன் பேசுவது, யாரோடு கூடாது என்ற, அவர்கள் தீர்மானிக்கட்டும். அந்த உரிமையை நீங்கள் பறிப்பது நன்றாக இல்லை" என்றாள் அழுத்தமான குரலில்.

ஆத்திரமாக முறைத்தான் அவன்.

கலங்காமல், "ஆமாம், நிகிலன். உங்கள் அத்தை, முட்டாளாக இருக்க முடியாது. இப்போது, உங்களது எச்சரிக்கை வேறு இருக்கிறது. அப்புறமென்ன?" என்று வினவியவள், ஒரு நிமிர்வுடன் அவனைப் பார்த்தாள்.

Uploaded by Naghu

"நான் அவர்களைச் சந்திப்பதை, உங்களால் தடுக்க முடியாது, நிகிலன். அந்த உரிமையும், உங்களுக்குக் கிடையாது" என்றாள் தெளிவாக.

முகம் லேசாகக் கன்றியபோதும், "உண்மைதான், இதுதான் சுதந்திர நாடு ஆயிற்றே! தடுப்பது, முடியாதுதான். ஆனால் அத்தையோடு நீ பேசும்போது, கண்ட நாடகம் நடத்தி, அவர்களை நீ ஏமாற்ற முடியாமல், நானும் கூட இருப்பேன்" என்றான் அவன் கறார் குரலில்.

தலை சரித்து நோக்கி "மஞ்சரி ஆன்ட்டி புத்திசாலியாக இருப்பார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால், உங்களுக்கு வேறு மாதிரி அபிப்பிராயம் போலத் தெரிகிறது!" என்று உதட்டோரத்தில் ஓர் ஏளன வளைவுடன் மகிமா கூறினாள்.

சீண்டலை உணர்ந்து, கோபமாக முறைத்தவன், உடனே மாறினான்.

"என்னைத் தவிர்க்க, இவ்வளவு முயற்சிக்கிறாயே? இதுதான் என்



சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது!" என்றான் யோசனையாக.

இப்போது அவன் கெட்டிக்காரத்தனமாக, மகிமாவை வாய் மூட வைத்துவிட்டான்.

இனியும், அவனை வராதே என்று, சொன்னால், நன்றாக இராது! வந்தாலும், பிரச்சினை! ஒரு வார்த்தை தொடர்ந்து பேச விடாமல், குறுக்கிட்டுக் கொண்டே இருப்பான். என்ன செய்வது?



## தீக்குள் விரலை வைத்தேன் 13

நிகிலன் இல்லாமல் மஞ்சரியைச் சந்தித்துப் பேசுவது இயலாது என்று, மகிமாவுக்குப் புரிந்து போயிற்று.

கொலைக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த மகிமாவிடம் இருந்து, தன் அன்பு அத்தையைக் காப்பதாக எண்ணி, அவள் என்ன சொன்னாலும், தட்டிப் பேசிக் கெடுக்கப் போகிறான்.

அவள் சொல்வதை, மஞ்சரி காது கொடுத்துக் கேட்பதையே தடுத்தால், அப்புறம், மகிமா வந்த நோக்கம் எப்படி நிறைவேறும்!

பெற்றோர் செய்த பாவத்துக்கோ, ஏதாவது பிரயாசித்தம் செய்தே ஆக வேண்டும். அதை விட முடியாது!

வேகமாக யோசித்து, "நீங்கள் சொல்வது, ஒரு வகையில் சரிதான். நீங்கள் கூட வருவது எனக்குப் பிடிக்கவில்லை என்பது உண்மையே. ஆனால், காரணம்தான், நீங்கள் நினைப்பது அல்ல" என்றாள் மகிமா மெதுவாக.

அவன் உதட்டைப் பிதுக்கவும் "நிஜம், நிகிலன். ஆனால் காரணத்தைச் சொன்னாலும் ரொம்பக் கோபப்படுவீர்கள், அதுதான்..." என்று நிறுத்தினாள்.

"என்ன ஜாலம்! நீ என் கோபத்துக்காக பயந்து நடுங்கிக் கொண்டு இருக்கிறாயாமா? அப்படியானால், நீ இப்போது சென்னையில் அல்லவா, இருக்க வேண்டும்? சும்மா நடிக்காமல், என்னவென்று சொல்லு"

தோளைக் குலுக்கினாள் மகிமா "ஏற்கனவே சொன்னதுதான். மஞ்சரி ஆன்ட்டிக்குப் புத்தியே கிடையாது போல, எங்களை பேச விடாமல், சும்மா குறுக்கிட்டு, நீங்களே ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பீர்கள். அதற்குத்தான், நீங்கள் வருவது எனக்குக் கொஞ்சம் பிடிக்கவில்லை" என்றாள் தெளிவாக.

குரலில் தொனித்த ஏளனமும் சேர்ந்து, நிகிலனைக் கொதிநிலைக்கு கொண்டு சென்றது.

பெரு முயற்சி செய்து, அதை அடக்கி, "மாலை ஐந்தரைக்குத் தயாராக இரு. அத்தை வீட்டுக்கு அழைத்துப் போக வருகிறேன். ஆனால் என் வாயைக் கட்டி, அத்தையை ஏமாற்றி விடலாம் என்று நினைத்தால், நீதான் ஏமாந்து போவாய்!" என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பிவிட்டுச் சென்றான் அவன்.

நிகிலன் விஷயத்தில் இது சாதனைதான்.

ஆனாலும், உடம்பெல்லாம் வெலவெலப்பது போல உணர்ந்தாள் அவள்.

கூடாது. அவன் விஷயம், கிட்டத்தட்ட முடிந்துபோன ஒன்று. அவனது கோபதாபங்கள், அவளைப் பாதிக்குமாறு விடுவது, அவளுக்குத்தான் பெரும் பாதகம்!

மனதை அமைதிப்படுத்திக் கொள்ள வேண்டிச் சற்று நேரம் அசையாமல் உட்கார்ந்திருக்கையில், ஹோட்டல் சீருடை அணிந்த ஒருவன், இரு நடுத்தர வயதுப் பெண்களுடன் அங்கே வந்தான்.

"இதாம்மா, நீங்க பார்த்துக் கொள்ள வேண்டிய இடம். பசங்க விளையாடுதுங்களே, இதுங்களுக்கு அடி பட்டுவிடாம, ஒன்னை ஒன்னு அடிச்சுக்காமப் பார்த்துக்கணும். கவனம். ஏதாச்சும் தப்பினா, இன்னிக்கே வேலை போயிடும்" என்று அதட்டலாகச் சொல்லிவிட்டுப் போனான்.

அவளது யோசனை!

என்னதான், இது ஹோட்டலுக்கு நல்லது என்பதால் செய்கிறான். அவர்களது சொந்த வாழ்வுக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது என்று, மகிமா தனக்குத்தானே பலமுறை சொல்லிக் கொண்டாலும், அவளது சோர்வு மாறி, சுகமாகத்தான் இருந்தது.

நிகிலன் அனுமதிப்பானோ, மாட்டானோ என்ற பயத்துடனேயே, வெளியே சென்று, கொஞ்சம் பழங்கள் வாங்கி வைத்தாள்.

ஆனால், இளப்பமான ஒரு பார்வை தவிர, அவன் எதுவும் சொல்லவில்லை.

இப்போதே, அவளுக்கு அளித்த வாக்கை காப்பாற்றத் தொடங்கிவிட்டான் போலும்!

மஞ்சரியின் முகத்தைப் பார்த்ததுமே, மகிமாவுக்குப் பலதும் புரிந்தது.

சதானந்தனின் உயிர் நேசம், நிகிலனின் பரிவான அன்பு, அவன் சொன்ன மற்றவர்களின் பாசம்!

மஞ்சரியின் அழகு, அவள் எதிர்பார்த்ததே. ஆனால், அதை விடவும் அவளது முகத்தில் இருந்த சாந்தமே, எல்லோரையும் இவ்வளவு தூரம் வசீகரித்திருக்க வேண்டும் என்று மகிமாவுக்குத் தோன்றியது.

"இதெல்லாம் எதற்கம்மா" என்று மகிமா நீட்டிய கூடையை வாங்கி



அருகில் இருந்தமேஜைமேல் வைத்துவிட்டு, உட்காரச் சொல்லி, மகிமா அமர்ந்ததும், "நீ உன் அம்மா ஜாடை" என்றாள் மென் குரலில்.

சற்று திகைத்து "என் அம்மாவைத் தெரியுமா, ஆன்ட்டி?" என்று மகிமா வினவினாள்.

"ம், தெரியும். சதாவோடு எஸ்டேட்டுக்கு போனபோது இரண்டு முறை பார்த்திருக்கிறேன்"

கணவனோடு மஞ்சரி சங்கபூமிக்குச் சென்றபோது, அங்கே என்ன நடந்திருக்கும் என்று, மகிமாவால் ஊகிக்க முடிந்தது. நிகிலனின் கடுத்த முகம், ஊகத்தைத் தெளிவுபடுத்தியது.

"அப்போதும், நான் யார் என்று தெரிந்தும், என்னை சந்திக்க, ஒத்துக் கொண்டீர்களா, ஆன்ட்டி?" என்றாள் மகிமா, தடைப்பட்ட குரலில்.

அண்ணன் மகனிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு "ஏனம்மா கூடாது? ஏதோ காரணம் இருக்கப் போய்தான், நீ என்னைப் பார்க்க வந்திருக்கிறாய்? அத்தோடு ஒருவர் கெட்டவராக இருந்தால், அவருடைய குடும்பமே கெட்டதாக இருக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்?" என்றது, மஞ்சரின் சாந்தமான குரல்.

கரகரவென்று கண்ணீர் பொங்கிவிட்டது மகிமாவுக்கு.

மஞ்சரியின் கையைப் பற்றிக்கொண்டு தடையற்று அழுதால், நன்றாக இருக்கும்தான். ஆனால் நடிப்பதாக, நிகிலன் சொல்வானே!

சமாளிக்கும் முயற்சியாக எழுந்து, சுவரில் மாட்டியிருந்த படத்தின் முன் சென்று, படத்தை ரசிக்கும் பாவனையில், மற்ற இருவருக்கும் முதுகு காட்டி நின்றாள் மகிமா. எதிரே, ஏதோ பள்ளிக் கைவேலை. கண்ணீரில் தெளிவற்றுத் தெரிந்தது.

தொண்டையைச் செருமிக் "இஇந்தப் ப...டம் நன்...றாக இருக்கிறது" என்று, எப்படியோ சொல்லி முடித்தாள்.

வினாடி நேர அமைதியின் பின் "பின்புறக் கதவின் வழியே போனால், இடது பக்கம் குளியலறை. போய், முகத்தைக் கழுவிக்கொண்டு வா, மகிமா" என்றாள் மஞ்சரி.

சின்னவளுக்கு இன்னொரு தரம் சொல்லத் தேவையிருக்கவில்லை.

நன்றாக முகத்தில் நீர் அடித்துக் கழுவிக்கொண்டு, மனதிலும் அமைதியை வருவித்துக்கொண்டு, மறுபடியும், ஹாலுக்கு வந்து அமர்ந்தாள் "சாரி...சாரி" என்றாள் சின்ன குரலில்.

ஏதோ புத்தகத்தைத் திருப்பிப் பார்த்துக் கொண்டு இருந்த நிகிலன், அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவனுக்கு மட்டும், கெட்டவர் மகள், கெட்டவள்தான்!

கோவை பிடித்திருக்கிறதா என்பது போன்ற சில, பொதுப்படையான



Uploaded by Naghu

கேள்விகளின் பின், "இன்னும் சற்று நேரத்தில் நிலா 'ட்யூஷன்' முடிந்து வந்துவிடுவாள். அதற்குள் சொல்லு மகிமா, நீ என்னை எதற்காகப் பார்க்க வந்தாய்?" என்று மஞ்சரி வினவினாள்.

மகிமாவின் பார்வை, நிகிலனிடம் பாய்ந்தது.

இவன் சொல்லாமலா, இருந்திருப்பான்?

பார்வை புரிந்தவளாக, "நீ யார் என்ன என்று, அந்த விவரம் மட்டும்தான் நிக்கி சொன்னான். மற்றது, நீதானே சொல்ல வேண்டும்?" என்றாள் மஞ்சரி.

இதற்காகவே காத்திருந்தவள், கடகட வென நடந்த அனைத்தையும் சுருக்கமாக உரைத்தாள். சொல்லிவிட்டு "ஆன்ட்டி, எல்லாமே, உங்கள் பணம், உங்கள் சொத்து. திருப்பிக் கொடுத்து விடுமாறு, என் தந்தையிடம் எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். மறுத்துவிட்டார். ஆனால், என்னாலான பிராயசித்தம், நாற்பதாயிரம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆன்ட்டி. இழந்ததற்கு எந்த விதத்திலும் ஈடாகாது. என்னால் ஆன உதவியை செய்ய, நீங்கள் அனுமதிக்க வேண்டும், ஆன்ட்டி! ப்ளீஸ்!" என்று கை குவித்துவேண்டினாள் மகிமா.

"என் பெற்றோர், அண்ணன் இதோ இவன் உதவியைக் கூட, நான் ஏற்றது இல்லையேம்மா. அப்படியிருக்க...."

"இவர்களும் நானும் ஒன்றில்லையே, ஆன்ட்டி!" என்று குறுக்கிட்டாள் மகிமா. "இவர்கள் எல்லோரும் உங்கள் உறவினர்கள். உங்களை மிகவும் நேசிப்பவர்கள் உங்கள்..."

பக்கம் திருப்பப் போன நிகிலனின் கை அசையாமல் நிற்பது, ஓரக் கண்ணில் பட்டபோதும், பேச்சை நிறுத்தாமல் தொடர்ந்து "உங்களது நலம் விரும்பிகள், ஆன்ட்டி. ஆனால் நான் இப்படியல்ல. உங்களுக்குத் தீமை செய்தவர்களுடைய மகள். உங்களை ஏமாற்றி சுருட்டிப் போன உங்களது பணம், சொத்தில், உயிர் வளர்த்தவள். கடன் பட்டிருக்கிறேன், ஆன்ட்டி! பிரயாசித்தம் பண்ணத் தயவு செய்து, எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்!" என்றாள் மகிமா, மன்றாடலாக.

பார்வை பளிச்சிட்டபோதும், எதுவும் சொல்லாமல், இமை தாழ்த்தி, நிகிலன் மறுபடியும் புத்தகத்தைப் புரட்டலானான்.

இந்தக் கோரிக்கையை மஞ்சரியால் மறுக்க முடியாது என்று, மகிமா நினைத்திருக்க, பெரியவள் வேறு சொன்னாள்.

"தப்புக்கு தீர்வு இரண்டு வகை, மகிமா. அவற்றுள் ஒன்றுதான் பிராயசித்தம். அதைச் செய்யாவிட்டால், கிடைப்பது தண்டனை. அதைத்தான், நீ ஏற்கனவே, உன் தந்தைக்குக் கொடுத்து விட்டாயே! பிறகு எதற்குப் பிராயச்சித்தம்?" என்று கேட்டாள்.



சின்னவர்கள் இருவருக்குமே திகைப்புதான்.

"த...தண்டனையா?... நான் எங்கே... என்னால் என்ன தண்டனை" என்று குழப்பமும், திகைப்புமாக மகிமா தடுமாற, நிகிலன் யோசனையோடு தன் அத்தையைப் பார்த்தான்.

"என்ன தண்டனையா? அவர்களைப் பிரிந்து வந்திருக்கிறாயே! அதுவும், சும்மா அல்ல. வெறுத்து, உதறிவிட்டு வந்திருக்கிறாய். பெற்ற பெண், ஒரே மகள்! அதிலும், மணமுடிக்கக் கூடிய வயது! இந்தப் பிரிவு, எவ்வளவு வேதனையாகவும், அவமானமாகவும் இருக்கும்? இதற்கு மேல், ஒருவருக்கு என்ன தண்டனை வேண்டும், சொல்லு!" என்று உணர்ந்து பேசினாள் மஞ்சரி.

தன்னைப் போலப் பிறரையும் நினைக்கிற நல்ல மனது! பாவம்!

ஆனால், அன்று தந்தை கூறியது நினைவு வர, மறுப்பாகத் தலையசைத்தாள் மகிமா.

அன்றைய நடப்பை அப்படியே எடுத்துச் சொல்லிவிட்டு "மானம் கெடுகிற மாதிரியான வேலை எதுவும், நான் செய்ய மாட்டேன் என்று என் பெற்றோருக்குத் தெரியும், ஆன்ட்டி! அதனால், நீங்கள் நினைக்கிற தண்டனை, என் அப்பாவுக்குத் தண்டனையே ஆகாது. ஆன்ட்டி" என்றாள் மகிமா.

தொடர்ந்த சிறு அமைதியின் பின், அவளே பேசினாள் "அதனால், என் பிராயச்சித்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், ஆன்ட்டி!" என்று கெஞ்சுதலாகக் கேட்டாள்.

"நீ பகவான் ராமகிருஷ்ணரின் போதனைகள்' புத்தகம் படித்திருக்கிறாயா, மகிமா?" என்று மஞ்சரி கேட்டாள்.

'என்ன திடீரென்று' என்பது போல, மகிமா கேள்வியாக நோக்கவும் "அதிலே ராமனுக்குத் தப்பு செய்துவிட்டு, கிருஷ்ணனிடம் மன்னிப்புக் கேட்டுப் பயனில்லை என்று ராமகிருஷ்ணர் சொன்னதாக வரும், அதையே சற்று மாற்றி யோசி, கிருஷ்ணன் செய்த தப்புக்கு, ராமன் மன்னிப்புக் கேட்கலாமா? அதிலும் பயனிராதுதானே?" என்றாள்.

"அது சரிதான், ஆன்ட்டி. ஆனால், மாதா பிதா செய்தது மக்களுக்கு என்றும் சொல்வார்களே. தப்பு செய்தது தந்தை எனும்போது, அதற்கான பரிகாரத்தை மகள் செய்வதுதானே, நியாயம்?" என்று வாதாடினாள் மகிமா.

"இல்லை மகிமா, பரிகாரமோ, பிரயாச்சித்தமோ, தப்பு செய்தவர்கள் தான் செய்ய வேண்டும். உப்பைத் தின்றவர்கள், அவர்களே தண்ணீர் குடித்தால்தான் தாகம் தீரும், அல்லவா? முட்ட முட்ட, இன்னொருவர் தண்ணீரைக் குடித்து என்ன லாபம்? அத்தோடு, வெண்ணிலா



Uploaded by Naghu

அப்பாவுக்கு, மற்றவரின் உதவியை ஏற்பது பிடிக்காது. இன்றுவரை அவ சொன்னதைக் கடைபிடித்தே வாழ்ந்துவிட்டேன். இப்போது அ மாற்ற, நான் விரும்பவில்லை. எனவே, இதற்காக நீ வீட்டை விட் வந்திருந்தால், அவர்களிடமே திரும்பிப் போய்விடு" என்றாள் மஞ்ச முடிவாக.

அதே, அமைதியான குரல்தான். ஆனால், அவளது முடிவை மறுத்து மேலே வாதாட, மகிமாவால் முடியவில்லை. அவ்வளவு தீர்மானம்!

பெருமூச்சை அடக்கி "திரும்பிப் போக மாட்டேன், ஆன்ட்டி. அந் பாவப் பணத்தில், இனியும் வாழ முடியாது. ஒருவேளை, அப்பா திருந் வந்தால்... ஆனால், அது நடப்பதற்கு இல்லை. எனவே கிடைத்திருக்கு வேலையைப் பார்த்துக்கொண்டு, இங்கே கோவையிலேயே இருந்துவிடப் போகிறேன்" என்றாள் அவள்.

"ஹை! நீ இங்கேயே இருக்கப் போகிறாயா அக்கா?" என்று கேட்டபடி உள்ளே வந்தாள் வெண்ணிலா. "அம்மா, இந்த அக்காதான் என் கண்ணில் விழுந்த மண்ணை ஊதி எடுத்தது!" என்று தாயிடம் உரைத்தாள்.

மகளை ஒருதரம் கூர்ந்து பார்த்தாள் மஞ்சரி "மகிமா. இருந்த இடத்து மண், உன் கண்ணில் எப்படி விழுந்தது?"

மகளின் பார்வை தடுமாறவும் "ஓஹோ! ஹோட்டலுக்கு விளையாடப் போனாய் போல!" என்றாள் அன்னை. "அது அங்கே வந்து தங்குகிற வாடிக்கையாளர்களுடைய பிள்ளைகளுக்கு உரியது, நமக்கு இல்லை என்று, எத்தனை முறை சொல்லிவிட்டேன்"

"நிலாவுக்கு இல்லாதது என்று, நம் ஹோட்டலில் எதுவுமே கிடையாது, அத்தை!" என்று அவ்வளவு நேரம் பேசாதிருந்த நிகிலன், அழுத்தமாகக் குரல் கொடுத்தான்.

"இருக்கட்டும் நிக்கிம்மா. ஆனால், இதை ஒரு பழக்கமாக ஆக்கக் கூடாது. இப்போது, உன் விஷயம் சொல்லு, மகிமா. இங்கே கோவையிலேயே வசிக்கப் போவதாகச் சொன்னாயே, எங்கே தங்கப் போகிறாய்?" என்று மஞ்சரி, மகிமாவிடம் விசாரித்தாள்.

பேச்சினூடே, தெரு முனையில் இருந்த ஒரு மகளிர் விடுதியில், தங்கும் இடத்துக்கு ஏற்பாடு செய்வதாக, மஞ்சரி உறுதியளித்தாள். "ரொம்ப நாளாக தெரிந்தவர்கள், கேட்டால் கட்டாயம் செய்வார்கள்"

"ரொம்ப நன்றி, ஆன்ட்டி. என்னதான் நல்ல சம்பளம் என்றாலும் உங்கள் அண்ணன் மகனின் ஹோட்டலில் தங்குவதற்கு கட்டுபடி ஆகாதே. வெளியேயும் முன் பின் தெரியாத இடத்தில் யாரை நம்பி எங்கே தங்குவது என்று, உள்ளூர கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.



நல்லவேளை! உங்கள் உதவியால், அந்த பிரச்சினை தீர்ந்தது!" என்றாள் சின்னவள், நிம்மதியோடு.

சொன்னது உண்மையே என்றாலும், நிகிலனுக்குச் சிறு சுட்டுத்தான். ஆனால் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவனின் உதட்டோரம் லேசாக இறுகியது. தவிர, அவன் ஏதும் சொல்லாததால், உரையாடல் சாதாரணமாகத் தொடர்ந்தது.

மஞ்சரியோடு, மகிமாவால் தடையற்று, கலகலப்பாகப் பேச முடிந்தது. மற்றவளும் அப்படியே.

இருவருக்கும் நிறைய விஷயங்களில், ஒத்த மனம் இருந்தது.

பேச்சுவாக்கில் "நிலாவின் பள்ளி தாண்டித்தான், நான் வேலைக்குப் போக வேண்டும், ஆன்ட்டி. போக வர கார் தருவார்கள். அவளை அப்படியே பள்ளியில் விட்டுவிட்டுப் போய்விடலாம்" என்று இயல்பாக மகிமா சொன்னதுபோது, பெரியவள் வேகத்துடன் மறுத்தாள்.

"ஒரு தரம்கூட, அப்படிச் செய்துவிடாதே, மகி. பழகிய சுகத்தை இழக்கும்போது, ரொம்பவும் வேதனையாக இருக்கும். அதனால், அது போன்ற ஓசி சுகம் எதையும், நிலா பழக விட்டுவிடாதே என்று சதா சொல்லியிருக்கிறார். அதனால்தான், என் அண்ணன், நிக்கியின் பல உதவிகளை, எப்போதும் நான் மறுத்தே வந்திருக்கிறேன். இப்போதும், அது வேண்டாம்" என்று மஞ்சரி உறுதியோடு கூறிய அப்போதும், மற்றவளால் வற்புறுத்த முடியவில்லை.

ஒரு வினாடி அமைதியின் பின், மஞ்சரி பேச்சைத் தொடர்ந்தாள் "என்னால்தானே என்று வருந்துவேன் என்றோ, என்னவோ, சதா வெளியே காட்டிக்கொண்டதே இல்லை. ஆனால் மகி, பழகிய சுகங்களை விட நேர்ந்தபோது, எவ்வளவு கஷ்டப்பட்டிருந்தால், மகள் அந்தத் துன்பம் படக்கூடாது என்று, அந்தக் கடைசிக் காலத்தில் இதைச் சொல்லியிருப்பார்! அதற்கு நான் மதிப்புக் கொடுக்க வேண்டாமா?" என்றபோது, மகிமாவுக்குத் தொண்டையை அடைத்தது.

நிகிலனின் கண்கள் கனன்றதும், எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றுதான். இந்த வேதனையின் மூலகாரணம் அவளுடைய தந்தை ஆயிற்றே!

இரவு உணவுக்கு என்ன பிடிக்கும் என்று மஞ்சரி கேட்கும்வரை, இவருக்கும் இடையே உரையாடல் நீடித்தது.

"எங்களால் அதிகப்படி வேலை செய்ய வேண்டாம்" என்று மகிமாவை அழைத்துக்கொண்டு, நிகிலன் கிளம்பி விட்டான்.

இரவில் தூக்கமின்றி, அறையை ஒட்டியிருந்த பால்கனியில் நின்று வெளியே வெறித்தாள், மகிமா.



Uploaded by Naghu

இனி என்ன என்று மனம் குழம்பியது.

மஞ்சரியின் கொள்கை, அவள் எண்ணி வந்த பிராயசித்தம் செய்ய விடாமல் தடுத்தது.

பின்னே, ஒரு நல்ல வேலையில் அமர்ந்து அந்த வருமானத்தில் சுகமாக வாழ்வதற்காகவா வீட்டை உதறி, அவள் இங்கே வந்தாள்? இல்லையே!

பின்னே?

மஞ்சரியைப் பார்த்துப் பேசிய பிறகு, அந்தக் குடும்பத்துக்காக எதுவும் செய்யாமல் சும்மா இருப்பதே பெரும் குற்றம் போல, மகிமாவின் மனதில் பட்டது.

பொற்காலம் என்று சொல்லப்படும் விதமாக நம் நாட்டை ஆண்ட சந்திரகுப்த மௌரியரின் சட்டம் ஒன்று உண்டு. அருகில் ஓர் அழிவோ, குற்றமோ நடக்கும்போது, அதை தடுக்காமல் பார்த்துக்கொண்டு திடகாத்திரமான யாராது சும்மா இருந்தால், அவர்களுக்கும் கடுமையான தண்டனை கிடைக்குமாம்.

அப்படி ஒரு தண்டனை, அவளுக்கும் கிடைக்கப் போகிறதா?

தப்பு நடந்தபோது, அவளுக்குத் தெரியாது. தப்பின் பலனை அனுபவித்தபோதும், தெரியாதுதான்! ஆனால் தெரிந்த பிறகு, இந்தச் செய்கையற்ற நிலை, அவளுக்கு மிகவும் சஞ்சலமூட்டியது.

ஏதோ செய்தாக வேண்டும்! அது என்ன?

யோசித்தவாறே இலக்கற்று வெறித்தபோது, கீழே ஹோட்டல் வளாகத்தில் ஒளிர்ந்த தீக்கங்கு ஒன்று அவளது கவனத்தைக் கவர்ந்தது.

ஹோட்டலைச் சுற்றிலும் செடி கொடிகளும், சிறு மரங்களும் இடையே கல் இருக்கைகளுமாக, பூங்கா போல பராமரிக்கப்பட்டிருந்தது.

அங்யே யாரோ... யாரோ என்ன, நிகிலன்தான் அமர்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான் என்பது, கசிந்து வந்த விளக்கொளியில் தெரிந்தது.

தன்னைப் போல, அவனுக்கும் மனதில் உளைச்சல் போலும், தூக்கம் பிடிக்காமல், இங்கே வந்து உட்கார்ந்து சிகரெட் பிடிக்கிறான்.

நல்லவேளை! 'இம்'மென்றால் தண்ணியடிக்கிற புது நாகரீகம், இவனுக்கு இன்னும் வரவில்லை என்று எண்ணியபடி, படுக்க போனாள் மகிமா.

வேலை பார்க்கும் மகளிர் விடுதியில் மகிமாவுக்கு இடம் கிடைத்துவிட்டதாகவும், மற்ற விவரங்களை, ஓரிரு நாட்களில் அவனே நேரில் போய்ப் பார்த்துப் பேசும்படியாகவும், மறுநாள் மதிய இடைவேளையின்போது மஞ்சரி ஃபோன் செய்து சொன்னாள்.



நன்றி தெரிவித்துவிட்டு, அன்றுதான் வேலையில் சேர்ந்திருப்பதால், மறுநாள் காலை, அல்லது மதிய இடைவேளையின்போது போய்ப் பேசுவதாகத் தெரிவித்தாள் மகிமா.

அவ்வாறே செய்துவிட்டு, ஹோட்டல் அறையைக் காலி செய்வதாகச் சொல்லப் போனால், முதலாளியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிடும்படி, வரவேற்பில் தெரிவித்தார்கள்.

அவனது எச்சரிக்கை, அவள் எதிர்பார்த்ததே.

"கொள்ளிக்கட்டையில் தலையைச் சொறிகிற மாதிரி, அவர்கள் வீட்டுப் பக்கத்திலேயே அத்தை உன்னை தங்க வைக்கிறார்கள். ஆனால் ஒன்று நினைவில் வை! என் கண்காணிப்பு இருந்துகொண்டே, இருக்கும். பத்திரம், கையெழுத்து என்று ஏதாவது காதில் விழுந்தால், அப்புறம் உருப்படியாக சென்னை சென்று சேரமாட்டாய்!"

கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்தாலும், அதையும் இவன் நம்பப் போவதில்லை என்று நிச்சயமாகத் தோன்ற, அவளுக்கு நெஞ்சில் வலித்தது.

"சொத்து, என் அப்பாவின் மதிப்பீட்டின்படி, ஐநூறு கோடி ரூபாய் பெருமானம் உள்ளது. அதனால் வரும் சுகம் எதுவும் வேண்டாம் என்று வீட்டை விட்டு வெளியேறி வந்துவிட்டேன். இன்னும் நீங்கள் என்னை நம்பவில்லையே! இதற்கு மேல் என்ன செய்ய முடியும்?" என்று வருத்தமும் நிராசையுமாக கூறினாள்.

சில வினாடி நேரம் அவளையே நேராகப் பார்த்தான் அவன். பார்வையை அகற்றிக்கொண்டு, "இன்னும் ஒன்று செய்ய முடியுமா?" என்றான் சிறு குரலில்.

"என்ன? என்ன செய்ய வேண்டும். என்ன செய்தால், உங்களுக்கு என்மேல் நம்பிக்கை வரும்? சொல்லுங்கள், உடனே செய்கிறேன்!" என்று பரபரத்தாள் அவள்.

ஒரு துளி மழைத்துளியில் துளிர்க்கும் பாலைவனச் செடிகளாய், உள்ளூர மடிந்து கொண்டிருந்த உணர்வுகள் எல்லாம், ஒரு நொடியில் உயிர் பெறலாயின.

மனம் எங்கெங்கோ ஓடி, ஏதோதோ எண்ணியது.

பாவம்! அவனுக்கும் ஆசை இருக்கும்தானே?

பார்க்கப் போனால் அவன்தான், அவளைப் பார்த்த வினாடியில் இருந்தே நேசிக்கத் தொடங்கியவன். கண்டதும் காதல் என்று கதைகளில் வருவதுபோல! அதை இழக்க மனம் வராமல், ரொம்பவும் யோசித்து, ஏதோ வழி கண்டுபிடித்திருக்கிறான். நேற்றிரவில் கூட, சிகரெட் பிடித்தபடி, அதைத்தான் யோசித்திருப்பான்.



Uploaded by Naghu

கடினமானதாகத்தான் இருக்கும். அது நிச்சயம்! ஆனால், எப்படியாவது, அவன் சொல்வதை நிறைவேற்றிவிட்டால், அப்புறம் ஆனந்தத்துக்கு எல்லை ஏது?

கடவுளே... இல்லை, எல்லாம் வல்ல இறைவனே, இவன் சொல்வதை நிறைவேற்றும் சக்தியை, எனக்குக் கொடு!

மகிமாவின் நெஞ்சு அந்தக் கடவுளின் காலடியில் கிடந்து, கதறி வேண்டிக் கொண்டிருக்கையில், நிகிலன் பேசத் தொடங்கினான்.

"அத்தை என்ன சொன்னார்கள்? தப்புக்கு தீர்வு இரண்டு விதம் என்றார்களே, நினைவிருக்கிறதா? பிராயச்சித்தம், உன் தந்தை... அந்த அசுரன் செய்ய மாட்டான். அதனால் நீ நியாயத்தைப் பெரிதாக நினைப்பவள் என்றால், அவனுக்கு ஏற்ற தண்டனையைக் கொடுத்து, அனுபவிக்க வை. அந்தத் தண்டனையை, உன்னால்தான் கொடுக்க முடியும்"

கெட்டவர்தான். எண்ணிப் பார்த்தால், மகாக் கொடியவரும்தான். ஆனாலும், அவளுடைய தந்தையை, அவன், இவன் என்று நிகிலன் குறிப்பிடுவதைக் கேட்கையில், அவளுக்கு உள்ளூர வலிக்கத்தான் செய்தது.

வலியை ஒதுக்கி, அவனது பேச்சில், அவனது கவனம் சென்று சேர்ந்தது.

இவன் போகாத ஊருக்கு அல்லவா, வழி சொல்கிறான்.

வீட்டை விட்டு, வெளியேறி வந்தாயிற்று.

மஞ்சரி ஆன்ட்டி சொல்வதுபோல, அதுவே, ஒரு வகை தண்டனைதான். ஏதோ, அவளால் ஆனது.

இதற்குமேல் மகிமா என்ன செய்ய முடியும்?

சொத்தைப் பிடுங்க, வழக்குப் போடச் சொல்வானா? பயன் இராதே! எல்லாமே சுய சம்பாத்தியமாக, அவர் பெயரில் அல்லவா, இருக்கிறது. தங்கம், வெள்ளி, எல்லாம் கூட, அவர் கையில்தானே இருக்கிறது!

இந்த நிலையில், அவளால் என்ன செய்ய முடியும்?

என்ன செய்ய முடியும் என்று அவன் சொன்னான்.

தணிந்த குரலில், நிதானமாக அவன் சொன்னதைக் கேட்ட அவளது பேச்சு, மூச்சு, இதயத்துடிப்பு எல்லாமே சற்று நேரம் இயங்க மறந்து, நின்று போயின!





## தீக்குள் விரலை வைத்தேன் 14

சில வினாடியோ, நிமிஷங்களோ என்று மகிமா அறியாத சற்று நேரம், அங்கே நிசப்தம் நிலவியது.

விழித்த கண் விழித்தபடி, அவள் அசையாமல் அமர்ந்திருக்க, "என்ன பதிலையே காணோம்?" என்று நிகிலன் கேட்டான்.

பதிலா? இதற்கு பதில் வேறா?

ஆனாலும், என்ன வார்த்தை சொல்லிவிட்டான்?

அவளது ஆசைகள், கனவுகள், கற்பனைகள் அனைத்துக்கும், ஒட்டுமொத்தமாக ஒரே சமாதியாகக் கட்டிவிட்டானே!

அவளது எதிர்காலத்துக்கும் சேர்த்து!

அவளைப் பற்றி, நல்ல முறையில் அவன் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை என்று, அவளது உச்சந்தலையில் ஆணி அறைந்து, அவளுக்கு உணர்த்துகிறான்.!

நல்ல முறையா 'நல்ல' என்பதன் பக்கமே அவன் போகவில்லை, போனதில்லை!

கேவலம், கெட்டழிதல் போன்ற எதிர்மறையிலும் கடைநிலை உணர்ச்சிகள்தான், அவளிடம் நிகிலனுக்குத் தோன்றியிருந்தவை!

இப்போதும் அவளை... அவள் மூலமாக அவளுடைய தந்தையை அழிப்பதே, அவனது குறி, அர்ஜுனன் குறி!

மற்றபடி, ஒரு பெண்ணைப் பார்த்து, அவளைக் காதலித்ததாக சொன்னவன், இப்படி எப்படிக் கேட்பான்?

"பெற்ற ஒரே மகள் வீட்டைவிட்டுப் போவதைக் கூடப் பொருட்படுத்தாதவன், மகள் மானம் கெட்ட வாழ்வு வாழ மாட்டாள்... மற்றபடி ஒன்றுமில்லை என்றதாகச் சொன்னாயில்லையா? அந்த மானம் கெட்ட வாழ்வு வாழ்ந்து, அவனுக்குத் தண்டனைகொடு. பிறர் அறிய, திருமணமில்லாமல், எவனோடவாவது நீ அசிங்கமாக வாழ்ந்து காட்டுவது மட்டும்தான், அசுரனுக்கு உரிய தண்டனை. அந்தக் கேவலத்தை நீ மட்டும்தானே, அவனுக்குக் கொடுக்க முடியும்? என்ன, இந்தத் தண்டனையை, உன் தகப்பனுக்குக் கொடுப்பாயா?" என்று நிகிலனால், எப்படிக் கேட்க முடிந்தது?

ஆனால், கேட்டுவிட்டானே! பழி வாங்கும் வெறியில், அவளைப் பற்றிய எண்ணமே இல்லாமல்... அல்லது, அப்போதைக்கு மறந்து விட்டதா?



Uploaded by Naghu

"நீங்கள் சொன்னது போல வாழ்ந்தால், அப்புறம் என் வாழ்வு என்ன ஆவது, நிகிலன்?" என்று கேட்டாள்.

நினைவு படுத்தத்தான், அவள் கேட்டது. ஆனால், மறந்தவனுக்கு அல்லவோ நினைவுபடுத்த வேண்டும்?

இகழ்ச்சியாக நோக்கினான் அவன் "பெற்றோருக்கு ஏற்ற மகள். சுயநலம்தானே. தர்ம நியாயத்தைவிடப் பெரிதாகத் தெரிகிறது?" என்றான் ஏளனமாக.

சங்கபூமியைத் தேடிவந்தது, குளவிக் கூட்டத்தைத் தொட்டது போல என்று நினைத்தானே, ஆனால் அவள் தீக்குள்ளேயே அல்லவா விரலை வைத்து விட்டிருக்கிறாள்! அதுவும் எப்படிப்பட்ட தீ? விஞ்ஞான முன்னேற்றம் அடைந்த விட்ட காலமில்லையா? ஏற்றதான மின்சாரத்தீ! அவளது உடலை கருக்குவது மட்டுமின்றி, உள்ளத்தையும் கரிக்கும் முழுமையான தகனம்!

எல்லாம் ஓய்ந்து போயிற்று அவளுக்கு.

அவளுடைய தந்தைக்குத் தண்டனை கொடுப்பது மட்டும்தான் நிகிலனுக்கு முக்கியம். அதற்கு ஒரு கருவி என்பதற்கு மேலாக, அவளுக்கு மதிப்பில்லை.

அவளுடைய தந்தை செய்த பாவமும், மிகப் பெரியதே!

அதற்கு உரிய தண்டனையாகவே இருக்கலாம். ஆனால்...

சற்று யோசித்துவிட்டு "அப்படி ஓர் ஆண்மகனுக்கு எங்கே போவது?" என்று கேட்டாள் அவள்.

Uploaded by Naghu

அவனுக்கு யோசிக்கத் தேவையே இல்லை போலும், மறுவினாடியே, அவன் பதில் கேள்வி கேட்டான் "ஏன், நான் இல்லையா?" என்று!

அவள் மேலும் திகைக்கவும் "பழி வாங்க, எனக்குக் காரணமும் இருக்கிறதே!" என்று விளக்கமும் கொடுத்தான்.

பழி வாங்குவதற்காக, இந்த மாதிரி உறவா? அவனுக்கு, தயக்கமே தோன்றவில்லையே! இதுவும், திட்டத்தின் பகுதிதானா?

இரவெல்லாம் விழித்திருந்து திட்டமிட்டது, இதைத்தானா?

ஆனால்... அவள் மறுபடியும் நினைவுறுத்தினாள். "நான்தான், கெட்டவருடைய மகளான கெட்டவள். இந்தப் பழிவாங்குதலில் நான் அழிந்தால், அதுவும் நியாயமே. ஆனால், நீங்கள்? இதனால் உங்களுக்கும் பாதிப்புதானே?"

"எனக்கு என்ன பாதிப்பு?" என்றான் அவன் அலட்சியமாக, "என் பணத்துக்காகவே என்னை மணக்கப் பெண்கள் வரிசையில் வந்து நிற்பார்கள்"



"அப்படி ஒருத்தியை மணப்பதில், உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்குமா?" என்று விடாமல் கேட்டாள் அவள்.

ஆனால் "பழி வாங்குதலின் பரமசுகம், எதையும் ஈடுகட்டும்!" என்ற அடுத்த பதிலில், அவளுக்கு வாயடைத்துப் போயிற்று!

அவளது இயல்புக்கு, இது சர்வநாசமே! ஆனால் உயிர்கொல்லி என்று தெரிந்தாலும், தொட்டுவிட்ட மின்கம்பியை உதறி, விலக முடியுமா? மகிமாவாலும் முடியவில்லை.

எப்போது நிகிலனே, தண்டனையும், நிருபணமாக, இப்படி ஒரு திட்டத்தைச் சொன்னானோ, அப்புறம் அதிலிருந்து மீண்டு வாழ்வானேன்? மகிமா தீர்மானித்து விட்டாள்.

இருவருமே, இதை மறைக்க முயலவில்லை.

வெளியே தெரியத் தெரியத்தானே, பழி வாங்குதல் முழுமையாகும்?

விடுதி அறையை வேண்டாம் என்று சொல்லி, அதன் காரணத்தை அத்தையிடம் சொல்ல, நிகிலனே, மகிமாவை அழைத்துப் போனான்.

அது வரையிலுமே, ஒருசிறு நப்பாசையை மனதுள் வளர்த்துக் கொண்டே இருந்த மகிமா. அப்போதுதான் முழுதாக நம்பிக்கை இழந்தாள்.

மஞ்சரிக்கு ஒரே அதிர்ச்சி! முதலில் அவளால் நம்பக் கூட முடியவில்லை!

அவளது இயல்பான அமைதி மாறி, "என்ன மடத்தனம், இது?" என்று இருவரையும் அதட்டிப் பேசி தடுத்துப் பார்த்தாள்.

"என்ன செய்வது ஆன்ட்டி? என் தந்தையை அடக்க, வேறு வழியே தெரியவில்லை. பெரிய மகாராஜா மாதிரி நடந்து கொள்வார். திருட்டுச் சொத்தில் வளர்த்த அந்தக் கௌரவத்தில் அடி விழுந்தால்தானே, அவருக்கு உறைக்கும்? அதனால்தான்?" என்ற மகிமாவின் விளக்கத்தை, அவள் ஒப்புக் கொள்ளவில்லை.

"என்னம்மா உளறல் இது? அவரது வாழ்க்கை பாதிக்கு மேல் தாண்டிவிட்டது. அவரைத் தண்டித்தாலோ, தண்டிக்காவிட்டாலோ, பெரிதாக என்ன ஆகிவிடப் போகிறது? நீ, அப்படியல்ல! அன்றலர்ந்த மலர்! இளம்குருத்து. உன் எதிர்காலம், பிற்பாடு உன் வாழ்வு என்ன ஆகும் என்று யோசிக்க வேண்டாமா?" என்று எடுத்துச் சொல்லிப் பார்த்தாள்.

அதற்குத்தான் மகிமாவிடம் ஏற்கனவே நிகிலன், அழகான பதில் ஒன்று சொல்லியிருந்தானே!

கசந்து முறுவலுடன் "திருட்டுச் சொத்தில் வளர்ந்த உடம்புதானே,

ஆன்ட்டி? அதற்கும் தண்டனை வேண்டாமா? தொலையட்டும், விடுங்கள்" என்று மரத்த குரலில் கூறி முடித்தாள் அவள்.

"இத்தனை நாள் நான் பார்த்த நிக்கியாடா, நீ இந்தப் பைத்தியக்காரத்தனம் வேண்டாமடா!" என்று நிகிலனிடமும் வேதனையும், வருத்தமுமாகப் பேசிப் பார்த்தாள் மஞ்சரி.

ஆனால், அவன் கல்லாய் இருந்தான்.

"முதல் முறையாக அந்த ராட்சசனை ஏதோ ஒரு வகையில், திருப்பி அடிக்க வழி கிடைத்திருக்கிறது! அதை விட்டுவிட, நான் என்ன முட்டாளா?" என்றான்.

"ஒரு பெண்ணின் மூலம் பழி வாங்குவது, கோழைத்தனம், இல்லையா? நான் அறிந்த நிக்கி, இப்படி மறைந்திருந்து தாக்குகிறவன் இல்லையே! வேண்டாமடா!" என்று கெஞ்சினாள்.

"முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும், அத்தை: நம் மாமாவை, அந்த அசுரன் நேருக்கு நேர் மோதியா ஜெயித்தான்? இல்லையே! அதனால் இதுவும் தப்பில்லை" என்றான் அவன் பிடிவாதமாக.

"நிக்கி, வேண்டாம். இப்போது... குறைந்தது... ஒருவாரம் பொறுத்திருங்களேன். பா...ர்க்கலாம்" என்று மஞ்சரி ஒத்திப் போட முயன்றாள்.

"ஒரு வாரமா? ஒரு வருஷம் பொறுத்திருந்தாலும், என் அப்பாவின் மனம், மாறவே, மாறாது, ஆன்ட்டி!" என்றாள் மகிமா.

"நான் ஒன்றும் ஓர் ஆண்டுகாலம் தள்ளிப் போட்ச் சொல்லவில்லையே! ஒரே வாரம்" என்றாள் மஞ்சரி.

அவளைக் கூர்ந்து நோக்கிவிட்டு "உங்கள் விருப்பம் அத்தை" என்று விட்டு கொடுத்தான் நிகிலன்.

எந்த வித உணர்ச்சியையும் காட்டாமல், யாருக்கு வந்த விருந்தோ என்பதுபோல, உட்கார்ந்திருந்தாள், மகிமா.

மனம் விரும்பிய ஒரே மனிதன் என்றபோதும், பழிக்காக இப்படி ஒரு திட்டத்தை உருவாக்கிய அவன், அவளையும் எவ்வளவு இழிவாக கருதியிருக்க வேண்டும் என்ற தவிப்பு அவளை உள்ளூர எரித்துக்கொண்டே இருந்தது. தன்னை நிரூபிப்பதற்காக, இதற்கு ஒத்துக்கொண்டபோதும், இத்தோடு தன் வாழ்வே முடியப் போவது போன்ற உணர்வுதான் அவளுக்கு.

இந்த மனநிலையில் பாசம், பரிவு, நேரம், காலம், எதுவுமே அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. மூளையே மரத்துவிட்ட மாதிரி!



திரும்பிச் செல்லும்போது, "அத்தையின் ஒரு வாரத் தாமதத்துக்கு, நான் உடனே ஒத்துக் கொண்டது, உனக்கு வியப்பாக இருக்கும்" என்று நிகிலன் தொடங்கினான்.

"ஏதாவது காரணம் இருக்கும் என்று நினைத்தேன்" என்றாள் மகிமா, உணர்ச்சியற்ற குரலில்.

காரணமே இல்லாவிட்டாலும், எனக்கு ஒன்றுமில்லை என்றது, அவளது மனம்.!

"சரியாய் சொன்னாய்! இப்போது உன் தந்தைக்கு விஷயம் எட்டப் போகிறது! அத்தை, அவருக்குச் சொல்லப் போகிறார்கள். பார்க்கலாம். என்னவோ, மானம் என்றாரே, அது கூடப் பணத்துக்குப் பிறகுதானா, இல்லையா என்று, விரைவிலேயே தெரிந்துவிடும்"

என்னவோ தோன்றி, புரியாமலே மறைந்தது.

மஞ்சரி செல், அல்லது டெலிஃபோனில் சொல்லுவாள் என்று நினைத்ததற்கு மாறாக, நேரிலேயே கிளம்பிப் போனாள்.

அவளும் மறைத்துச் செல்லவில்லை. மகளுக்குத் துணையாக, மகிமாவையே வீட்டில் வந்து ,தங்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றாள்.

டிக்கட் கூட 'வெண்ணிலா டிராவல்ஸ்' மூலமாகத்தான்.

மஞ்சரியை நேரில் பார்த்த அதிர்ச்சியைத் தனலட்சுமியை விடவும், பராசரன் வேகமாக சமாளித்துக் கொண்டார்.

"காஃபி..." என்று மனைவி ஒதுங்கிப் போய்விட, பராசரன்தான், மஞ்சரியுடன் பேசியதே.

ஆனால், அவள் சொன்னதை நம்ப, அவர் அடியோடு மறுத்தார்.

நேரடியாக, நீ பொய் சொல்லுகிறாய் என்று கூறவில்லை. ஆனால் "என் மகள் மதிப்பும், மரியாதையுமாக, இளவரசியாக வளர்ந்தவள். சொல்லப் போனால், அளவு மீறிய, ஒழுங்கு, நேர்மை பார்க்கிறவள் அவள். அசிங்க வாழ்வு வாழ மாட்டாள்"என்று ஒரே பிடிவாதமாகச் சொன்னார்.

தப்பை ஒத்துக்கொள்ளும்படி ஆகிவிடும் என்றோ, என்னவோ, எதற்காகச் சின்னவர்கள் இதில் பிடிவாதமாய் இருக்கிறார்கள் என்று மஞ்சரி கூறியதை, அவர் காதில் வாங்கவே மறுத்தார்.

சொல்லிச் சொல்லிக் கடைசியாக அலுத்துப் போனது, மஞ்சரியே.

ஒரு வழியாகக் காஃபியோடு வந்த தனலட்சுமியைப் பார்த்து "நீங்களாவது, விஷயத்தைப் புரிந்துகொள்ளுங்கள், தனலட்சுமி. இதை, அவர்கள் மறைத்துச் செய்வதாக இல்லை என்பதில் இருந்து, உங்களைத் தண்டிப்பதுதான், அவர்கள் இருவரின் நோக்கம் என்பதைப் புரிந்து



Uploaded by Naghu

கொள்ளுங்கள். என் பேச்சை நம்பி, இந்தத் தவறை தடுக்க ஏதாவது செய்யுங்கள்" என்றவள், மற்றவள் கொண்டு வந்த காஃபியை அருந்தாமல் அங்கிருந்து கிளம்பிவிட்டாள்.

விஷயம் தெரிந்ததும், நிகிலன் அலட்சியமாகச் சிரித்தான்.

"அசுரனா, கொக்கா? சொந்த உயிரையே விட்டாலும் விடுவானே தவிர, பணம் காசை அவன் விடவே மாட்டான். இதற்குப் போய் தரம் கெட்ட, அவன் வீட்டுப் படியை, நீ....ங்கள் மிதித்தீர்களே!" என்று ஆத்திரப்பட்டான்.

அன்று தோன்றி, புரியாமல் மறைந்தது என்னவென்று, மகிமாவுக்கு இப்போது புரிந்தது.

முதல்முறையாக, பராசரனுக்கு மரியாதை பன்மை கொடுத்து பேசினான் நிகிலன்.

ஆனால், அதைக் காப்பாற்றிக் கொள்ள, அவருக்குத் தெரியவில்லையே என்று வருந்தினாள் அவள்!

ஒரேயடியாகப் பராசரன் சும்மா இருக்கவும் இல்லை.

வீட்டுக்குள் பெரியவரின் கைத்தடியாக செயல்பட்ட காலத்திலேயே வீட்டுப்பிள்ளை போல, வெளியே பந்தா காட்டுகிற பழக்கம். அன்றையப் பராசரனுக்கு உண்டு. ஒரே வயதினனான சதானந்தன் 'சின்ன எஜமானா'கவும் தன் வேலைக்கார 'அடே பயலே'யாகவும் இருந்ததை அவனால் சகிக்க முடிந்ததே இல்லை.

Uploaded by Naghu

பெரியவருக்குப் பிள்ளையாகப் பிறந்தது தவிர, சதானந்தனுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று உள்ளே எரிவான். அப்போதே, சொத்துக்காக திட்டமிட்டு கடைசியாக அதை அடையவும் செய்தான்.

ஆனால், என்னதான் சொத்தையே அடைந்துவிட்டாலும், உண்மை வாரிசுக்கு உரிய மரியாதை கிடைக்காது என்று புரிந்து, முடிந்த அளவு பணத்தைத் திரட்டிக்கொண்டு, ஊரை விட்டு வெளியேறினான்.

புது இடத்தில் பரம்பரைப் பணக்காரன் போல, புதிய அத்தியாயத்தை தொடங்கிப் பெரிய மனிதனாக வளர்ந்தான்.

ஒண்டி வளர்ந்த காலத்திலேயே 'அடிமை ராஜா' என்று பெயர் பெறும் அளவுக்கு வெளியே பகட்டுக் காட்டிய மனிதன், இப்போது, ஐநூறு கோடி சேர்த்த பிறகு, எப்படி இருப்பார்?

அதற்காகத்தான், மகளை ராஜா பரம்பரை மாதிரி வளர்த்தார். தானும் தோரணையாக வாழ்ந்தார்.

'மறைத்துச் செய்வதாக இல்லை' என்று மஞ்சரி சொன்னது, அவரைக் கலக்கியிருந்தது.

திருமணம் ஆகாமலே சேர்ந்து வாழும் புதிய கலாச்சாரம், இந்த



நாட்டிலும் பரவி வருவது, அவரும் அறிந்ததே.

ஆனால், தர்ம நியாயம் பேணும் மகள், ஒழுக்க நெறி காப்பதிலும் அப்படியே! உயிரை விடுவாளே தவிர, மகிமா தப்பு பண்ண மாட்டாள் என்பது அவருக்கு நிச்சயம்.

எனவே, மஞ்சரி சொன்னது போல, மகள் தப்பிப் போகக் கூடும் என்ற பயம்,' அவருக்குக் கடுகளவு கூட கிடையாது.

ஆனால், அவரது அச்சம் வேறு. அவரைப் போல மற்றவர் மதிப்புக்காக மகிமா எதையும் செய்வது கிடையாது.

'தன் நெஞ்சறிய பொய்யற்க' என்று, தனக்குத்தான் உண்மையாக இருக்க வேண்டும் என்பாள்.

இப்போது, தந்தையின் குற்றங்கள் பற்றி, அவளுக்குத் தெரியும். அவற்றுக்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்பதிலும் உறுதியாக இருப்பவள்.

மகளுக்குத் தந்தையின் பலவீனம் பற்றியும், தெரியும். பெரிய மனிதர் என்று அவர் வளர்த்து வைத்திருக்கும் தோற்றம் கலைவதை, அவர் தாங்க மாட்டார் என்பதை பயன்படுத்தி, அந்தப் பரிகாரத்தைச் செய்யவைக்க, மகிமா இப்போது முயற்சிக்கிறாளா என்று சந்தேகப்பட்டார் அவர்.

மகள் தப்பு வாழ்க்கை வாழ்கிறாள்., இவர் என்ன பெரிய மனிதர் என்று பேச்சு பரவினால், அவர் அதை எப்படி சகிப்பார்?

அவள் வேலைக்குப் போவதையே, இதே காரணம் சொல்லி எதிர்த்தவர் அவர்.

இப்போது இன்னும் கேவலமாக... இன்னும் என்ன, மகாக் கேவலமான ஒன்றைச் செய்வது போலக் காட்டினாள் என்றால், அப்புறம் அவரால் எப்படித் தலை நிமிர்ந்து நிற்க முடியும்?

இதுதான் மகிமாவின் ஆயுதம் என்பது அவரது ஐயம்!

சொத்து பத்துக்களை மஞ்சரியிடம் ஒப்படைக்காவிட்டால், இதுபோல அவரைக் கேவலப்படுத்தி விடுவாள்!

பெற்ற மகள் எப்படி மிரட்டுகிறாள்!

இந்த முயற்சியில் தன் சொந்த வாழ்வு பாழ்பட்டுப் போகும் என்கிற அக்கறை சிறிதேனும் இருக்கிறதா? முட்டாள்! பைத்தியக்காரப் பெண்!

கோபத்துடன் மகளுக்கு ஃபோன் செய்தார், பராசரன்.

"என்ன இது? புது தினுசான பிளாக்மெயிலா? இதற்கெல்லாம் பயந்து, நான் மசிந்து விடுவேன் என்றா எண்ணினாய்? முட்டாள்! முட்டாள்! உனக்கு அறிவே இல்லையா? உனக்கு வர இருக்கும் சொத்தை யாருக்கோ தூக்கிக் கொடுக்க, இந்தக் கிறுக்கு நாடகம்

நடிக்கிறாயே! முதலில் உன் பெயர் கெட்டுவிடாது? நாளைக்கு உன்னை எவன் கட்டுவான் என்று யோசித்தாயா?" என்று ஆத்திரம் தீர, மகளைத் திட்டினார்.

"எவனும் கட்ட வேண்டாம்" என்றாள் மகிமா சோர்வுடன்.

"சும்மா, நன்றாகவே பேசு! ஆனால் இந்த 'ஹாஹூ' நாடகத்தில் எல்லாம் ஏமாந்து சொத்தைத் தூக்கிக் கொடுப்பதற்கு, நான் முட்டாள் இல்லை! அதை நினைவில் இருத்திக்கொண்டு, உன் நாடகத்தில் அடுத்த காட்சிக்குப் போ!" என்றார் அவர் அதட்டலாக. மகள் அவரைத் திருத்தினாள்.

"இது நாடகம் அல்ல அப்பா. உண்மையாக நடக்கப் போவது. என்றைக்கோ தொடங்கியிருக்கும், மஞ்சரி ஆன்ட்டி கேட்டுக் கொண்டதால், ஒருவாரம் தள்ளிப் போயிருக்கிறது. இன்னும் சந்தேகம் இருந்தால், நாளன்று நேரிலேயே வந்து, உண்மையைத் தெரிந்துகொண்டு போங்கள்" என்று களைந்து, மரத்த குரலிலேயே கூறிப் பேச்சை முடித்தாள் பெண்.

திகைப்பும், குழப்பமுமாக, மனைவியைப் பார்த்தார் பராசரன்!

கூடவே நின்று கேட்டுக் கொண்டிருந்த தனலட்சுமி, அவரை விடவும் அதிகம் குழம்பியிருந்தாள்.

அவளுடைய மகளா இப்படி?

அழகு, பணம், அந்தஸ்து, பண்பு ஆகிய அனைத்திலும் எவ்வளவோ சிறந்தவனான சதானந்தனை இழந்து, கிட்டத்தட்ட நேர் மாறான பராசரனை மணக்க நேர்ந்தபோதும், இன்றளவும் தாலி கட்டிய கணவனின் நிழலாகவேதான், அவள் வாழ்ந்து வந்திக்கிறாள்.

அவளுடைய மகள் எந்தவிதமான சொந்த, பந்தமும் இல்லாமல், அன்னியனான ஒருவனோடு, சேர்ந்து உறவாடத் தயாராவாளா?

என்ன அனியாயம்?

அவள் வயிற்றிலே பிறந்த பெண், ஏன் இப்படிச் செய்கிறாள்?

மகிமா, தொழிலதிபர் பராசரனுடைய அன்பு மகள். ஐநூறு கோடிச் சொத்துக்கு, ஏகபோக வாரிசு! இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, அமோகமாக வாழலாம்! அதைவிட்டு, அவனுக்கு கொடு, இவனுக்குக் கொடு என்று, சொத்தை காலி செய்வதிலேயே குறியாக அல்லவா இருக்கிறாள்.

இப்படி பராசரன் குறைபடும்போது, கூடச் சேர்ந்து ஒத்து ஊதிக்கொண்டு இருந்தவள்தான்.

மகளது கூற்றில் நியாயம் இருப்பதாகத் தப்பி தவறிகூட, அவள் பராசரனிடம் காட்டிக் கொண்டது இல்லை. அப்புறம், அவள் பாடு அதோ

Uploaded by Naghu



கதியாகி விடும்.

ஆனால், முழுக்க முழுக்க அவள் மகளது கட்சியும் கிடையாது. உள்ள சொத்து முழுவதையும், அந்த மஞ்சரியிடம் தூக்கிக் கொடுப்பதிலும் அவளுக்கு உடன்பாடு கிடையாது.

இத்தனை ஆண்டுகள், கணவன் உழைத்ததற்கு கூலி வேண்டாமா? பராசரனின் உழைப்பு இல்லாமல், அந்த ஒன்றரைக் கோடி இப்படிப் பல்கி பெருகியிருக்குமா?

ஆனால் ஏதோ கொஞ்சம் சிலபல கோடிகள் கொடுத்திருக்கலாம் என்பது, அவள் ஒரு நாளும் வெளியிட்டிராத கருத்து.

ஆனால் இப்போது மகிமா செய்யும் வேலை!

எந்த வகையிலும், அதை ஒப்புக்கொள்ளத் தனலட்சுமியால், முடியவே முடியாது! கடைசி நேரத்தில் கணவன் மாறியபோதும், தாலி கட்டியவனுக்கு உண்மையாக, இன்றுவரை வாழ்ந்திருப்பவள், அவள்.

இப்படி தாலியே கட்டாமல் வாழ்வது என்றால், அதற்கு மரணமே மேல் என்று, வளர்ந்து, வாழ்ந்தவள்.

மகிமாவின் கொள்கை, கோட்பாடுகள் பற்றியும், அந்தப் பெற்றவளுக்கு நன்றாகத் தெரியும்! இதில் தாயின் கருத்துதான் மகளுக்கும்.

உயிரே பெரிதில்லை எனும்போது, எத்தனை கோடி என்றாலும், இந்தச் சொத்து எம்மாத்திரம்?

இன்றுவரை, கணவனின் பேசாத நிழலாக வாழ்ந்து வந்தவள், இன்று வாயைத் திறந்து, தன் கருத்தைச் சொன்னாள்.

அதற்குப் பரிசாக ஓங்கி ஓர் அறையையும் வாங்கிக் கொண்டாள்.

"உன் கிறுக்கு மகள், பெரிய நாடகம் நடிக்கிறாள். கூடச் சேர்ந்து நீயும் ஆடுகிறாயா? அந்தக் குடும்பத்தின் மேலே, உனக்கு அப்படி என்ன அக்கறை?"

கணவன் எங்கே வருகிறார் என்று, தனலட்சுமிக்கு புரியாமல் இல்லை. ஆனால், இதற்காகப் பார்த்துக் கொண்டிருந்தால், அருமை மகள், உள்ளூர அழிந்து போவாள்.

இந்த எண்ணம் அவளுக்கு துணிவைத் தந்தது.

"இது. நாடகம் அல்ல. உங்களைத் திருத்துவதற்காக, அது முடியாவிட்டால் தண்டிப்பதற்காக. இப்போது அவள், தன்னை பலி கொடுக்கிறாள்! இதை, எப்படியும் தடுத்தாக வேண்டும். மனைவி மகளை விட, உங்களுக்குப் பணம் பெரிதாக இருக்கலாம். ஆனால், இதைத் தொடர்ந்து வரப் போகும் அவமானத்தை விடவுமா, உங்களுக்குச் சொத்தும் பணமும் பெரிது! அப்போது உங்கள் பெரிய

மனிதப் போர்வை பறந்துவிடுமே, எங்கே போய், எப்படி முகத்தை மறைத்துக் கொள்ளப் போகிறீர்கள்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

நிகிலனுக்கு, சகல வசதிகளுடன் கூடிய பெரிய ஃப்ளாட்' ஒன்று, கோவையில் இருந்தது.

ஒரு முதலீடு என்கிற முறையிலும், நிகிலன் திருமணமான பிறகு வசிப்பதற்காகவும், என்று வாங்கப்பட்டது.

நிகிலனுடைய பெற்றோர் சொந்தக் கிராமத்தில் இருக்க, பெரும்பாலும் அவன் ஹோட்டலிலேயே தங்கிவிடுவது வழக்கம்.

அவ்வப்போது தேவைப்படும்போது, ஆள் அனுப்பி சுத்தப்படுத்தி வைப்பான்.

தாயோ, தந்தையோ எப்போதேனும் கோவைக்கு வந்து, இங்கே தங்கியிருந்து, மஞ்சரி, வெண்ணிலாவைப் பார்த்துவிட்டு, மகனிடம் கல்யாணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தி பேசி, பலனின்றித் திரும்பிப் போவார்கள்.

தன் பழிவாங்கு படலத்தின் களமாக, நிகிலன், இந்த வீட்டைத்தான் நிச்சயித்திருந்தான்.

நகரின் பணக்காரப் பகுதி என்பதால், பத்திரிகைக்காரர்களின் கவனம், அங்கே அதிகம் இருக்கும்!

அவனது பழி தீர்வதற்கு, அதுவும் அவசியம்தானே?

மஞ்சரி எவ்வளவோ தடுத்தும் இருவருமே அதைக் கேட்கவில்லை.

"அம்மா, அப்பாவை இதில் இழுக்காதீர்கள்" என்று நிகிலன் கூறியிருந்தான். அத்தோடு மஞ்சரிக்குமே, அதில் விருப்பம் இல்லை. நூற்றில் ஒரு வாய்ப்பாக, ஒருவேளை, அவளது கருத்து நிறைவேறினால், அவர்கள், இதை அறியக் கூடாதுதான். இல்லாவிட்டாலும், அப்படியே!

வருவதும் வராததும் உன் விருப்பம் என்பது போல, முகவரியை மகிமாவிடம் கொடுத்துவிட்டு, நிகிலன் முன்னதாக அங்கே போய்விட்டான்.

இருள் வேகமாகப் பரவி வருகையில், மகிமா, அங்கே போய்ச் சேர்ந்தாள்.

சுற்று மதில் கேட்டுக்கு வெளியிலேயே டாக்சியை அனுப்பிவிட்டு, காரோடும் பாதை, சிறுவர்கள் விளையாடும் தோட்டப் பகுதி எல்லாம் மெதுவே நடந்தே கடந்து, மகிமா, நிகிலனின் இடத்துக்குச் சென்றாள்.

அங்கேயும் எதிர் வீட்டின் கதவைத் தட்டி "நிகிலன் வந்தாயிற்றா?" என்று விசாரித்துவிட்டே, அவனது ஃப்ளாட்டுக்குள்ளும் போனாள்.

முன் அறையிலேயே நின்று, கவனித்துக் கொண்டிருந்தான்



போலும்.

திறந்திருந்த கதவின் வழியே, மகிமா உள்ளே சென்றதும் "அவர்களிடம் நீ கேட்டிருக்க வேண்டியதில்லை" என்றான், சிறு முகச் சுளிப்புடன்.

"ஏன்? எங்கள் குடும்பத்து அவமானம், எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதுதானே, உங்கள் விருப்பம்? செய்தேன்!" என்றாள் அவள்.

நிமிர்வோடு சொல்லத்தான் அவள் விரும்பினாள். ஆனால் அவள் என்னதான் முயன்றாலும், மனதின் பிரதிபலிப்பாக குரல் சோர்ந்தது.

யாரோ திரும்பிப் பார்த்தபடி செல்வது தெரிய, சட்டென விளக்கை அணைத்தான் அவன்.

"எதற்கு?" என்று விளக்கை மறுபடியும் போட்டாள் மகிமா. "நாம் இங்கிருப்பது உறுதியானால்தானே, உங்கள் பழிவாங்கல் முழுமையாகும்?"

வாயிற்புறமாக சென்று, அங்கே தான் இருப்பதைக் காட்டிக்கொண்டு, கதவை மூடினாள்.

பிடிவாதமான காலடிகளுடன் வந்த, நிகிலனின் கையில் தன் கையை வைத்தாள்.

கையை அழுத்தமாக பற்றியவன், லேசாகக் குனிந்து, அந்தக் கையில் முத்தமிட்டான்.

மகிமாவின் உடல் குலுங்குவது, வெளிப்படையாகத் தெரிந்தது.

பற்றிய கையை விடாமலேயே அவளது தலையைத் தன் தோளில் சாய்த்து சற்று நேரம் அசையாமல் நின்றான்.

மகிமாவின் படபடப்பு மெல்ல குறைந்து, மறையும்வரை, அப்படியே நின்றவன், அப்போதும் கையை விடாமலே "வா போவோம்" என்று வாயிலை நோக்கி நடந்தான்.

ஏதோ புரிந்தும், புரியாமலும் ஜாலம் செய்ய, அவன் தோளில் சாய்ந்தவாறே, அவளும் நடந்தாள்.

நிகிலன் கதவைத் திறக்கையில், கதவைத் தட்டுவதற்குக் கையை தூக்கியவாறு, அங்கே மஞ்சரி நின்றாள்.

"பழி, கிழி எல்லாம் வேண்டாப்பா. மகியை என்னோடு அனுப்பிவிடு ப்ளீஸ்" என்று தணிந்த குரலில் வேண்டினாள் அவள்.

லேசாக முறுவலித்தான் நிகிலன்.

"நானும் அதே முடிவுக்கு வந்து, உங்கள் வீட்டுக்கு இவளைக் கூட்டி வரத்தான், வெளியே வந்து கொண்டு இருந்தேன்" என்றான் அவன்.

மனம் தெளிய, தலை தூக்கி, அவனைப் பார்த்தாள் மகிமா.



Uploaded by Naghu

"உண்மை, கண்மணி. கடைசிவரை நீ பின்னடிக்கிறாயா என்று பார்த்தேன். சிறு வயதில் இருந்து, உன் தந்தையை வெறுத்தே வந்திருந்த எனக்கு, முழுமையான தெளிவு வேண்டியிருந்தது. அது இல்லாமல் உன்னை மணந்தால், சின்னச் சின்ன விஷயங்களில் கூட 'அவர் மகள்தானே, இப்படித்தான் இருப்பாள்' என்று தோன்றி, நம் வாழ்வே நரகமாகிவிடக் கூடும். ஒழுக்கத்தில் உன் பிடிப்பு, ஏற்கனவே நான் அறிந்தது. எனவே, என் தெளிவுக்கு இந்த வழியை பயன்படுத்தினேன். ஆனால், நீ சேற்றில் மலர்ந்தசெந்தாமரை, என்று சென்னியில் அறைந்த மாதிரி நிரூபித்துவிட்டாய். இப்போது இவ்வளவு இறங்கினோமே என்று நான்தான், உன்னை அண்ணாந்து பார்த்துக் கேட்க வேண்டியிருக்கிறது! சொல்லும்மா... இந்தப் பிரச்சினையை நான் கையாண்ட விதத்தில், நீ என்னை வெறுத்து விடவில்லையே!" என்றபோது, அவன் குரலில் சிறு கலக்கம் எட்டிப் பார்த்தது.

விழி விரித்தாள் அவள் "உங்களை, நான் வெறுப்பதா? எப்படி முடியும்? என்று தலை சரித்து மகிமா கேட்டபோது, அவளது முத்துப் பற்கள் மின்னலிட்டன.

"அடடா!" என்று வருத்தம் காட்டினான் நிகிலன். "அவசரப்பட்டு, வெளியே கூட்டி வந்துவிட்டேனே! இதற்கு சரியான பதிலைத் தனிமையில்தானே, கொடுக்க முடியும்!" என்று அவன் கண்ணடிக்க, அவள் முகம் சிவந்தது.

ரசனையுடன் பார்த்தவாறே "எதற்கும்... அத்தை, நீங்கள் முன்னே போய்க்கொண்டே இருக்கிறீர்களா! இவளுக்கு நிறையச் சந்தேகங்கள் இருக்கின்றனவாம். கொஞ்சமேனும் தெளிவித்துவிட்டுப் பின்னோடேயே சற்று நேரத்தில் வருகிறோம்!" என்று நகைத்தான் அவன்.

என்ன மாதிரி சிரிப்பு! எந்த விதமான இறுக்கமும் இல்லாமல், உற்சாகமும், உல்லாசமுமாக!

மகிமாவுக்கே அவனோடு சற்று நேரம் தனியாக இருக்க வேண்டும் போலத் தோன்றியது.

ஆனால் "டேய்..." என்று ஆள்காட்டி விரலால் பத்திரம் காட்டிய மஞ்சரி வேறு சொன்னாள்.

"நான் ஒரு தலைமுறை முந்தியவளாக இருக்கலாம்ப்பா! ஆனால் உன் பதில் கொடுப்பதை எல்லாம், உங்கள் திருமணத்திற்கு பிறகு வைத்துக் கொள்ளுங்கள். இப்போது எங்கள் இருவரையும் அனுப்பி வை" என்றவள். "அப்பா..." என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"என்ன அத்தை?, "என்ன ஆன்ட்டி?" என்று இருவரும்



கவலையோடு கேட்கவும், "ஒன்றுமில்லை. பயங்கரமான மன இறுக்கத்துடன் வந்தேனா? பிரச்சினை இலகுவாகத் தீர்ந்ததும் 'அப்பாடா...' என்று ஒரு விதமாய் வெலவெலப்பாக இருக்கிறது. இங்கே காஃபி, டீ ஏதாவது இருக்கிறதா? இல்லாவிட்டால், கொஞ்சம் தண்ணீராவது கொடு. குடித்துவிட்டு கிளம்புகிறோம்"

"நிஜமாகவே ஒன்றுமில்லையே அத்தை?" என்று கேட்டுத் தெரிந்துகொண்டு, வெளியே போய், யாரையோ அழைத்து, சற்று இனிப்பு அதிகமாய் மூன்று கப் டீ வாங்கி வரச் சொன்னான் நிகிலன்.

வீட்டில் உண்ண குடிக்க என்று எதுவும் இல்லாதது, அவனை இன்னமும் தெளிவுபடுத்த, பெண்கள் இருவரும் மகிழ்ச்சியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பார்த்துக்கொண்டே உள்ளே வந்து "என்ன பெண்கள் கூட்டணியா? மைனாரிட்டுக்கு ஏதாவது சலுகைகள் உண்டா?" என்று நிகிலன் கேட்க, "ஓ உண்டே. அடி வாங்கும்போது கைகளைப் பின்னால் கட்டிக் கொள்வதற்குப் பதிலாகத் தொங்கப் போட்டுக் கொண்டு வாங்கலாம்." என்று மஞ்சரி கூற, "ஆனாலும் இவ்வளவு பெரிய சலுகையா? அண்ணன் மகன் என்பதால், ரொம்பத்தான் விட்டுக் கொடுக்கிறீர்கள் ஆன்ட்டி" என்று மகிமா குறைப்பட, சற்று நேரம் அங்கே ஒரே கலகலப்பாக இருந்தது.

கவனத்துடன் மஞ்சரியோ, நிகிலனோ, பராசரன் பற்றிப் பேசவே இல்லை.

விரைவிலேயே, நிலா வீட்டில் தனியாக இருப்பாள் என்று, பெண்கள் இருவருமே கிளம்பினர்.

கூட்டிப் போய் விடுவதாக கூறி, நிகிலனும் உடன் நடந்தான்.

வாயிலருகே வந்தபோது வெளியே பேச்சுக் குரல் கேட்க, மகிமா விறைத்தாள்.

"ஆன்ட்டி, நீங்கள் இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது" என்று அவள் எச்சரித்து முடிக்கும்போது "இந்த வீடுதான்" என்று, பராசரனும் தனலட்சுமியும் வந்துவிட்டார்கள்.

அவர்கள் உள்ளே வர வழிவிட்டு, விலகி நின்றான் நிகிலன்.

அதையே முகத்தில் அடித்தாற்போல உணர்ந்து, தரையை பார்த்தார் பராசரன்.

சிவந்து வீங்கிய முகத்துடன் "இருபது ஆண்டுகளாகப் பெரிய மனிதனாக வாழ்ந்து பழகிவிட்டார். விட முடியவில்லை. எங்களை அடிப்பதற்காக உன் வாழ்வை அழிப்பாயா?" என்று கண்ணீர் வழியக் கேட்டாள் தனலட்சுமி.



Uploaded by Naghu

"என்ன செய்வது? திருட்டுப் பணத்தில் வளர்ந்த உடம்பு இது. உருப்பட்டுவிடுமா? வாய்ப்பே கிடையாது!" என்று சற்று அசைந்த நிகிலனிடன் கையைப் பற்றி, அழுத்தி அடக்கியவாறு மகிமா பதிலிறுத்தாள்.

தனலட்சுமி வாயைப் பொத்திக்கொண்டு அழ, பராசரன் மஞ்சரியிடம் சென்றார். "நான் மன்னிப்புக் கேட்க வேண்டியது, உங்களிடம்தான். நூறு மடங்குக்கும் அதிகமாக பெருக்கி வைத்திருக்கிறேன். உழைப்புக்குக் கூலி போல, ஓய்ந்த காலத்தில் கொஞ்சம் வைத்துக்கொண்டு, மற்றது, முழுவதும் கொடுத்து விடுகிறேன். பிச்சை எடுத்தாலும் தகும்! ஆனால் அந்த அளவுக்கு இறங்க முடியவில்லை. மன்னிக்க வேண்டும், தாயே! இதோ வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். வைத்துக்கொண்டு, என் மகளை காப்பாற்றுங்கள், சின்னம்மா!" என்று பராசரன் பேசிய விதத்தில் எல்லோரும் அதிர்ந்து போயினர்.

"சின்னம்மா இல்லை. பிள்ளை போல வளர்ப்பதாகச் சொல்லி, சொத்து பத்தில் உரிமை கிடையாது என்று, மாமா உங்களுக்குத் தவறு செய்ததாக, சதா கூறுவார். அப்படிக் கொடுத்திருந்தால், உங்களுக்குத் தப்பான எண்ணமே தோன்றியிருக்காதாம், நிலாவுக்கு சித்தப்பாவாக, ஒரு மைத்துனராகச் சம உரிமையோடு இருங்கள்" என்றவளின் காலிலேயே விழுந்துவிட்டார் அவர்.

Uploaded by Naghu

பெரியவர்கள் மூவருமாகப் பேசி கொண்டிருந்தனர்.

"இன்னும் ஒரு 'ரவுண்ட்' இனிப்பு டீ கொண்டு வரச்சொல்லட்டுமா? எல்லோருக்குமே அதிர்ச்சிக்கு வைத்தியம் முக்கியமாக மாமனாருக்கு!" என்று மன்னிப்பை காட்டிய நிகிலனை, மையலுடன் நோக்கினாள் மகிமா.

"ஹே, அடக்கி வாசி பெண்ணே. அப்புறம், திருமண நாள் வரை காத்திருக்க முடியாமல் போகும், ஜாக்கிரதை!" என்று அவன் போலியாக மிரட்ட அவள் கலகலவென்று சிரித்தாள்.

**முற்றும்**

Owned Published Edited and Printed by SP.RAMU, Published at 6/84, Mallan Ponnappan Street, Triplicane, Chennai - 600 005. Phone: 2844 0617, 2848 3163. Telefax: 2848 0610. Printed at Sri Parameswari Printers & Binders, 9, Swami Aachari Street, Pudupakkam, Chennai - 600 016. Editors: SP.RAMU, Editor incharge: Bharathi. E-mail: vivekpublications@usa.net.